# கண்ணன்

## தீபாவளி மலர்

1959



ரூ.1/-

மகிழ்ச்சி மிகுந்த
தீபாவளியை முன்னிட்டு
எங்களுடைய வாழ்த்துக்கள்.






உங்களுடைய விசேஷ
விருப்பத்துக்கு ஏற்ற சிறந்த
கைக் கடிகாரஸ்ட்ராப்புகள்
எங்களிடம் கிடைக்கும்.

ராக்ஸி வாட்ச் கம்பெனி
120 121, தேவராஜ முதலி தெரு, சென்னை-3.

84203

JL
O31n211N50KN
N59

ஐரிஸ் இங்க்

RESEARCH CHEMICAL LABORATORIES
MADRAS-4 · BANGALORE-3

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
11 NOV 1959
MADRAS






# பொருளடக்கம்



மலர்: 10

இதழ்: 21


| | பக்கம் |
|---|---|
| குழந்தைகளே! | 4 |
| கண்ணன் நினைவு - ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள் - காமகோடிபீடம் | 5 |
| முருகன் பணம் - கி. வா. ஜகந்நாதன் | 6 |
| சின்ன விதை - மு. வரதராசன் | 10 |
| சந்திரனில் தமிழன் - தி. ஜ. ர | 13 |
| காகிதக் கப்பல் - 'தமிழ் ஒளி' | 16 |
| சின்னமணி - பட்டு | 17 |
| அநாதை - கி. சரஸ்வதி அம்மாள் | 18 |
| இந்தாப் பாட்டி, இல்லைப் பாட்டி - பெ. தூரன் | 23 |
| இன்பத் தமிழ் - ந. சஞ்சீவி | 27 |
| அழகுத் தெய்வம் - என். எஸ். சிதம்பரம் | 28 |
| தீபவழி - கோவி. மணிசேகரன் | 29 |
| காவல்காரர் - அழ. வள்ளியப்பா | 30 |
| எங்கள் பாட்டி - சசிதேவன் | 32 |
| இந்துஸ்தான் கப்பல் தளம் - ஆர்வி | 34 |
| திறமையின் சிறப்பு - பூவண்ணன் | 39 |
| 10 கட்டளைகள் - லெமன் | 40 |
| நீலவேணி - 'ஜஞ'; சித்திரம்: பாபு | 41 |
| பரிசு பெற்ற மூவண்ணப் படங்கள் | .. |
| பொழுதுபோக்கு - புலியும் மனிதனும் | 49 |
| போட்டோ க்விஸ் - என். ராமகிருஷ்ணு | 50 |
| சித்திரக் கட்டம் - க. திருநாவுக்கரசு | 58 |








| | |
|---|---|
| ஓடும் ரெயிலில் | 54 |
| கோழி போன வழி - 'ரகமி' | 57 |
| இது என்ன ஆட்டம்? | 58 |
| புள்ளி சேர்த்துப் பாருங்கள் | 60 |
| வெட்டி ஒட்டிப் பார் - 'கேசன்' | 61 |
| விடுகதைப் பாடல்கள் - 'ஜோதி மாமா' | 62 |
| பொழுதுபோக்கு - விடைகள் | 64 |
| பீங்கான் கோப்பை - சீதாதேவி | 65 |
| காட்டிக் கொடுத்த கட்டு - தே. பார்த்தசாரதி | 70 |
| காட்டில் பொருட்காட்சி | .. |
| அணில் செய்த வேலை - 'ஸேனு' | 76 |
| நடந்தது - ரேவதி | 79 |
| அண்ணனும் தங்கையும் - 'சரஸ்வதி' | 80 |
| சேஷுவின் வேஷம் - நீலம் | 81 |
| வெடி மருந்து - ப. ரா. | 86 |
| திருட்டு எலிகள் - 'ராஜி' | 92 |
| கதைச் செல்வர் - தம்பி சீனிவாசன் | 97 |
| திருட்டு - கே. சுந்தரேசன் | 103 |
| ஊர்வலம் - ஜோதிர்லதா கிரிஜா | 108 |
| முன்னு - எஸ். விசுவநாதன் | 113 |
| சோபப் பிரகாசன் - சங்கரசுப்பு | 118 |
| கைக்கு எட்டியது - 'நடனு' | 124 |


புகைப் படங்கள்: என். ராமகிருஷ்ணு, வி. கே. சர்மா, புஷ்பத்துறை சுப்பிரமணியம், குருமூர்த்தி' மகாதேவன்.

ஓவியர்கள்: ஸாமி, மகான், சுசி, சுப்பு, உமாபதி, ரெஸாக், ஸாகர், பாபு, சிமா, ஜயன், மாலா, நடனம், சுதர்சன், வைரம்.

அட்டைப் படம்: ஸாமி





# குழந்தைகளே!

ஆண்டு தோறும் உள்ளத்திலும் உருவத்திலும் நீங்கள் வளர்ச்சி பெற்று வருவதுபோலவே கண்ணன் மலரும் புதுப் புது மணத்துடன், எழில் வர்ணப் பொலிவுடன் உங்கள் கரங்களிலே தவழுகிறது.

தீபாவளித் திருநாளை, தமிழகத்துக் குழந்தைகள் ஒரு படி சிறப்பாகவே கொண்டாடுகிறார்கள். அந்தச் சிறப்புக்குக் கண்ணன் மலரும் ஒரு காரணமாக இருக்கிறது.

கண்ணன் நேயர்கள் பெரிய பாக்கியசாலிகள். அறிஞர்களும் பிரபல எழுத்தாளர்களும், ஓவியர்களும் புகைப்பட நிபுணர்களும், கவிஞர்களும் இளம் கலைஞர்களும் இந்த மலரை மணமுள்ள நறுமலராக, அதுவும் வாடாத மலராகச் செய்து தந்திருக்கிறார்கள்,

காஞ்சி காமகோடி பீடத்து இளைய சுவாமிகள் இளமைப் பருவத்திலேயே கண்ணன் நினைவு நமக்கெல்லாம் பதிய வேண்டும் என்று தொடங்குகிறார்கள். கி. வா. ஜ., மு. வரதராசன், தி. ஜ. ர., தூரன் முதலியோர் கருத்தமைந்த கதைகள் சொல்லிக் களிப்பில் ஆழ்த்துகிறார்கள்.

பிரபல எழுத்தாளர்கள் கி. சரஸ்வதி அம்மாள், ராஜி, ப. ரா., சங்கரசுப்பு, நீலம் முதலியோர் உள்ளத்தை மகிழ்விக்கும் கற்பனைகளை வழங்கி இன்பத்தை ஊட்டுகிறார்கள்.

இன்னும் தமிழ் நாட்டின் முன்னணியில் இருக்கும் குழந்தைக் கவிஞர்கள் பலர் எழில் சிறக்கும் பாடல்களைச் சிந்தை குளிரும் வண்ணம் படைத்துத் தந்திருக்கிறார்கள்.

காட்டில் பொருட்காட்சி என்ற விளையாட்டுக் கட்டம் பொழுதுபோக்குக்கு உகந்த பகுதியாக மலரை அணி செய்கிறது. மேலும் பதினைந்து பக்கங்கள் வேடிக்கைகளும் புதிர்களும் கண்ணனுக்குத் தனிச் சிறப்பைத் தருகின்றன.

கண்ணன் சித்திரப் போட்டியில் பரிசுபெற்ற ஐந்து மூவர்ணப் படங்களும் எட்டுப் பக்கச் சித்திரக் கதை ஒன்றும் நம் உள்ளத்தைக் கவர்கின்றன.

அட்டைப் படத்தில் ராஜகுமாரி ஒருத்தியைப் பல்லக்கில் சுமந்து செல்லும் பண்டை நாகரிகக் காட்சி ஒன்றைத் தத்ரூபமாகச் சித்திரித்திருக்கிறார் ஓவியக் கலைஞர் ஸாமி.

கண்ணன் மலர் கண்ணேபோல் போற்றிக் காக்க வேண்டிய பொன் மலர் என்று முன்பு ஓர் அறிஞர் புகழ்ந்து எழுதினார். அதன்படியே உருவாக்குவதற்கு இயன்றதையெல்லாம் கண்ணன் செய்து வருகிறான். கண்ணனுடைய இந்தச் சீரிய முயற்சிக்கு உதவிகள் செய்து, ஒத்துழைப்பு நல்கிய அறிஞர், கவிஞர், ஓவியர் அனைவருக்கும் கண்ணனின் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன். இதற்கெல்லாம் ஆதாரமாகவும் ஆதரவாகவும் இருந்துவரும் நேயர்களாகிய உங்களுக்கும் ஆயிரமாயிரம் ஆசிகள் கூறி வாழ்த்துகிறேன்.

—ஆசிரியர்.



காட்டில்
பொருட்காட்சி
பஸ் வழி 6 போட்டால் பஸ் கிடைக்கும்
கயிற்றுவழி 4 கட்டம் முன்னே ஓடு
மின்சார ரயில். ஒரு ஆட்டம் அதிகம்
சினிமா பார்த்ததால் ௨ ஆட்டம் போச்சு
சினிமா அரங்கு
தடை பாதை. ஒன்றுபோட்டால் தான் வழி
ஐஸ் கிரீம் சாப்பிட்டு 8 கட்டம் முன்னே போ
ஐஸ் கிரீம் ஹால்
தலை சுற்றும் 10 கட்டம் பின்னால் போ
மரணக் கிணறு
பாலத்தில் ஏறி 5 கட்டம் முன்னே போ
படகுத்துறை
படகிலிருந்து விழுந்ததால் 30 கட்டம் பின்னால் போ
சர்க்கஸ்
தொங்குபாலம்
செங்கோட்டை வழி
விசாரித்துப் போக. ஒரு கட்டம் முன்னே போ.
தொங்கு பாலத்தில் ஏறி 6 கட்டம் முன்னே போ
குடை ராட்டினம்
குடை ராட்டினம் சுற்றி ௨ ஆட்டம் போச்சு
இளைப்பாறிவிட்டு 3 போட்டால் தான் ஜெயம்
ஜிப்பி வாசல்
உள்ளே போகும் வழி
வெளியே போகும் வழி

# விளையாடும் முறை

இதை ஒரே சமயத்தில் நாலு பேர் வரையில் ஆடலாம். ஆளுக்கு ஒரு காய் சோழி, குன்றிமணி என்று வைத்துக்கொள்ள வேண்டும். உருட்டும் காயாகத் தாயக் கட்டையை வைத்துக்கொண்டு ஆடலாம். முதலில் போகும் வழியிலிருந்து தொடங்க வேண்டும். தாயக் கட்டையில் எவ்வளவு எண்ணிக்கை விழுகிறதோ, அவ்வளவு கட்டம் எண்ணிக் காயை வைத்துக்கொண்டு போகவேண்டும். காய் எங்கே போய் நிற்கிறதோ, அந்தக் கட்டத்தில் குறிப்பு ஒன்றும் இல்லையானல் சரிதான். ஆனல் ஏதாவது குறிப்புத் தென்பட்டால், அந்தக் கட்டத்தில் எழுதியிருக்கிறபடி முன்னேயோ, பின்னேயோ காயை நகர்த்திச் செல்ல வேண்டும். கடைசியில் யார் முதலில் வெளியில் வருகிறார்களோ, அவர்களே வெற்றி பெற்றவர்கள். கடைசியாக வருபவரே தோற்றவர்.

# கண்ணன் நினைவு

## ஸ்ரீ ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்

### காமகோடி பீடம்

பிள்ளைகளுக்கெல்லாம் பெரிய பிள்ளை, பிள்ளையார் என்பது போல், குழந்தைகளுக்கெல்லாம் பெரிய குழந்தையாக விளங்குபவர் கண்ணன். குழந்தைகள் வாக்கில் எது வருகிறதோ, அது அமிருதமாக இருக்கிறது நமக்கு. குழந்தைப் பருவத்தில் எது மனத்தில் பதிந்து விடுகிறதோ, அது கடைசி வரையில் மறப்பதில்லை. குழந்தைகளாக இருக்கும்போது உள்ளம் எவ்வளவு சுத்தமாக இருக்கிறதோ அப்படி மற்றப் பருவங்களில் பெரும்பாலும் இருப்பதில்லை. ஏதோ ஒரு சிலர் மட்டும் குழந்தையுள்ளம் படைத்தவர்களாக இருக்கிறார்கள். அவர்களைக் குழந்தைபோல் கள்ளம் கபடமற்றவர்கள் என்று நாம் குறிப்பிடுகிறோம்.

துருவன், பிரகலாதன் ஆகியோர் குழந்தைப் பருவத்திலேயே ஆண்டவனிடத்தில் பக்தி செலுத்தி, அவருடைய அருளைப் பெற்றுச் சிரஞ்சீவிகளாகப் புகழோடு விளங்கினார்கள். ஞானசம்பந்தர், சண்டேசர் போன்ற நாயன்மார்கள் ஆண்டவனிடம் பக்தி பூண்டு, அவரை நேரில் கண்டு பேரானந்தம் அடைந்தார்கள்.

உலகில் எத்தனையோ பண்டிகைகளைக் கொண்டாடினாலும் தீபாவளியை நம் நாட்டின் எல்லாப் பாகங்களிலும் சிறப்பாகக் கொண்டாடுகிறார்கள், காரணம் குழந்தையுள்ளம் படைத்த பெரும் குழந்தையான கண்ணனால் ஆரம்பிக்கப் பட்டது என்பதால்தான். இன்றும் நாம் அந்தக் குழந்தையுள்ளத்துடன் பெரியோர், சிறியோர் என்ற பேதமின்றி இந்தப் பெரும் பண்டிகையைக் கொண்டாடி வருகிறோம்.



இந்தக் கண்ணன் மூலமாக, கோகுலத்தில் வளர்ந்த கண்ணன் நினைவு வருகிறபடியால், அந்தக் கண்ணபிரானின் அருளைப் பெற்று அனைவரும் ஆனந்தத்தைப் பெறுவோம்.

# முருகன் பணம்

கி. வா. ஜகந்நாதன்

முருகன் திருக்கோயிலில் அடிக்கடி ஏதாவது சொற்பொழிவு நடந்து கொண்டே இருக்கும். இராமாயணமோ, கந்த புராணமோ, பெரிய புராணமோ தொடர்ந்து ஒரு மாதம், இரண்டு மாதம் நடைபெறுவதும் உண்டு. கோயில் தர்மகர்த்தர் மிகவும் கெட்டிக்காரரர். எப்போதும் கோயிலில் ஜனங்கள் நடமாட்டம் இருக்கவேண்டும் என்பது அவர் ஆசை. அதற்காக யாரையாவது பேசக் கொண்டு வந்துவிடுவார். பெரிய மனிதர்களை அழைத்துத் தலைமை வகிக்கச் செய்வார்.

கோயில் இருந்த இடம் கல்வி அறிவுள்ளவர்கள் அதிகமாக வசிக்கும் இடம் அன்று. அதைப் புனிதமாக்க வேண்டும் என்பதும் தர்மகர்த்தாவின் எண்ணம். அவர் விருப்பம் நிறைவேறி வந்தது.

கதா காலக்ஷேபம் ஆனாலும், சொற்பொழிவானாலும் முக்கால் வாசிக் கதை நடைபெறும்போது



சுவாமிக்குத் தீபாராதனை செய்து இரண்டு பெரிய தட்டுக்களை எடுக்கச் செய்வார் தர்மகர்த்தர். பெண்கள் பக்கம் ஒரு தட்டும், ஆண்கள் பக்கம் ஒரு தட்டும் போகும். அவரவர்கள் காலணுவோ நாலணுவோ போடுவார்கள். இப்படிச் சேரும் பணத்தைத் தொகுத்துப் பிரசங்க வரிசை முடியும்போது சில செல்வர்கள் தரும் பரிசையும் சேர்த்து வித்துவானுக்குச் சம்மானம் செய்வார். விளக்கு, விளம்பரம், ஒலி பெருக்கி ஆகியவற்றுக்கு ஆகும் செலவை மட்டும் அந்தப் பணத்தில் எடுத்துக் கொண்டு கணக்குக்காட்டிவிடுவார்.

கதாகாலக்ஷேபத்துக்கு வரவரக் கூட்டம் அதிகமாயிற்று, ஆனால் தட்டில் மட்டும் அதற்குத் தக்கபடி பணம் சேரவில்லை. வசூல் குறிப்பிட்ட தொகைக்குக் குறைவாக இருந்தால் கோயில் வரும்படியிலிருந்து போடும்படி இருக்கும்.

கந்தபுராணத்தை நன்றாகச் சொல்லும் விரிவுரையாளர் ஒருவரைத் தர்மகர்த்தர் நாடி ஒரு மாதம் விரிவுரைக்கு ஏற்பாடு செய்தார். அவர் இளைஞர். "எனக்கு முந்நூறு ரூபாய் தரவேண்டும்'' என்றார் அவர். அவர் பெயர் சிவகுமாரன். "தருகிறோம்; மேலே வந்தாலும் உங்களுக்கே கொடுத்து விடுகிறோம்'' என்றார் தர்மகர்த்தர். கந்த புராணப் பிரசங்க ஆரம்பத்துக்கு நாள் குறித்தாயிற்று.



தெரிந்தால், சொல்லுங்கள்!



அண்ணனை விடத் தம்பி மூத்தவனாக இருக்கமுடியுமா?

தர்மகர்த்தர், 'இவர் இந்தக் கோயிலுக்குப் புதியவர்; இளைஞராக வேறு இருக்கிறார். இயல்பாகவே காலணாவும் நயா பைசாக்களுமே அதிகமாகப் போடும் கூட்டம் வந்தால் என்ன செய்வது?' என்று எண்ணினார். அவருடைய நண்பர் ஒருவர், ''இவருக்கு எத்தனை சம்மானம் செய்வதாகப் பேச்சு?'' என்று கேட்டபோது, ''ஆயிர ரூபாய் செய்யலாமென்று நினைக்கிறேன்'' என்றார். ''ஆயிர ரூபாயா? இந்த வெற்றுக்கூட்டத்தை நம்பி இப்படி ஏற்பாடு செய்யலாமா?'' என்று அவர் கேட்டார். 'எல்லாம் முருகன் இருக்கிறான்; பார்த்துக் கொள்கிறான்'' என்றார் தர்மகர்த்தர்.

கந்தபுராணப் பிரசங்கம் ஆரம்பமாயிற்று. முதல் நாள் தலைமை தாங்கிய மந்திரி அன்று ஒரு மணி நேரம் வெளுத்துக் கட்டினார். முந்நூறு பேர் கூடியிருந்தார்கள்.

மறுநாள் இருநூறு பேரே வந்தார்கள். ''முருகா! நீதான் அருள் செய்ய வேண்டும்'' என்று வேண்டிக் கொண்டார் தர்ம கர்த்தர். சிவகுமாரன் கம்பீரமாகவே கதையை இசையுடன் சொன்னார். வந்தவர்கள் திருப்தி அடைந்தார்கள்.

ஒரு கட்டத்தில் தீபாராதனை ஆயிற்று. தட்டு எடுத்தார்கள். தர்மகர்த்தரே ஆடவர் பக்கத்துத் தட்டை எடுத்தார். முதலில் தட்டில் ஓர் ஐந்துரூபாய் நோட்டு விழுந்தது. அவர் நண்பருக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அடுத்தபடி ஒரு முழு ரூபாய் விழுந்தது. தொடர்ந்து ஐந்தாறு முழு ரூபாய்கள். நண்பர் மூர்ச்சை போட்டு விழவில்லை; அவ்வளவுதான். பின் வரிசைப் பிரமுகர்கள் எட்டணாப் போட்டார்கள். ஓரணா, இரண்டணா, நாலணா - இப்படியே விழுந்தன.

அன்று மொத்தம் பார்த்தபோது ஐம்பது ரூபாய் வசூல். ''முருகன் அற்புதம் செய்கிறானே!'' என்று நண்பர் கூவினார். ''அவன் நினைத்தால் எதுதான் நடக்காது?'' என்றார் தர்மகர்த்தர்.

அடுத்தநாள் இன்னும் அதிகமாக வசூல் ஆயிற்று. யாரும் நயா பைசாவே போடவில்லை. ஐந்து ரூபாயும் ஒரு ரூபாய்களும் விழும்பொழுது நயாபைசா போடுவது நாகரிகமாக இருக்குமா? யாரும் ஓர் அணாவுக்குக் குறைவாகப் போடவே இல்லை. கூட்டமும் வர வர மிகுதியாயிற்று. ''அடடா! எவ்வளவு நன்றாகச் சொல்கிறார்!'' என்று பேசிக்கொண்டார்கள்.

முப்பது நாளுக்கு மேலும் கதையை நீட்ட வேண்டும் என்று பொது மக்கள் ஆசைப்பட்டார்கள். ''அது எப்படி முடியும்? அவருக்கு வேறு இடங்களில் கிடைக்கும் வரும்படியை நாம்கெடுக்கலாமா?'' என்று தர்மகர்த்தரே சொல்லிவிட்டார். கேட்கும் ரசிகர்களில் பத்துப் பேராகச் சேர்ந்து தாங்கள் தனியே ஐந்நூறு ரூபாய் கொடுத்துவிடுவதாகவும் இன்னும் பத்து நாட்களுக்குக் கதையை நீட்டவேண்டும் என்றும் வேண்டிக்கொண்டார்கள்.

கந்தபுராணம் நிறைவடைந்தது. அன்று இரண்டாயிரத்துக்குமேல் கூட்டம். முதல் மந்திரி தலைமை தாங்கினார்; பல பெருமக்கள்



பாராட்டிப் பேசினார்கள். ஆடை, மோதிரம், வெள்ளிப் பாத்திரம் என்று பல பரிசுகள் கிடைத்தன. "பொது மக்களின் ஒத்துழைப்பினால் பிரசங்கியாருக்குக்கிடைத்தசம்மானம் ரூபாய் மூவாயிரம்" என்று தர்மகர்த்தர்சொன்னபோது மக்கள் வியப்படைந்தார்கள். வித்துவான் முந்நூறு ரூபாயில் ஒரு வெள்ளி வேல் வாங்கி வைப்பதாக அறிவித்தார். அதற்காகவும் மக்கள் அவரைப் பாராட்டினார்கள்.

மறு நாள் கணக்கை வித்துவானிடம் கொண்டு போய்ச் சமர்ப்பித்தார் தர்மகர்த்தர். அன்றன்று வசூலானது, தனியே செல்வர்கள் தந்தது ஆகிய எல்லாம் வரவினத்தில் இருந்தன. விளக்கு, ஒலி பெருக்கி, சில்லறைச் செலவு என்று செலவினங்கள் காட்டப்பட்டிருந்தன. தட்டில் 'முருகன் பணம்' என்று 250 ரூபாய் செலவினத்தில் இருந்தது. வித்துவான் எல்லாவற்றையும் பார்த்தார்; அந்தச் செலவினம் இன்னதென்று விளங்கவில்லை. "இதென்ன, முருகன் பணம் என்று போட்டிருக்கிறதே?"

"அதுதான் இத்தனை லாபம் வரச் செய்த முதல்; முருகன் பணம்" என்றார் தர்மகர்த்தர்.

"எனக்கு விளங்கவில்லையே!"

"நீங்கள் இந்தக் கோயிலுக்குப் புதியவர்கள். தட்டில் எப்படிப் பணம் விழுமோ என்று அஞ்சினேன். நயாபைசாவாகப் போடும் கூட்டமே இங்கே அதிகம். ஆண்டவனிடம் பிரார்த்தித்துக்கொண்டேன். அவன் பணத்திலிருந்து பத்துப் பன்னிரண்டு எடுத்துச் சில நண்பர்களிடம் கொடுத்து அவர்களை முன் வரிசையில் உட்கார்த்தி வைத்தேன். நானே தட்டெடுத்து அவர்களிடம் நீட்டினேன். முதலில் அஞ்சு ரூபாய் நோட்டைப் போடச் செய்தேன். பிறகு ஒரு ரூபாய் நாணயங்கள் விழுந்தன. இவ்வளவும் முன்னே செய்து கொண்ட ஏற்பாடு. அதைப் பார்த்தவர்கள் நயாபைசாப் போட நாணினார்கள். அணாக்களாகப் போட்டார்கள். ரூபாய்களும் போட்டார்கள். முருகன் தந்திரம் பலிக்கும்படி செய்தான். நான் எதிர்பாராத வகையில் அமோகமாகச் சம்மானம் கிடைக்கச் செய்தான்." இப்படிச் சொல்லி ஆனந்தக் கண்ணீர் விட்டார் தர்மகர்த்தர்.

வித்துவான், "உங்கள் அபிமானத்தை என்னவென்று சொல்வது! முருகன் திருவருள் உங்கள் மூலமாக எனக்குக் கிடைத்ததென்றே நான் நம்புகிறேன். ஒரு வேண்டுகோள். ஆண்டவன் பணத்தை உபயோகித்துக் கொண்டதற்கு வட்டி வேண்டாமா?" என்று கேட்டார்.

"அதுதான் நீங்களே வேல் பண்ணி வைப்பதாகச் சொல்லி விட்டீர்களே!"

"இல்லை, இல்லை. அது வேறு விஷயம். இந்தாருங்கள், இந்த நூறு ரூபாயையும் முருகன் காணிக்கையாக வைத்துக் கொள்ளுங்கள்" என்று நீட்டினார் பிரசங்கி.



# சின்ன விதைகள்

மு. வரதராசன்

சந்திர மண்டலத்திற்குப் போகத் தேவை இல்லை. வேறு எந்த மண்டலத்திற்கும் போகத் தேவை இல்லை. சிறிது நேரம் வானத்தை அண்ணாந்து பார்த்தாலும் போதும். மண்ணைக் குனிந்து பார்த்தாலும் போதும். கூர்ந்து பார்க்கும் பார்வை வேண்டும், ஆழ்ந்து உணரும் நெஞ்சம் வேண்டும். அப்படிப் பார்த்தால், கடவுளின் படைப்பு எவ்வளவு பெருமையுடையது என்று வியந்து போற்றலாம்.

ஒரு சிறு விதை ஈர மண்ணில் சில நாள் இருந்தபின், செடியாகிறது. அந்தக் காட்சியை நாம் அடிக்கடி பார்த்திருக்கிறோம். பார்த்துப் பார்த்துப் பழகிவிட்ட காரணத்தால், அதனுடைய பெருமை நமக்குத் தெரியவில்லை. சிறு விதை எப்படிச் செடியாகிறது? அந்த அழகான மாறுதலுக்குக் காரணம் என்ன? அந்த விதையில் எவ்வளவு சக்தி அடங்கியிருக்கிறது? அந்தச் சக்தியை ஈர மண் எப்படி வெளிப்படுத்துகிறது? அந்த விதை முளைத்தவுடன் இரண்டு சிறு இலைகள் தோன்றுகின்றன. அந்த இலைகள் சின்ன விதைக்குள் எவ்வளவோ நாள் மூடிவைக்கப் பட்டிருந்ததுபோல் அடங்கியிருந்து வெளியாவது பெரிய வியப்பு அல்லவா? அந்தச் சிறு இலைகள் எவ்வளவு அழகாக மென்மையாக இருக்கின்றன! அவ்வளவு அழகும் மென்மையும் அந்த இலைகளுக்கு எப்படி ஏற்பட்டிருக்கும்? இப்படி உணர்ந்து எண்ணிப் பார்த்தால் நம் மனம் எங்கோ போய்விடுகிறது! காரணம் காண முடியாத எல்லைக்குப் போய் விடுகிறது.

கிராமத்தில் ஒரு தோட்டத்திற்குள் சென்று பார்த்தால், எத்தனையோ அற்புதங்களைக் காணலாம்.

சுண்டைச் செடி, கத்தரிச் செடி, மிளகாய்ச் செடி, தக்காளிச் செடி இந்த நான்கும் ஒரே மண்ணில் பயிராகின்றன. அவற்றின் காய்கள் வெவ்வேறு வகையாக இருக்கின்றன. பழங்களும் வெவ்வேறு வகையாகப் பழுக்கின்றன. நிறம், வடிவம், சுவை எல்லாம் வேறு வேறு. சுண்டைக்காய் கசக்கும். கத்தரியில் கசப்போடு காரமும் சிறிது கலந்திருக்கும். தக்காளி புளிப்பும் இனிப்பும் கலந்திருக்கும். இப்படி நான்கு வகையாக வேறு பட்டிருக்கும் இவை ஒரே மண்ணில் இருந்து கிடைத்தவை. இந்தச் செடிகள் ஒரே வகையான காற்றையும் சூரிய வெப்பத்தையும் கொண்டு வளர்ந்தவை. ஆனால் மண்ணையும் காற்றையும் வெப்பத்தையும் இவை காயாக்கிப்

பழமாக்கி நமக்குத் தரும்போது வெவ்வேறு சுவைகளோடு தருகின்றன.

இந்த நான்கு செடிகளின் விதைகளையும் எடுத்து ஒப்பிட்டுப் பார்க்க வேண்டும். சுண்டை விதை, அதன் பக்கத்தில் கத்தரி விதை, அதை அடுத்து மிளகாய் விதை, அதன் அருகே தக்காளி விதை இப்படி நான்கு வகை விதைகளையும் எதிரே வைத்துக் கொண்டு எண்ணிப் பார்க்க வேண்டும். நான்கு விதைகளும் பார்ப்பதற்கு ஒரு வகையாகத் தோன்றும். வடிவும் அமைப்பும் நிறமும் ஒரே வகையாக இருக்கும். சுண்டை விதையைப் பார்த்து, ''நீ எப்படிக் கசப்பான காய்களை உண்டாக்கிக் கொடுக்கிறாய்?'' என்று கேட்டால், ''மண்ணிலிருந்து உண்டாக்குகிறேன்'' என்று சொல்லும். அப்படியே கத்தரி விதையைப் பார்த்து, ''கசப்பையும் காரத்தையும் சிறிதளவாகச் சேர்த்துக் கொடுக்க உன்னால் எப்படி முடிகிறது?'' என்று கேட்டால், ''அந்தச் சுவைகளெல்லாம் மண்ணில் கிடைக்கின்றன. அவைகளைப் பக்குவமாகச் சேர்த்துக் கொடுக்கிறேன்'' என்று சொல்லும். மிளகாய் விதையைப் பார்த்து, ''இவ்வளவு மிகுதியான காரம் உனக்கு எங்கிருந்து கிடைக்கிறது?'' என்று கேட்டால், ''எல்லாம் மண்ணில் இருக்கிறது'' என்று சொல்லும். தக்காளி விதையைப் பார்த்து, ''இனிப்பும் புளிப்பும் சேர்த்துக் கொடுக்க நீ எப்படிக் கற்றுக் கொண்டாய்?'' என்று கேட்டால், ''மண் எனக்குக் கொடுப்பதைத் தான் நான் உங்களுக்குக் கொடுக்கிறேன்'' என்று சொல்லும்.

இந்த நான்கு வகை விதைகளும் ஒரே வகையாக ஒரே வடிவமாகத் தோன்றினாலும், மண்ணிலே முளைத்து வளரும் போது நான்கு வகைச் செடிகளாக வளர்ந்து நான்கு வகை வேலைகளைச் செய்கின்றன. மண்ணில் எல்லாம் இருக்கலாம். ஆனால் மண்ணிலிருந்து கசப்பையும் காரத்தையும் புளிப்பையும் இனிப்பையும் பிரித்துக் கொடுக்க மனிதரால் முடியவில்லை. பெரிய விஞ்ஞானிகள் ஏற்படுத்தியிருக்கும் கருவிகளும் இந்த வேலையைச் செய்ய முடியவில்லை. எந்தத்



தொழிற்சாலையில் கொடுத்தாலும் எவ்வளவு பெரிய தொழில் நிபுணரும் இப்படிக் காரம் முதலியவைகளைப் பிரித்துக் கொடுக்க முடியாது. ஆனல் இந்தச் சிறு விதைகள் அந்த வேலையைத் திறமாகச் செய்கின்றன. இந்தச் சிறிய விதைகளுக்குள் பெரிய தொழிற்சாலைகள் இருப்பதுபோல் தோன்றுகின்றன. மண்ணின் ஈரம் பட்டவுடன் இந்த விதைகளுக்கு கசப்பையே உற்பத்தி செய்கிறது. அப்படியே காரம் முதலியவற்றின் தொழிற்சாலைகளும் அந்த அந்தச் சுவைகளையே உண்டாக்கிக் கொடுக்கின்றன. இடம் நெருக்கமாக இருந்தாலும், ஒரு மண்ணுக இருந்தாலும், கசப்பில் காரம், காரத்தில் இனிப்பு என்று கலப்பு ஏற்படுவதில்லை.

இந்தத் தொழிற்சாலைகள் இன்று நேற்று ஏற்பட்டவை அல்ல; ஆயி





உயிர் வந்து விடுகிறது, தொழில் செய்யும் ஆற்றல் வந்து விடுகிறது. சில வாரங்களில் செடியாக வளர்ந்தவுடன் இவற்றின் தொழிற்சாலைகள் வேலைக்கு ஆயத்தமாகி விடுகின்றன. வேலைகள் ஒழுங்காக நடைபெறுகின்றன. ஒரே தோட்டத்தில் அடுத்தடுத்துச் சுண்டையும் கத்தரியும் மிளகாயும் தக்காளியும் நெருங்கி இருந்தபோதிலும் இவற்றின் வேலைகள் தடுமாறுவது இல்லை. கசப்புத் தொழிற்சாலை ரக்கணக்கான ஆண்டுகளாக நடைபெற்று வருகின்றன. இவ்வளவு வரலாற்றையும் வேலைத் திறமையையும் எண்ணியபடியே இந்த நான்கு வகை விதைகளையும் உற்றுப் பார்த்தால், இவற்றைப் படைத்து அமைத்த பெரிய சக்தியை வியந்து போற்றவேண்டியிருக்கிறது; பார்ப்பதற்கு ஒரே வகையான விதைகள்! ஆனல் வேறு வேறு வகையான வேலைகள்! சிறிய விதைகளுக்குள் பெரிய அற்புதம்!



# சந்திரனில் தமிழன்

## தி. ஜ. ர.

பதினேழு தொண்டர்கள் முன் வந்தார்கள் சந்திர லோகம் செல்ல. ஆமாம்; சந்திர லோகம் செல்லத்தான். இது இருபத்தோராம் நூற்றாண்டின் ஆரம்பம்; அதாவது 2,000-ஆவது வருஷத்தைத் தாண்டியாகிவிட்டது. சந்திர லோகத்துக்கு முதல் தொண்டர்களை அனுப்பச் சகல ஆயத்தங்களும் பயிற்சிகளும் நடந்துவிட்டன. தொண்டர்களிலே ஒருவன் பம்பரமூர்த்தி; தமிழ் நாட்டான். தொண்டர்களைத் தனித்தனியே அனுப்பத்தான் சர்வதேச சர்க்கார் திட்டமிருந்தது. இப்போது பூலோகம் முழுவதற்குமே ஒற்றுமையான சமஷ்டி சர்க்கார் ஒன்று ஏற்பட்டுவிட்டது. அதுதான் இந்த ஏற்பாடுகளையெல்லாம் மேற்கொண்டது.

பம்பரமூர்த்தியின் முறை முதல் முதலிலே வந்து, அவனும் வான வெளியிலே தனிக்கப்பலில் புறப்பட்டு விட்டான். சந்திரனை அடைந்து இரண்டு நாள் வரையில் க்ஷேம சமாசாரமும் சூழ்நிலை பற்றிய தகவலும் அனுப்பிக் கொண்டிருந்தான். அப்புறம் ஒரு சேதியும் இல்லை. ஒரே வாரத்தில் திரும்ப வேண்டியவன் பம்பரமூர்த்தி. மாதம் ஒன்றாகியும் அவன் திரும்பவில்லை; சேதியும் இல்லை.

மூன்று மாதம் கழித்துத் திடீரென்று சந்திர லோகத்திலிருந்து ஒரு செய்தி வந்தது. பம்பரமூர்த்தியின் செய்திதான்.

''நான் பூலோகத்துக்கு வர வேண்டும்.''

''வாயேன்; யார் வேண்டாம் என்கிறார்கள்!''

''ஒரு விஷயம்.''

''என்ன?''

''என்னோடு ஒரு குழந்தையும் வரலாமா?''

''குழந்தையா!''

நிபுணர்கள் திடுக்கிட்டுப் போனார்கள். விசாரித்தார்கள். தன் குழந்தைதான் என்றும், பூலோகத்துக்கு வந்ததும் விவரம்

தெரிவிப்பதாகவும் பம்பரமூர்த்தி சொன்னான்.

சம்பாஷணை நடந்த ஒரு மணி நேரத்துக்கெல்லாம் புறப்பட்டு விட்டான் பம்பரமூர்த்தி. பம்பரம் மாதிரிதான் பறந்து வந்தான். போய்ச் சேர்ந்த பதினேழேகால் மணி நேரத்திலேயே, பூலோகத்துக்கு இப்போது திரும்பியும் வந்து சேர்ந்துவிட்டான்.

பம்பரமூர்த்தியின் பக்கத்திலே உண்மையாகவே ஒரு குழந்தை இருக்கத்தான் இருந்தது. அதன் முகம் செங்கதிர்போல் ஒளி செய்தது. உருண்டு திரண்ட காலும் கையும் அகன்ற கண்ணும் பளபளப்பான மேனியுமாய் அது காட்சி அளித்தது. பார்த்தால் மூன்று மாதக் குழந்தையாகத் தோன்றவில்லை; முப்பது வாரக் குழந்தையாகவே தோன்றியது. மழலையும் பேசியது. ஆகா, என்ன இனிமையான குரல்! இன்னோர் ஆச்சரியம்: அது தமிழே பேசியது!

சந்திர லோகத்தில் தமிழ்க் குழந்தையா! அதுவும் பம்பர மூர்த்தியின் குழந்தை! தாய் யார்?

நிபுணர்கள் மிக்க கவனமாய், மிக்க ஆவலாய், அவனது பேச்சைக் கேட்கலானார்கள்.

''என் பிரயாண அநுபவங்களையும் உணர்ச்சிகளையும் சந்திர லோகத்தின் சூழ்நிலையையும் அறிய உங்களுக்கெல்லாம் பேராவல் ஏற்பட்டிருக்கும். முதலில் அந்த விவரங்களைச் சொல்லுகிறேன்..'' என்று தொடங்கினான் பம்பர மூர்த்தி.

''வேண்டாம், வேண்டாம்! அந்த விவரமெல்லாம் அப்புறம் சொல்லலாம். முதலில் இந்தக் குழந்தை பற்றிச் சொல்'' என்று பல நிபுணர்கள் ஒரே முகமாய்க் கத்தினார்கள்.

''சரி; அப்படியே சொல்கிறேன்'' என்று கனைத்துக் கொண்டான் பம்பரமூர்த்தி.

வரலாற்றை ஆரம்பித்தான்: ''சந்திர லோகம் போய்ச் சேர்ந்தேனா? மூன்று நாள் நடந்ததெல்லாந்தான் உங்களுக்குத் தெரியும்; அப்போதப்போதுதான் ரேடியோச் செய்தி அனுப்பிவிட்டேனே. சந்திரனில் முழு வெளிச்சப் பாதியிலோ, முழு இருள் பாதியிலோ நட்ட நடுவிலே இருப்பது சாத்தியமில்லை என்பது உங்களுக்குத் தெரிந்ததே. அங்கே வெயில் குரூரம்; இங்கே குளிர்க் கொடுமை. எனவே, ஒளியும் இருளும் சந்திக்கும் எல்லைக் கோட்டின் பக்கத்திலேயே என் கூண்டைச் செலுத்திக் கொண்டு போனேன். நாலாம் நாள் - அதாவது பூலோக நாளைச் சொல்லுகிறேன் - சந்திரனில் ஒரு மாதமே ஒரு நாள் அல்லவா? ஒரு பட்ச காலம் பகல்; ஒரு பட்ச காலம் இரவு. பூலோகக் கணக்குப்படி நாலாவது நாள், ஓர் அதிசயத்தைக் கண்டேன்..''

''என்ன? அதென்ன?'' என்று நிபுணர்கள் விசாரித்தார்கள்.

''அவசரப்படாதீர்கள். சொல்லுகிறேன்: நாலாம் நாள் என் ரேடியோ டெலிபோன் கருவியைத் திருகினேன். அது வேலையே செய்யவில்லை. திடுக்கிட்டுப் போனேன். அப்போது கலகல என்று ஒரு சிரிப்பொலி கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். என் கூண்டுக்கு அருகே பிரம்மாண்டமான மற்றொரு கூண்டு நின்றது. அதன் ஜன்னல் கண்ணாடியில் ஒரு முகம் தெரிந்தது. புதுமையான முகம். அந்த ஆள் தான் சிரித்திருக்கிறார்! 'பயப்படாதே, தம்பி; பயப்படாதே' என்று தமிழிலே கூறினார் ஆள். பிரமித்துப் போனேன். 'உன் கருவி வேலை செய்யாது. அதை என் கருவியைக் கொண்டு நான் தான் நிறுத்திவிட்டேன்' என்றார். 'நீங்கள் யார்?' என்று கேட்டேன். தாம் செவ்வாய்க் கிரகத்து மனிதர் என்றும் தம்மைப்போல் இன்னும் சிலர் நம் சந்திரனுக்கு வந்திருப்பதாகவும் சொன்னார். அவருக்குப் பூலோகத்தின் ஐந்தாறு பாஷைகள் தெரியுமாம். நம் குற்றலை ரேடியோ ஒலிபரப்புப் பாடங்களைக் கேட்டுக் கேட்டு அவர் நம் பாஷைகளைக் கற்றுக் கொண்டாராம். நம் குற்றலைகளில் பல, அயான் மண்டலத்தில் பட்டுத் திரும்பி வருவதால் தானே தொலைதூரம் நாம் ஒலி பரப்ப முடிகிறது? ஆனால், குற்றலைகளில் சில அந்த மண்டலத்தைப் பொத்துக்கொண்டு மேலேயும்

போய் விடுகின்றன. அவைதான் செவ்வாய்க் கிரகத்தை எட்டியிருக்கின்றன. வளர்த்தி வளர்த்திச் சொல்லுவானேன். நான் கண்ட அங்காரகருக்கு - செவ்வாய் மனிதருக்கு - என்மீது பேரன்பு உதித்துவிட்டது. சொல்லக் கூச்சமாயிருக்கிறது. இருந்தாலும் சொல்லிவிடுகிறேன். தம்மை நான் மணந்துகொள்ள வேண்டும் என்ருர். என்ன விபரீதம்! நானும் ஆண்; அவரும் ஆண். 'பரவாயில்லை; ஆணைப் பெண் ஆக்குவதும் பெண்ணை ஆணுக்குவதும் சத்திர சிகிச்சையால் சாத்தியம் என்று உங்கள் பூலோக ரேடியோ பேச்சு ஒன்றிலேகூடக் கேட்டேன. ஏன் கவலைப்படுகிருய்?' என்ருர் அவர். பிறகு ஏதோ குளிகையை எனக்குக் கொடுத்தார். நான் பெண்ணுகிவிட்டேன். எனக்கு ஒரே வாரத்தில் பிறந்துவிட்டது இந்தக் குழந்தை. மூன்று மாதத்தில் அவருக்கு ஏதோ திடீரென்று செவ்வாயிலிருந்து அழைப்பு வந்தது. எங்களை நிர்க்கதியாய் விட்டுப் போய்விட்டார். ஆனுலும், போகும்போது என்னைக் ஆணுக்கிவிட்டார். ஒரு நாள் பூலோகத்துக்கு வந்து என்னைச் சந்திப்பதாகவும் சொல்லியிருக்கிருர். விஷயம் இவ்வளவுதான்'' என்ருன் பம்பரமூர்த்தி.

சந்திரலோக ஆராய்ச்சி எப்படியாவது போகட்டும். இப்போது இந்தக் குழந்தையின் விஷயம் ஒரு பெரிய பிரச்னையாகிவிட்டது.

குழந்தைக்குப் பூலோகத்தில் பிரஜா உரிமை கொடுக்க முடியுமா? பம்பரமூர்த்தியை இதன் அப்பா என்று பதிவதா, அம்மா என்று பதிவதா? பூலோகப் பிரஜா உரிமை அளித்தபின் அந்த அங்காரகர் வந்து குழந்தை மீது உரிமை கொண்டாடி விவகாரம் செய்யாதிருப்பாரா! இந்தக் கேள்விகளெல்லாம் இப்போது உலகக் கோர்ட் சட்ட நிபுணர்களின் ஆராய்ச்சியில் இருந்து வருகின்றன.

ஆனுல், ஒன்று: பம்பரமூர்த்தியோ "குழந்தையைப் பராமரிப்பது உலக சர்க்காரின் பொறுப்பு'' என்று சொல்லிவிட்டான். தன் வீட்டுக்குக் கொண்டு போனுல், பூலோக



மனைவி சண்டைக்கு வருவாள் என்பதால், குழந்தையை அழைத்துச் செல்ல மறுத்துத் தனியே தன் வீட்டுக்கு போய்விட்டான்!



# காகிதக் கப்பல்

காகிதக் கப்பல் ஒன்றை அண்ணன்
காவேரி ஆற்றில் மிதக்க விட்டான்..
போகிற கப்பலில் ஆசை எல்லாம்
போட்டு நிரப்பிப் பறக்க விட்டான்.
அன்னம் ஒன்று நீந்துவதைப் போல்
அழகிய கப்பல் செல்கிறதே..
தென்னந்திசையின் வன்னக்கப்பல்
சென்னைக் கப்பல் செல்கிறதே.
நாட்டுக் கப்பல், வீட்டுக் கப்பல்
நாவாய்க் கப்பல் செல்கிறதே..
பாட்டுக் கப்பல், சீட்டுக் கப்பல்
பண்டைக் கப்பல் செல்கிறதே.
தந்தக் கப்பல் முத்துக் கப்பல்
தத்துங் கப்பல் செல்கிறதே.
அந்தக் கப்பல். சோழக் கப்பல்
ஆ, ஆ மிதந்து செல்கிறது!
அதோ பார்! குழந்தைப் பட்டணம்
அங்கே! அலைகடலுக்கு அப்பாலே!
இதோ பார்! காகிதக் கப்பல்
நமை ஏற்றிச் செல்லும் இப்பாலே!

ரெஸாக்...

தமிழ் ஒளி



பாட்டி! சின்னமணி, ஊருக்குப் போறியே, அம்மாகிட்ட சொல்லிண்டயா?

சின்னமணி: ஓ, ஆச்சு. அப்பாகிட்ட கூடச் சொல்லிண்டாச்சு. உங்கிட்டதான் சொல்லிக்க வந்தேன்.

பாட்டி: சாமிகிட்ட..?

சின்னமணி: அவர்தான் எப்பவும் எங்கூடவே இருக்கிறரே! —பட்டு.



# அனாதை

கி. சரஸ்வதி அம்மாள்

குந்தனுக்குத் தாயும் கிடையாது; தந்தையும் இல்லை. அவன் அநாதை. அண்ணன், தம்பி, அக்காள், தங்கை, தாத்தா, பாட்டி, மாமன், சிற்றப்பன் என்று நெருங்கின உறவினர்கூட யாரும் கிடையாது அவனுக்கு. எல்லாமாகப் பூமிதேவிதான் அவனைத் தாங்கி நின்றாள். அவன் வசித்து வந்தது ஊரோரத்தில் ஒரு சிறு குடிசை. அவனும் அவன் தாயுமாக இருந்த வீடுதான் அது. இப்பொழுது தனியாளாகக் காலம் தள்ளினான். அவன் வயதுடைய பிள்ளைகள் ஒருவரும் அவனைப் போல இப்படி இருக்கவில்லை. மற்றச் சிறுவர்களெல்லாம் தங்களுடைய அம்மா அப்பா, சுற்றத்தார்களுடன் கூடிப் பேசும்பொழுது அவன் மட்டும் சும்மா வாய்பிளந்து கேட்டுக்கொண்டிருக்கும்படி இருந்தது. ''ஏண்டா, உனக்கு அப்பா, அம்மா என்று யாரும் இல்லையா?'' என்று அவர்கள் அவனைச் சாதாரணமாகக் கேட்பார்கள். அவன் என்ன சொல்லுவான்? அவனுக்குத் துக்கம்தான் தொண்டையை அடைக்கும். கோபம் வரும் போதெல்லாம் நண்பர்கள், ''போடா, நாதியற்றவனே!'' என்று ஏசுவார்கள். அந்த வேளைகளில் அவனுக்கு ஆறுதல் சொல்லக்கூட ஒருவர் இல்லையே என்று நினைத்து அவன் வருந்தினான். 'சிறு துரும்பும் பல் குத்த உதவும்' என்று இருக்

ஊசிக் குறத்தி



கும் இந்த உலகில் அவன் மட்டும் ஒருவருக்கும் உதவாதவனாக இருக்கிறானே! இந்த எண்ணம் அவன் உள்ளத்தில் புகுந்து அவனைப் பெரிதும் வருத்தித் துளைத்தது. ஏதோ உற்சாகமின்றி நாட்களைக் கழித்து வந்தான்.

அன்றாடம் அவனும் மற்றும் சில பையன்களுமாக ஊருக்கருகிலுள்ள காட்டுக்குச் சென்று காயும் கனியும், கிழங்கும் வேரும் பொறுக்கிச் சேர்த்து ஊருக்குள் கொண்டு வந்து விற்றுக் காசு சம்பாதித்தார்கள். ஒரு நாள் சற்றுத் தூரமாகவே சென்றார்கள். ஆகா, என்ன ஆச்சரியம், அழகிய ஓடை ஒன்று ஸ்படிகம் போல் தெளிந்த நீருடன் 'சலசல'வென்று ஓடிக்கொண்டிருந்தது. அதன் கரையில் ஒரு பெரிய பாறை. அதைப் பார்த்த சிறுவர்கள், ''இந்தப் பாறை எதற்கு இந்த அழகான இடத்தைப் பாழ் செய்து கொண்டு கிடக்கிறது? இதனால் என்ன உபயோகம்?'' என்று பழித்தார்கள்.

''உபயோகம் இல்லாமல் என்ன? நாம் அதை உபயோகித்துக் கொண்டு விட்டால் போகிறது. ஓடையின் நடுவில் அதைப் புரட்டித் தள்ளினால், ஓடையைத் தாண்டுகிறவர்களுக்கு அது பாலம் போல அமைந்து அதன்மேல் காலை வைத்துத் தாண்டிச் செல்ல உதவியாக இருக்குமே!'' என்றான் கந்தன்.

மற்றவர்கள், ''போடா போ, அதை யார் புரட்டுவது?'' என்று அசட்டையாகச் சொன்னார்கள்.

ஆனால் கந்தன் அதற்காகச் சும்மா இருக்கவில்லை. தான் ஒருவனாகவே சிரமப்பட்டுப் பாறையைப் புரட்டித் தள்ளி வந்து ஓடையின் நடுவில் சேர்த்துவிட்டான்.

பிறகு அவர்கள் சற்றுத் தூரத்தில் வெட்டின மரத்தின் பெரிய கிளையொன்று மழைக்கு நனைந்தும், வெயிலுக்குக் காய்ந்தும் உரமேறிக் கிடப்பதைக் கண்டார்கள். இதுவும் கேட்பாரற்று ஏன் கிடக்கிறதோ என்றுதான் மற்றவர்கள் இகழ்ச்சியாக நினைத்தார்கள். ஆனால் கந்தன் அதற்கு ஓர் உபயோகத்தைக் கண்டு பிடித்து விட்டான். அதையும் ஒருவனாக முண்டியடித்து இழுத்து வந்து ஓடைக் கரையோரமாக வைத்தான். ''யாராவது களைத்து வந்தால் இதில் உட்கார்ந்து இளைப்பாறலாமே!'' என்றான்.

சற்றுத் தூரத்தில் அவர்கள் யாரோ எறிந்து சென்றிருந்த தேங்காய் ஓடு ஒன்றைப் பார்த்தார்கள். ''கந்தா, இதற்கும் ஏதாவது உபயோகம்

**பாசிமணிக் குறத்தி**



போட்டோ: வி. கே. சர்மா.



கண்டுபிடி, பார்ப்போம்!'' என்று கந்தனைக் கேலி செய்தார்கள். ஆனால் கந்தன் அவர்கள் கேலியை ஒரு பொருட்டாக எடுத்துக் கொள்ளவில்லை. ''ஏன் இதனால் உதவி இராதா என்ன?'' என்று தான் பதில் சொன்னான். ''ஓடை நீரை எடுத்து அருந்தி, தாக சாந்தி செய்துகொள்ள இது மிகவும் உபயோகமாக இருக்குமே!'' என்று கூறி, அதை எடுத்துச் சுத்தம் செய்து மரக்கிளையின் மேல் வைத்தான்.

பிறகு அவர்கள் ஊர் திரும்பினார்கள். கந்தனும் தன் குடிசைக்குச் சென்று உணவு சமைத்துச் சாப்பிட்டான். படுக்கப்போகுமுன் அவன் மனத்திலே ஓர் எண்ணம் உதித்தது. 'குடிசையிலிருக்கும் அந்தத் தீபம் தன் ஒருவனுக்கு மட்டும் வெளிச்சம் கொடுத்துக்கொண்டிருக்கிறதே, அதையும் ஏன் பிறருக்கு உபகாரமாக இருக்கும்படி செய்யக்கூடாது?' அந்த விளக்கை அங்கிருந்த மேடையின் மேல் வைத்தான் அவன். 'இதன் ஒளி வெகு தூரம் அடிக்கும். யாராவது இருளில் வழி தப்பித் தவித்தார்களானால் அவர்களுக்கு இது வழி காட்டியாக இருக்கும்'' இவ்விதம் நினைத்து அவன் விளக்கை எடுத்து மேடையின்மேல் வைத்துவிட்டுப் படுக்கச் சென்றான். பிறகு அன்று முதல் அதுபோலச் செய்வதை ஒரு பழக்கமாக வைத்துக்கொண்டான்.

அந்தக் காட்டுக்கு அப்பால் இருந்த கிராமத்தில் கிழவி ஒருத்தி இருந்தாள். அவளுக்குப் பெண், பிள்ளை, பேரன், பேத்தி என்று யாருமே நாதி கிடையாது. அவள் ஒருத்திதான் காட்டில் சுள்ளிகள் பொறுக்கி, விற்று, ஜீவனம் நடத்தி வந்தாள். ஒரு நாள் காட்டினுள்

சுள்ளி பொறுக்க வந்தவளுக்கு வழி தவறிவிட்டது. வெகு தூரம் வந்து விட்டாள். பொழுது சென்று இருட்டவும் தொடங்கிவிட்டது. என்ன செய்வாள்! கால் போனபடி சென்று ஏதாவது ஓர் ஊரை அடைந்துவிட மாட்டோமா என்ற நம்பிக்கையில் நடந்துகொண்டே இருந்தாள். அந்தச் சிறு ஓடை அவள் பாதையில் வந்து குறுக்கிட்டு நின்றது. அதை எப்படிக் கடப்பது என்று தெரியாமல் தவிக்கும்போது அதன் நடுவில் கிடந்த பாறையைக் கண்டாள். 'நல்ல காலம்' என்ற பெருமூச்சுடன் அதில் கால் வைத்துச் சுலபமாக ஓடையைக் கடந்து அக்கரை வந்து சேர்ந்தாள். அவளுக்குப் பகலெல்லாம் அலைந்து திரிந்த அலுப்பு, அதோடு ஓடையைத் தாண்டின சிரமம். இரண்டும் சேர்ந்து களைப்பு மேலிட்டது. அங்கே கிடந்த மரக்கிளையைக் கண்டதும், 'அம்மாடி' என்று மனச் சமாதானத்துடன் அதில் உட்கார்ந்து தன் களைப்பைப் போக்கிக்கொண்டாள். அங்கிருந்த தேங்காய் ஓட்டைக் கொண்டு அந்த ஓடை நீரை எடுத்து அருந்தி, தாக சாந்தியும் செய்துகொண்டாள். அவளுக்குக் களை தெளிந்தது. அப்புறம் இருட்டில் எந்தத் திசையாகச் செல்வது என்று தெரியாமல் அவள் சுற்று முற்றும் நோக்கினாள். 'என்ன அதிசயம்! கீழ் வானில் சுக்கிரன்போல் வெகுதூரத்தில் விளக்கொளி ஒன்று தெரிந்தது. அந்த இருட்டில் கந்தனின் குடிசை விளக்கு அவளுக்கு வழி நடக்க உதவியாக நின்றது. கிழவிக்கு மனத்திலே நம்பிக்கையும் உற்சாகமும் ஏற்பட்டன ஏன்? வெளிச்சம் வரும் இடத்தில் ஏதோ ஊர் இருக்கிறது, மனிதர்கள் இருக்கிறார்கள் என்ற தெம்பையல்லவா அவளுக்கு அது அளித்தது? அவள்



## தெரிந்தால் சொல்லுங்கள்!




ஓர் ஆங்கில மாதப் பெயரும் ஒரு தமிழ் மாதப் பெயரும் சேர்ந்தால் 'அறிவாளி' என்ற பொருள் கொடுக்கும். அந்தப பதம் என்ன?

—பி. கே. சாமி, தூத்துக்குடி.

---

விளக்கு வைத்து உதவியவனை வாயாற வாழ்த்தினான். வழி நடந்த சோர்வை விட்டு வெளிச்சத்தைக் குறிப்பாகக் கொண்டு நடந்தாள். கந்தனின் குடிசையையும் வந்து அடைந்தாள். சாத்தியிருக்கும் கதவை மெல்ல இடித்து, ''உள்ளே இருப்பது யார்? சற்றுக் கதவைத் திறவுங்கள்!'' என்றாள்.

அவளுடைய குரலைக் கேட்டு, கந்தன் விழித்துக் கொண்டான். அவனுக்கு ஒரு பரபரப்பு ஏற்பட்டது. அவசரமாக எழுந்து கதவைத் திறந்தான். தள்ளாடி நிற்கும் கிழவிதான் அவன் கண்களில் பட்டாள். பாவம்! மன இரக்கத்தோடு அவன் அவளை அன்புடன் உள்ளே அழைத்துச் சென்றான். அவளைக் கண்டதும் அவனுடைய உள்ளத்தில் இனந் தெரியாத மகிழ்ச்சி உண்டாயிற்று. சற்றுச் சாவதானமாக இளைப்பாறச் செய்தான். தான் சமைத்து உண்ட உணவின் மீதியைக் கொடுத்து உண்ணவும் செய்தான். காலையிலிருந்து உணவில்லாது பசித்திருந்த அவளுடைய பசியையும் தணித்தான்.

பிறகுதான் அவர்கள் ஒருவருக்கு ஒருவர் தங்கள் தங்கள் வரலாறுகளைச் சொல்லிக் கொண்டார்கள். கிழவி கந்தன் கதையை முழுதும் கேட்டுவிட்டு, ''கந்தா, இனிமேல் உனக்கு உறவு யாரும் இல்லை என்று வருந்தாதே. நான் இருக்கிறேன். எனக்கு ஒரு பேரன் கிடைத்துவிட்டாய். இனி நான் ஒண்டிக் கட்டையல்ல. என் உயிருள்ள வரையும் என்னைக் காக்கவும் இறந்த பின் கொள்ளி போடவும் நீ இருக்கிறாய். உனக்கு நான் இருக்கிறேன். உன் நல்வாழ்வையே கோரி பிரியத்துடன் பராமரிப்பேன்'' என்று கிழவி உணர்ச்சி வசப்பட்டு, கந்தனைத் தழுவிக் கொண்டு கூறினாள். அவள் கண்கள் நீரைச் சொரிந்தன.

கந்தனுக்குத்தான் அவள் சொற்கள் எவ்வளவு ஆறுதலைக் கொடுத்தன! இனி அவன் அநாதையல்ல. கஷ்டப்பட்டு ஜீவனம் நடத்தினாலும் அந்தக் கிழவியிடம் ஒரு பை நிறையப் பணம் இருக்கிறது. கண்களை இமை காப்பதுபோல் காக்கும் பாட்டி ஒருத்தி அவனுக்குக் கிடைத்துவிட்டாள். மற்றச் சிறுவர்களுக்குச் சமதையான நிலையை அடைந்துவிட்டான் அவன். அந்தத் தெம்பு அவனுக்கு மனோ பலத்தைத அளித்தது. உற்சாகமும் தெம்பும் ஒருவனைப் பெரிய வனுக்கிவிடும் என்பது அந்த ஊராருக்குப் பின்னால் தான் தெரிந்தது.



# இந்தாப்பாட்டி இல்லைப்பாட்டி

## பெ. தூரன்

ஒரு ஊரிலே இரண்டு கிழவிகள் இருந்தார்கள். இரண்டு பேருக்கும் ரொம்ப வயதாகி விட்டது. அவர்களுக்கு எத்தனை வயதென்றுகூட யாருக்கும் தெரியாது. அவர்கள் குடியிருந்த வீடுகள் அந்த ஊரில் ஒரு கோடியிலே எதிர் எதிராக இருந்தன. இரண்டு வீடுகளும் பார்ப்பதற்கு ஒரேமாதிரியாக இருக்கும். ஆனால் அந்தக் கிழவிகள் அப்படி ஒரேமாதிரியாக இருக்கவில்லை. அவர்கள் உருவம் ஒரேமாதிரிதான் இருந்தது; ஆனால் குணம் வேறு வேறாக இருந்தது.

ஒரு கிழவி எல்லாரிடத்திலும் அன்போடு இருப்பாள். யார் எதைக் கேட்டாலும், ''இந்தா, எடுத்துக்கொள்'' என்று சிரித்த முகத்தோடு கொடுப்பாள். அதனால் குழந்தைகள் அவளை, 'இந்தாப் பாட்டி' என்று கூப்பிடுவார்கள்.

எதிர்வீட்டிலிருக்கும் மற்றொரு கிழவி பொல்லாதவள். யாருக்கும் எதுவும் கொடுக்கமாட்டாள். ஏதாவது வேண்டுமென்று யாராவது அவளிடம் போனால் அவள் உடனே, ''இல்லை'' என்று முகத்தைச் சுளித்துக்கொண்டு சொல்லுவாள். அதனால் குழந்தைகள் அவளுக்கு 'இல்லைப் பாட்டி' என்று பெயர் வைத்தார்கள்.

ஒரு நாள் ஒரு சிட்டுக்குருவி இந்தாப் பாட்டியின் வாசலிலே உட்கார்ந்து இரை தேடிக்கொண்டிருந்தது. அதைக் கண்ட சிறுவன் ஒருவன் விளையாட்டாக அதன்மேலே ஒரு கல்லை வீசினான். அந்தக் கல் குருவியின் முதுகிலே பலமாகப் பட்டது. அதனால் பெரிய காயம் ஏற்பட்டு, அதிலிருந்து இரத்தம் வழிய ஆரம்பித்தது. சிட்டுக்குருவி பறந்தோட முடியாமல் அப்படியே சாய்ந்து படுத்துக் கிடந்தது. இறக்கைகளைப் படபடவென்று அடித்துக்கொண்டு துடித்தது.

வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்த இந்தாப் பாட்டி அதைப் பார்த்து விட்டாள். அந்தக் குருவி படுகிற வேதனையைக் கண்டு அவளால் பொறுக்க முடியவில்லை. அவள் கண்களிலே கண்ணீர் பெருகிற்று. அவள் குருவியை அன்போடு எடுத்தாள். காயத்திற்கு மருந்து போட்டாள். குருவிக்குத் தண்ணீரும் அரிசியும் கொடுத்தாள். குருவியின் துன்பம் ஓரளவுக்கு நீங்கிற்று. இருந்தாலும் அதனால் பறக்க முடியவில்லை. அசையாமல் படுத்துக் கிடந்தது.

இந்தாப் பாட்டி அதைத் தன் வீட்டிலேயே வைத்துக் காப்பாற்றி வந்தாள். நல்ல நல்ல இரையும் கொடுத்தாள்.

சில நாட்களிலே சிட்டுக் குருவியின் காயம் ஆறிற்று. உடம்பில் வலிமை ஏற்பட்டது. அதனால் அது கிழவியின் வீட்டை விட்டுப் பறந்து போய்விட்டது. ஆனால் அது கிழவியை மறக்கவில்லை.

ஒரு நாள் அது எங்கிருந்தோ திடீரென்று பறந்து வந்தது. இந்தாப் பாட்டியின் முன்னால் உட்கார்ந்தது. அதன் வாயில் வைத்திருந்த சுரைக்காய் விதை ஒன்றைக் கீழே போட்டது. பிறகு வெளியே பறந்து சென்றது.



இந்தாப் பாட்டி மிகுந்த மகிழ்ச்சியோடு விதையைக் கையில் எடுத்துக் கொண்டாள். தன் வீட்டிற்குப் பின்னாலிருந்த காலியிடத்தில் அதை முளைக்கப் போட்டாள்.

அதிலிருந்து உண்டான செடியில் சுரைக்காய் ஏராளமாகக் காய்த்தது. காய் வெகு ருசி. கிழவி சிட்டுக் குருவியை நினைத்துக் கொண்டே காய்களைச் சமைத்துச் சாப்பிட்டாள். பக்கத்து வீட்டுக்காரர்களுக்கெல்லாம் சுரைக்காய் வழங்கினாள். எல்லோரும் அதைத் தின்று சந்தோஷப்பட்டார்கள்.

ஒரு பெரிய காயை மட்டும் இந்தாப் பாட்டி செடியிலிருந்து பறிக்கவில்லை. விதைக்காக அதை அப்படியே விட்டு வைத்திருந்தாள். அது நாளடைவிலே நன்றாக முற்றிக் காய்ந்து பக்குவமாகத் தொங்கிற்று. அதன் பிறகுதான் கிழவி அதைப் பறித்து வீட்டுக்குக் கொண்டு போனாள். அது மிகவும் கனமாக இருந்தது. காய்ந்து போன சுரைக்காய் இலேசாக இருக்கும். ஆனால் இது கனமாக இருப்பதைக் கண்டு

கிழவி ஆச்சரியமடைந்தாள். சுரைக்காயின் மேல்பாகத்திலே வட்டமாக அறுத்தெடுத்தாள். ஆகா, என்ன அதிசயம்! உள்ளே நிறைய அரிசி இருந்தது.

இந்தாப் பாட்டி அரிசியைக் கீழே கொட்டினுள். கொட்டக் கொட்ட, அந்தச் சுரைக்காயில் அரிசி நிறைய இருந்துகொண்டே இருந்தது. வீடு முழுவதும் அரிசி குவிந்துவிட்டது. அப்பொழுதும் சுரைக்காயில் அரிசி குறையவில்லை. கீழே கொட்டக் கொட்ட, நிறைந்து கொண்டே இருந்தது.

இந்தாப் பாட்டி அரிசியை எல்லோருக்கும் வாரி வாரிக் கொடுத்தாள். எல்லோருக்கும் நல்ல உணவு கிடைத்தது. எல்லோரும் அவளை வாழ்த்தினுர்கள்.

இல்லைப் பாட்டிக்கு இந்த விஷயம் தெரிந்தது. அவள் எப்படியோ தந்திரமாகப் பேசி இந்தாப் பாட்டிக்கு ஏராளமாக அரிசி கிடைக்கிற இரகசியத்தைத் தெரிந்துகொண்டாள். தானும் அவ்வாறு சிட்டுக் குருவிக்கு உதவி செய்து சுரைக்காய் விதை ஒன்று பெறவேண்டும் என்று தீர்மானித்தாள்.

அதுமுதல் அவள் தினந்தோறும் தன் வீட்டுக்கு முன்னுல் நின்று பார்த்துக்கொண்டிருப்பாள். தினமும் பல சிட்டுக் குருவிகள் அங்கே தரையில் உட்கார்ந்து இரை தேடிக் கொண்டும், விளையாடிக்கொண்டும் இருக்கும். சிறுவர்கள் தெருவிலே ஓடி ஆடி விளையாடுவார்கள். சில சமயங்களிலே குருவிகளின்மீது கல்லை வீசுவார்கள். ஆனுல் ஒரு கல்லும் அவற்றைக் காயப்படுத்தவில்லை.

இல்லைப் பாட்டிக்கு ரொம்பக் கோபம். ஒரு பையனுவது சரியாகக் குறி பார்த்து அடிக்கவில்லையே என்று அவர்களை வைதாள். கடைசியில் அவளே குருவிகளின் மீது கல்லை வீச ஆரம்பித்தாள். எப்படியோ ஒரு கல் ஒரு சிட்டுக் குருவியின் முதுகில் பட்டு அதன் இறகு ஒடிந்துவிட்டது. இல்லைப் பாட்டிக்கு ஒரே ஆனந்தம். குருவி



துடித்துக்கொண்டு தரையிலே கிடந்தது.

அவள் அந்தக் குருவியை வீட்டுக்குள் எடுத்துச் சென்றுள். ஒடிந்த இறகுக்கு மருந்து போட்டாள். குருவிக்கு இரையும் வைத்தாள்.

கொஞ்ச நாளில் காயம் ஆறிற்று. குருவி பறந்தோடிவிட்டது. சில நாட்களுக்குப் பிறகு அந்தக் குருவியும் ஒரு சுரை விதையைக் கொண்டுவந்து இல்லைப் பாட்டியின் முன்னுல் போட்டது. கிழவி சந்தோஷத்தோடு அந்த விதையை எடுத்து வீட்டுக் கொல்லையில் போட்டுத் தண்ணீர் ஊற்றினுள்.

சுரை முளைத்துப் படர்ந்து காய்த்தது. பெரிய பெரிய காய்கள் கிடைத்தன. ஒன்றைமட்டும் விதைக்காக விட்டுவிட்டு மற்றவற்றைக் கிழவி பறித்துக்கொண்டாள். பக்கத்து வீட்டுக்கெல்லாம் கொடுத்தாள்.

இல்லைப்பாட்டி இப்படித் தானம் கொடுக்கிறதைக் கண்டு எல்லோருக்கும் ஆச்சரியமாக இருந்தது. ஏனென்றுல் அவள் யாருக்கும் எதுவும் கொடுக்க மாட்டாள் என்பது எல்லோருக்கும் தெரிந்த விஷயம். ஆனுல் அவள் கொடுத்த சுரைக்காயைச் சமைத்து வாயில் போட்டதும் எல்லோருக்கும் கோபம் பொங்கிற்று. சுரைக்காய் ஒரே கசப்பு. அவர்கள் கிழவியிடம் ஓடி



வந்தார்கள். ''பேய்ச் சுரைக் காயைக் கொடுத்து எங்களை ஏமாற்றினாயா?'' என்று அவர்கள் அவளை நன்றாகத் திட்டினார்கள்.

இல்லைப் பாட்டியும் ஒரு சுரைக் காயைச் சமைத்துக் கை நிறைய எடுத்து வாயில் போட்டதும் முகத் தைச் சுளித்தாள். அவளுக்கு என்னவோமாதிரி இருந்தது. தலை சுற்றிற்று. கடைசியில் படுக்கை யிலே படுத்துவிட்டாள். வயிற்றிலே அவளுக்கு வலி ஏற்பட்டது.

பல நாட்களுக்குப் பிறகுதான் அவளுக்கு ஒருவாறு குணம் ஏற் பட்டது. அவள் எழுந்து சென்று காய்ந்து தொங்கிக்கொண் டிருந்த விதைச் சுரைக்காயை அறுத்துவந்தாள். அது கனமாக இருந்தது. ஆவலோடு அதன் மேல் பாகத்தை வட்டமாக அறுத்து எடுத்தாள். சுரைக் காய்க்குள் அரிசியிருக்கு மென்று கையைவிட்டாள். வெடுக்கு வெடுக்கென்று உள்ளே யிருந்த தேள் களும் நட்டுவாக்களிகளும் அவள் கையில் கொட்டின.

''ஐயோ!'' என்று கூவிக் கொண்டே இல்லைப்பாட்டி தரையில் சாய்ந்தாள்.

அவள் வீடு முழுவதும் தேள்களும் விஷப் பூச்சி களும் அங்குமிங்கும் ஓடின. பக்கத்து வீட்டுக் காரர்கள் இல்லைப் பாட்டியின் கூக் குரலைக் கேட்டு மெதுவாக வந்து பார்த்தார்கள். கிழவியின் பரிதாப நிலையைக் கண்டு அவர்கள் மனம் இளகிற்று. கசப்புச் சுரக்காயை அவள் கொடுத்ததை மறந்துவிட்டு அவர்கள் அவளுக்கு உதவி செய்ய முன்வந்தார்கள்.

இல்லைப் பாட்டி சிட்டுக்குருவியின் இறக்கையின்மீது வேணுமென்றே கல்லை வீசி அதை முறித்ததையெல் லாம் அவள் வாயிலிருந்தே அவர் கள் அறிந்தார்கள். உண்மையை எல்லோருக்கும் சொல்லும்போது தான் தேள் கொட்டின வலி கிழவிக் குக் கொஞ்சங் கொஞ்சமாக நீங்கத் தொடங்கியது. ''இனிமேல் அப் படிச் செய்யமாட்டேன்; எனக்குப் புத்தி வந்துவிட்டது'' என்று அவள் குழறிக் குழறி எல்லோரிடமும் சொல்லிக்கொண்டே இருந்தாள். அதைக் கேட்டுச் சிரிப்பதற்காகச் சிறுவர்களும் சிறுமிகளும் அவள் வீட்டைத் தேடி நாள்தோறும் வந்துகொண்டேயிருந்தார்கள்.

[ஜப்பானியக் கதையொன்றின் கருத்தை அடிப்படையாகக் கொண்டது இந்தக் கதை.]



# இன்பத் தமிழ்







வள்ளுவர் குறளமுது
வாழ்வுக்குப் பாலமுது
பழந்தமிழன் பாட்டின்பம்
பண்டிதற்குப் பேரின்பம்!

சேரமுனி சிலம்போசை
செந்தமிழின் கடலோசை!
கம்பநாடன் கவியுள்ளம்
கலைமகளின் திருவுள்ளம்!

பக்தர்கள் பாவெள்ளம்
பைந்தமிழின் அருள்வெள்ளம்!
அவ்வையின் சொற்குவியல்
அறிஞர்க்கும் பொற்குவியல்!

பாரதியின் சொல்முரசு
பாலகர்க்குப் போர்முரசு
கவிமணியின் கவிச்சோலை
கடவுளரின் கலைச்சோலை!



ந.சஞ்சீவி

# அழகுத் தெய்வம்

என்.எஸ்.சிதம்பரம்



அழகுத் தெய்வம் முருகன்!— நம்மை
ஆளும் தெய்வம் முருகன்!
மழைபோல் கருணை பொழிந்தே—
இன்ப
வாழ்வை அருளும் தெய்வம்!
வேலை யேந்தும் தெய்வம்!— வீர
வெற்றி கொடுக்கும் தெய்வம்!
நீல மயிலில் அமர்ந்தே— அன்பர்
நெஞ்சில் ஆடும் தெய்வம்!
சக்தித் தாயின் மைந்தன்!— சூரன்
சாயச் செய்த கந்தன்!
பக்திக் கிரங்கும் குமரன்!— தமிழின்
பாட்டில் உருகும் அமரன்!
நிலவைப் போன்ற முகத்தான்!— சிவனின்
நெற்றிக் கண்ணில் உதித்தான்!
நலமும் பலமும் தருவான்!— அழைத்தால்
நாட்ட முடனே வருவான்!
ஆறு முகங்கள் கொண்டான்!— படைகள்
ஆறும் இடமாய்க் கண்டான்!

ஆறும் கடலும் நாடும்—வானும்
அவன்தன் புகழைப் பாடும்!
புலவர் போற்றும் தெய்வம்!—முருகன்
புனித அன்புத் தெய்வம்!
இலகும் தெய்வ முருகன்!—அவனை
என்றும் பணிந்து மகிழ்வோம்!

# தீபவழி

கோவி. மணிசேகரன்



தீபத் திருநாள் வந்ததடா!—அது
தீபா வளியென நின்றதடா!
'தீப வழி' படும் பண்பினிலே—நம்
திருவுள மொன்றிய தன்பினிலே!
புத்தம் புதிய ஆடைகளை—நாம்
பூரிப் புடனே அணிந்திட்டோம்!
புத்தம் புதிய செயல்களினால்—ஒரு
புதிய உலகைப் படைத்திடுவோம்!
இனிப்பு, காரம், பலகாரம்—மனம்
இசைந்து நாவால் சுவைத்திட்டோம்—தினம்
நினைப்பில் இவைபோல் கண்ணோட்டம்!
நிலைத்தால் வாழ்வில் முன்னேற்றம்!
வாண வெடியும் மத்தாப்பும்—புவி
வாழும் நிறத்தைக் காட்டுதடா!
காணும் அவற்றின் பொலிவுகளில்—
ஒளி
கடவுள் தன்மை ஊட்டுதடா!





# காவல்



சட்டை மேலே கோட்டுப் போட்டுச்
சரிகை போட்ட வேட்டி கட்டி,
நட்ட நடுவே தோட்டந் தன்னில்
ராஜா போலே நின்றி ருந்தார்.

இரவும் பகலும் தூங்கி டாமல்,
இங்கு மங்கும் நகர்ந்தி டாமல்,
பெருமை யோடு காவல் காப்பார்,
பேரைக் கேட்டால் தெரியா தென்பேன்.

காக்கை, குருவி அங்கே வந்தால்
காவல் காரர் நிற்கக் கண்டு,
சீக்கி ரத்தில் வந்த வழியே
திரும்பி ஓடும் பயந்து கொண்டு.

காற்றுப் பலமாய் அடித்த தாலே,
கனத்த மழையும் பெய்த தாலே
நேர்த்தி யான அவரின் உடைகள்
நித்தம் கிழிந்து வந்த தையோ!

காவல் காரர் உடைகள் யாவும்
கந்தல் கந்த லாகி விடவே,
பாவம், பிச்சைக் காரர் போலப்
பார்க்கும் போது தோன்ற லானார்!

இதனைக் கண்ட காகம் ஒன்று
'இந்தச் சமயம் இவர்க்கு நாமும்
உதவி செய்தால் பயமில் லாமல்
உலவ லாமே' என்று கருதி,

# காரர்



அழ. வள்ளியப்பா



அருகில் உள்ள வீட்டிற் குள்ளே
  யாரும் இல்லா வேளை சென்று
கறுப்புக் கோட்டு, சிவப்புச் சட்டை,
  கட்டிக் கொள்ளச் சரிகை வேட்டி

எடுத்து வந்து காவல் காரர்
  இருக்கும் இடத்தில் போட்டு விட்டு,
''உடுத்துக் கொள்வீர்'' என்று சொல்லி,
  ஒதுங்கி நின்று பார்த்த தங்கே.

காவல் காரர் பழைய உடையைக்
  கழற்றிக் கீழே போட வில்லை;
ஆவ லோடு புதிய உடையை
  அணிய வில்லை; அசைய வில்லை!

உடனே காகம் அருகில் சென்று
  உற்று நன்ருய்ப் பார்த்து விட்டு,
''அடடே, இவரைக் கண்டு நாமும்
  அஞ்சி ஏனோ ஓட வேண்டும்?

வைக்கோல் மேலே துணியைச் சுற்றி
  வைத்திருக்கும் பொம்மை என்றே
இக்கணத்தே நண்பர் அறிய
  எடுத்துச் சொல்வேன்'' என்று கூறி,

காவல் காக்கும் பொம்மை தலையில்
  காலை வைத்து நின்று கொண்டு,
கூவி அழைத்துப் பறவை யாவும்
  கூடச் செய்து விட்ட தங்கே!

# எங்கள் பாட்டி

'சசிதேவன்'

பக்குவமாய்ச் சீடை முறுக்கு
பண்ணி வச்சிருக்கு - இங்கே
பண்ணி வச்சிருக்கு!
பண்ணி வச்சால் பாட்டிக்கென்ன?
பற்கள் இல்லையே - பாவம்,
பற்கள் இல்லையே!

பாரதமும், ராமாயணமும்
படமாய் வந்திருக்கு - சினிமாப்
படமாய் வந்திருக்கு!
படமாய் வந்தால் பாட்டிக்கென்ன?
பார்வை இல்லையே - கண்களில்
பார்வை இல்லையே!

ரேடியோவில் துருவன் சரிதம்
எட்டடித்ததும் - இரவு
எட்டடித்ததும்!
எட்டடித்தால் பாட்டிக்கென்ன?
இரண்டும் டமாரம் - செவிகள்
இரண்டும் டமாரம்!

எழுந்தருளிக் கோயில் சாமி
இறங்கி வந்திருக்கார் - தெருவில்
இறங்கி வந்திருக்கார்!
எழுந்து கும்பிடப் பாட்டியாலே
இயல வில்லையே - ராமா,
இயல வில்லையே!

என்ன வெல்லா மோயிருந்தும்
எங்கள் பாட்டிக்கு - படுகிழம்
எங்கள் பாட்டிக்கு
என்ன பயன், என்ன பயன்,
ஏதும் இல்லையே - உலகில்
ஏதும் இல்லையே!



# கண்ணன் சித்திரப் போட்டி



ஆனந்த நடனம்

கே. பாக்கியம், கோவை. வயசு - 15



காலைக் காட்சி



நான் பள்ளி செல்லும் வண்டி
டி. ஜி. பிரபாகர், வாலாஜாபாத்
வயசு - 9



இயற்கை எழில்
எஸ். சண்முகம், வயசு - 14

சிறுவனும் மாடும்
க. வே. சண்முக
சுந்தரம், ஈரோடு
வயசு - 13




பாலர்களே! உடனே வாருங்கள்... சேருங்கள்... இதோ...
ஸன்லைட் வர்ணந் தீட்டும் போட்டி
ரூ. 25,000
இம்மொத்தத்தொகைக்கு நூற்றுக் கணக்கான கோலாகலப் பரிசுகள்!
2 முதல் பரிசுகள்: ரொக்கமாக ரூ.5000 அல்லது அத்தொகைக்கு உட்பட்ட செலவில் இந்தியாவில் உல்லாசப் பிரயாணம்.
4 இரண்டாம் பரிசுகள்: ஹெச்.எம்.வி. ரேடியோகிராம்.
6 மூன்றாம் பரிசுகள்: மர்பி ஆல் வேவ் ரேடியோவும் அத்துடன் ஹிந்த் அம்பாஸடர் சைகிளும்.
2000 பரிவுப் பரிசுகள்: பெயிண்டிங் ஸெட் அல்லது ஒரு பொம்மை.
சிறுவர், சிறுமிகளே! தமாஷுக்குத் தமாஷ்! அதோடு உன்னதமான இந்தப் போட்டியில் பரிசைத் தட்டுவது சுலபம்! ஸன்லைட் விற்கும் உங்கள் கடைக்காரரிடமிருந்து இலவசமாகப் பிரவேச பாரங்களை முதன் முதலில் பெற்றுக்கொள்ளுங்கள். ஒவ்வொரு பிரவேச பாரத்துடனும் ஓர் அழகிய படம் உள்ளது. நீங்கள் செய்யவேண்டியதெல்லாம் அந்தப் படத்திற்கு வர்ணந்தீட்டவேண்டியது, அவ்வளவே. நீங்கள் விரும்பும் எந்த வர்ணத்தையும் உபயோகிக்கலாம்! இப் போட்டியில் கலந்துகொள்ளத்தக்கவர்களை வயதுவாரியான இரு வகுப்புக்களாகப் பிரிவு செய்யப்பட்டுள்ளது. (1) 10 வயதுக்கு உட்பட்டவர்கள். (2) 10 முதல் 15 வயதுவரை உள்ளவர்கள். இரு வகுப்பினரின் படங்களையும் தனித் தனியே பரிசீலித்துத் தீர்ப்பளிக்கப்படும். ஒரு வகுப்பைப் போலவே மற்ற வகுப்பிற்கும் அதேமாதிரியான முதல், இரண்டாவது, மூன்றாவது மற்றும் பரிவுப் பரிசுகள் வழங்கப்படும்.
முடிவு தேதி: 16 நவம்பர் 1959
குழந்தைகளே! தாமதியாதீர்கள்!
உங்கள் பிரவேச பாரங்களை இன்றே பெற்றுக் கொள்ளுங்கள்.
SUNLIGHT SOAP
சிறிதளவு ஸன்லைட் ஏராளமான துணிகளை வெளுக்கிறது!
S10-50 TM
இந்துஸ்தான் லீவர் லிமிடெட் தயாரிப்பு



(படம் - 1): இந்துஸ்தான் கப்பல் தளத்துக் காரியாலயங்கள் அமைந்துள்ள இடத்தின் அழகான தோற்றம்.

# இந்துஸ்தான் கப்பல் தளம்

'ஆர்வி'

இந்தியாவின் இயற்கைத் துறைமுகம் என்று விசாகப் பட்டணம் கடற்கரைத் துறைமுகத்தைக் குறிப்பிடலாம். கடற்கரை ஓரமாக, கடலில் மூன்று புறமும் கற்பாறை உயர்ந்து நீண்டு சூழ்ந்திருக்கிறது. அதன் கீழ்ப் புறமாகக் கப்பல்கள் உள்ளே வந்து சேருவதற்கு வாய்ப்பாகக் கடல் அமைந்திருக்கிறது. 590 மைல் நீளமுள்ள ஆந்திராவின் கடற்கரையில் கற்பாறையால் சூழ அமைந்த இந்த இடத்துக்கு டால்பின் முனை என்று பெயர். இங்கே கடல் அமைதியாகவும் ஆழமாகவும் இருக்கிறது. கப்பல் வந்து தங்குவதற்கு ஏற்ற இடமாக இருப்பதுடன் கப்பல் கட்டும் தொழிற்சாலை அமைப்பதற்கு வாட்டமான துறைமுகமாகவும் இது இருக்கிறது.

இதனால்தான் இந்தியாவிலேயே கப்பல் கட்டும் தொழில் விசாகப் பட்டணத்தில் மட்டுமே நடைபெறுகிறது. இந்துஸ்தான் கப்பல் தளம் அமைந்திருப்பதைப் படத்தில் காணலாம். இந்துஸ்தான் கப்பல் தளம் வேலை தொடங்கி 12 ஆண்டுகள் ஆகின்றன. இதுவரையில் 25 கோடி ரூபாய் மதிப்புள்ள 24 நவீனக் கப்பல்கள் இங்கே கட்டப்பட்டுள்ளன.

நவீனக் கப்பல் கட்டுவதற்குத் தேவைப்படும் பொருள்கள் எவ்



(படம் - 2):
கப்பல் தளத்தின் அழகிய தோற்றம்.



(படம் - 3):
கட்டப்பட்டு வரும் இரண்டு கப்பல்களின் காட்சி.

வளவு என்று உங்களுக்குத் தெரிய வேண்டாமா? இந்தக் கப்பல் தளத்தில் கட்டப்பட்டுள்ள 8000 டன் எடையுள்ள ஒரு கப்பலைப் பார்க்கலாம். கப்பலை அமைக்கும் இடமே கால் பந்து ஆடும் மைதானத்தில் பாதி அளவு விஸ்தீரணமாவது இருக்க வேண்டியிருக்கும். இதில் உபயோகமாகும் எஃகைக் கொண்டு 360 குட்ஸ் வாகன்கள் கட்டிவிடலாமாம். அதாவது எஃகு மட்டும் 3000 டன் தேவைப்படுகிறது. 500 டன் தேக்குமரம் இந்தக் கப்பலுக்கு வேண்டியிருக்கிறது. அதாவது நாலு அறைகள் கொண்ட வீடுகளில் 400 வீடுகளுக்குப் போதுமான மரங்கள். 18 மைல் நீளமுள்ள எஃகுக் கம்பியும் ஏழு லட்சம் போல்டுகள், திருகாணிகள் போலத் தேவைப்படுகின்றன. 28 அடி உயரம் 25 அடி நீளம் கொண்ட எஞ்சின் ஒன்றை இதில் அமைத்திருக்கிறார்கள். மாடி வைத்த வீட்டின் உயரம் என்று வைத்துக் கொள்ளுங்களேன்! 5000 குதிரைச் சக்தி கொண்டது இதன் வேகம். அதாவது ஐந்து பிராட்கேஜ் எஞ்சின்களின் சக்தி சேர்ந்தால் எவ்வளவு சக்தி கிடைக்குமோ அவ்வளவு சக்தி. நானூறு வாகன்களில் அடங்கக்கூடிய 7000 டன் எடையுள்ள பொருள்களை இந்தக் கப்பலில் ஏற்றலாம்.

விசாகப் பட்டணம் துறைமுகத்துக்குத் தென் மேற்காக அமைந்திருக்கிறது இந்த இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை. இந்தியாவின் மிகப் பெரிய தொழிற்சாலைகளில் இது ஒன்று என்று கூறலாம். 172 ஏக்கர் நிலப்பரப்புக் கொண்ட இடத்தில் இந்தத் தொழிற்சாலை அமைந்திருக்கிறது. கிட்டத்தட்ட 5000 எஞ்சினியர்கள், தொழில் நுணுக்க நிபுணர்கள், தொழிலாளர்கள் இங்கே வேலை செய்கிறார்கள், கப்பல் கட்டுவதற்குத் தேவையான மின்சாரப் பிரிவு நிலையம், கொல்லுப் பட்டறைகள், ஆயுதச் சாலைகள், கப்பல் சாரங்கள் என்று எல்லாம் இங்கே விரிவாக்கப் பட்டுள்ளன.



(படம் - 4): கப்பல் தளத்தின் டிஸைன் செக்ஷன். இங்கேதான் மாதிரிக் கப்பல்கள் செய்யப்படுகின்றன.





(படம் - 5):
தாமாகவே அறுக்கும்
மின்சார யந்திரங்கள்.

★

(படம் - 6)
யந்திரச் சாலையில் உள்ள
அழுத்தும் யந்திரம்.

இப்பொழுது தொழிலாளர்களுக்கான குடியிருப்பு வசதிகள், பள்ளிக்கூடங்கள் முதலியனவற்றை இன்னும் அதிகமாக்கப்போகிறார்களாம்.

முன்பெல்லாம் ஒரு கப்பல் கட்டி முடிக்கச் சாதாரணமாக 25 மாதங்கள் ஆகுமாம். ஆனால் இப்பொழுது இந்துஸ்தான் கப்பல் கட்டும் ஸ்தாபனத்தில் இதற்கு 18 முதல் 20 மாதங்களே பிடிக்கின்றன. இது இன்னும் குறையும் என்று எதிர்பார்க்கிறார்கள்.

ஆண்டு தோறும் கப்பல் கட்டும் செலவில் 60 சத விகிதம் அந்நிய நாட்டுப் பொருள்களை வாங்குவதற்குப் போய்விடும். பாக்கி 40 சத விகிதமே உள் நாட்டுப் பொருள்களுக்கும் கூலி முதலான செலவுகளுக்கும் ஆகும். ரூர்கேலா, பிலாய்,

துர்க்காபூர் போன்ற இடங்களில் உருக்குத் தொழிற்சாலைகள் வேலை செய்யத் தொடங்கி, எஃகுத் தகடுகள் கிடைக்கத் தொடங்கினால், இன்னும் 15 சத விகிதம் அந்நிய நாட்டுக்குப் போவது குறையும். இப்பொழுதே 10 கோடி ரூபாய் போல அந்நிய நாடுகளுக்குப் போகாதவாறு மிச்சப்படுத்தி யிருக்கிறார்கள். அத்துடன் மட்டுமா?

முன்பு குறிப்பிட்டபடி 5000 ஊழியர்கள் (எஞ்சினியர், தொழில் நுணுக்கம் பயின்ற தொழிலாளர்கள்), கப்பல் எஞ்சினியரிங் கற்ற மாணவர்கள் அனைவரையும் இங்கே வேலைக்குத் தயார் செய்து, எடுத்துக் கொண்டும் வருகிறார்கள்.

இளைஞர்களுக்குப் பல வகை வேலைகளில் பயிற்சியும், பயிற்சி பெற்றவர்களுக்குத் திறமையையும் வளர்த்து, தன்னையே பெரிதாக வளர்த்துக்கொண்டு வருகிறது இந்தத் தொழில்.

மாணவர்கள் இனி வெறும் குமாஸ்தாக்களாக இருக்கவேண்டியதில்லை. புதிய பாரதத்தின் நவயுகச் சிற்பிகளாக விளங்கலாம்.

இந்துஸ்தான் கப்பல் கட்டும் தொழிற்சாலை புதிய பாரதத்தின் ஒரு தூண். இந்தியாவின் இயற்கைத் துறைமுகத்தில் அமைந்துள்ள இந்துஸ்தான் கப்பல் தளத்தின் பகுதிகளைப் படங்களில் பாருங்கள்.

**புகைப்படங்கள்: இந்திய சர்க்கார் செய்தி இலாகா**



(படம் - 7):

'இன்டியன் இன்டஸ்ட்ரீ' என்ற கப்பலை எல்லாச் சௌகரியங்களும் கொண்ட நீண்ட ஜெட்டியில் நிறுத்திப் பொருத்துகிறார்கள்.

# திறமையின் சிறப்பு

'பூவண்ணன்'



கல்லைச் சிற்பி கண்டதும்
கண்ணைக் கவரும் சிற்பமாய்க்

கல்லை மாற்றி அமைக்கவே
கண்ட மக்கள் போற்றினர்.

மண்ணைக் குயவன் கண்டதும்
மக்கள் தாகம் தீர்த்திடும்

தண்ணீர் வைக்கும் குடமதாய்
மண்ணை நொடியில் மாற்றினான்.

கரம்பு நிலத்தை உழவனும் கண்டு நன்று யுழைத்துமே
கரும்பும் நெல்லும் விளைந்திடும் கழனி யாக மாற்றினான்.
பேதை யான ஒருவனைப் பெரிய அறிஞன் கண்டதும்
ஓதி உணரச் செய்துமே மேதை யாக மாற்றினான்.

திறமை யுள்ள மனிதரைச்
சேர்ந்த பொருள்கள் யாவுமே
சிறந்த நிலையை உற்றிடும்
சிறப்பும் புகழும் பெற்றிடும்.



# ஆகாய விமானம்

'தமிழழகன்'



நீந்தி நீந்திப் போகுது பார், மேகத்திலே;—விமானம்,
நெளிந்து நெளிந் தோடுது பார், வேகத்திலே!
ஊர்ந்து ஊர்ந்து திரியுதுபார், உயரத்திலே;—விமானம்,
உயர உயரச் சாயுதுபார், சிகரத்திலே!
சேர்ந்து சேர்ந்து பறக்குதுபார் கூட்டத்திலே;—விமானம்,
சென்று சென்று திரும்புதுபார், மூட்டத்திலே!
கூர்ந்து கூர்ந்து மறையுதுபார், தூரத்திலே;—விமானம்,
கொழும்புப் பட்டணம் போகுதுபார் இந் நேரத்திலே!

# பத்துக் கட்டளைகள்

லெமன்

கட்டாய மாகவே கருக்கலில் சுருக்கவே
கணக்காய் விழிக்க வேண்டும்;
கடுங்குளிரை வையாமல் கலவரம் செய்யாமல்
கருத்தாய்க் குளிக்க வேண்டும்—பின்பு
சிட்டாக ஓடியே சிறந்தடித் தாடையே
சீராய் உடுக்க வேண்டும்;
சிகைவாரி விடலின்றிச் சீறிவிழு வோர்களைச்
சிரிப்பாய் அடிக்க வேண்டும்—வந்து
பட்டாலும் சுட்டாலும் பட்டாசு பலதினுசு
பலமாய் வெடிக்க வேண்டும்;
பட்சணம் அஜீரணம் பண்ணினும் பலபேர்க்குப்
பரிசாய் அளிக்க வேண்டும்—சுற்று
வட்டாரம் எங்கும்நம் வாணவே டிக்கையே
வனப்பாய் இருக்க வேண்டும்;
வைக்கின்ற வெடியெலாம் வாய்புகைய நிற்காமல்
வலுவாய் முழக்க வேண்டும்—சற்றுச்
செட்டாகத் தீவாளி செய்யும்சீ மான்களைச்
செருக்காய் மடக்க வேண்டும்;
சேராத தோழர்க்கும் செலவற்ற வாழ்த்துக்கள்
செவ்வையாய் விடுக்க வேண்டும்—இளம்
பட்டாள மக்களின் பண்டிகையாம் தீவாளி
பாங்காய் நடக்க இவையே
பத்துவிதக் கட்டளைகள் பாலர்கைக் கொள்கவே
பாட்டாகப் போட்ட படியே!




நீலவேணி
கதை ஜனு
படம் பாபு
காந்தார தேசத்து அரசர் கங்காதரர். அவருடைய ஒரே மகன் குமார சிம்மன். அழகே உருவானவன். கல்வி, கேள்விகளில் வல்லவன். நாளெல்லாம் கவிதை இயற்றுவதிலேயே காலம் கழித்து வந்த மகனைக் கண்டு கவலை அடைந்தார் மன்னர். குமரன் வீரன் தான். ஆனால் அரசாங்க அலுவல்களில் அவன் கவனம் செல்லவில்லை. ஒரு நாள்..
நீ இப்படிச் சோம்பேறியாக இருந்தால், பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பாற்றுவது எப்படி? நாட்டை அரசாட்சி செய்வது எப்படி?
இந்தத் தொல்லை தரும் அரச பதவியே எனக்கு வேண்டாம்!
அப்படியானால் நீ இந்த நாட்டிலேயே இருக்க வேண்டாம். கண் காணமல் கடல் கடந்து போய்விடு!
விடுதலையென்று மகிழ்ந்த குமரன் தந்தையிடம் விடை பெற்றுக் கப்பலில் புறப்படுகிறான். நடுக்கடலில்....
கப்பல் புயலில் அகப்பட்டுத் தத்தளித்து மூழ்கி விடுகிறது.
குமரன் ஒரு மரத்தைப் பற்றிக்கொண்டு மிதக்கிறான்..
அலைகளால் ஒதுக்கப்பட்டுக் கரை சேருகிறான் குமரன்
எழுந்து நடக்கவாரம்பிக்கிறான். கோட்டைகள் தெரிகின்றன.
ஊருக்குள் நுழைந்ததும் அவலட்சணமான அந்நாட்டு மக்கள், அவனைக் கண்டு பயந்து ஓடுகிறார்கள். கதவுகளை மூடுகிறார்கள்.
காரணம் புரியாத குமரன் பசியால் பரிதவிக்கிறான்.


நகருக்கு வெளியேயுள்ள சோலையில் வனபோஜனம் நடக்கிறது. குமரனைக்கண்டு யாவரும் ஓடுகிறார்கள்
பசியோடிருந்த குமாரன் அவர்கள் விட்டுச்சென்றவற்றைச் சாப்பிடுகிறான்
தனிமையில் நொந்து ஒரு மலைமீது ஏறி நின்றுபார்க்கிறான் கீழே கிராமம் தெரிகிறது.
அதை நோக்கிப்போகிறான். திடீரென்று சிங்கத்தின் கர்ஜனை. ஒரு குள்ளன்மேல் சிங்கம் பாய்கிறது.
வாளை உருவிச் சிங்கத்தைத் தாக்கிக் கொல்லுகிறான் குமரன்.
என்னைக்கண்டு ஏன் இப்படி எல்லோரும் பயந்து ஓடுகிறார்கள்?
எங்கள் முதாதையர் சொல்லியிருக்கிறார்கள், "அந்நிய நாட்டிலிருந்து கோர நுபமுடைய ஒருவன் இந்நாட்டிற்கு வருவான். அவனால் உங்கள் நாட்டினர் எல்லோருக்கும் ஆபத்து" என்று. இது வரை உன் போல் கோரருபி ஒருவரும் வந்ததில்லை. அதுதான் காரணம்!
எங்கள் நாட்டில் எப்பொழுதும் அழகுதான் முக்கியம். அதிக அழகுள்ளவர் (குநபி) அரசராகவும், அதன்பின் படிப்படியாக அழகிய வர் மந்திரி, பிரதானியாகவும் இருப்பார்!
அரசரைக்காண விரும்புவதாகச் சொன்ன குமரனை ஒரு கிழவனிடம் கூட்டிச்செல்கிறான் குள்ளன்.
நான் மன்னருக்கு ஒரு ஓலை அனுப்புகிறேன்!
அரசரிடம் செல்வாக்குள்ள கிழவன், அரசனைக் குமரன் காண, ஓலை அனுப்புகிறான்.
மன்னரிடமிருந்து பதில்
காணச்சகிக்கமுடியாத உருவத்தையுடைய அந்நியனுக்குப்பேட்டியளிக்கமுடியாது!
ஒரு நாள் யதேச்சையாகக் குமரன் முகத்தில் கரி அப்பிக்கொண்டது!
ஆ!! இப்பொழுது உன்னிடம் அழகு உண்டாகிவிட்டது. இப்போது உனக்குப்பேட்டியளிக்க மன்னர் மறுக்கமாட்டார். மறுபடியும் ஒரு லிகிதம் அனுப்புகிறேன்!!
குமரனுக்கு மன்னர் சபையில் நல்ல வரவேற்பு. மன்னன் குமரனுடைய சாமர்த்தியமான பேச்சுகளில் மயங்கி அவனைத் தன் மந்திரிகளில் ஒருவனாக்கிக்கொண்டார்
2


முகத்தில் கரியைப் பூசிக்கொண்டிருப்பது மிகச் சங்கடமாயிருந்தது.
ஒரு நாள் வெளியே போயிருந்த போது, மழைபெய்து குமரன் முகத்திலிருந்த கரி அழிந்துவிட்டது.
அதோ பார்! அவன் மறுபடியும் குருபியாகிவிட்டான்!!
உண்மை அரசருக்கு எட்டுமுன், அரசரிடம் ரஜா கேட்கிறான் குமரன்.
உன்னைப் பிரிவது எனக்கும் கஷ்டமாகத்தான் இருக்கிறது. பரவாயில்லை. வேண்டிய செல்வத்துடன் நீ ஊர் சென்று வரலாம். 3 மாதத்தில் திரும்பிவிடு.
தான் கொண்டுவந்த செல்வத்தை கிராமவாசிகளுக்குக் கொடுக்கிறான்.
நீ, எங்களுக்குச் செய்த உதவிக்காக உனக்குக் கடல்சந்தையைக் காண்பிக்க விரும்புகிறோம்!
கடற் சந்தையைப் பற்றி அறியாத குமரன், அதைப்பற்றிக் கிராமவாசியைக் கேட்கிறான்.
ஏழு ஆண்டுகளுக்கு ஒருமுறை கடலுக்குள்ளிருந்து ஒரு சந்தை மேலே மிதந்து வரும். கடல்வாழ் மக்கள், முத்து, பவழம், மணி இவற்றைத் தானியங்களுக்கு மாற்றிக்கொள்வார்கள். அங்கே போகப் பல ஆபத்துகளைக் கடந்துசெல்ல வேண்டும்.
வீரத்தை விரும்பும் குமரன் கடல்சந்தைக்குப் புறப்பட, யாவரும் கடற்கரையை அடைகிறார்கள்.
அதோ! சிவப்பு நிறப் பறவை. சந்தை கூடிவிட்டது. நாம் புறப்பட ஏற்பாடு செய்யலாம்!
கிராமவாசிகள் படகில் பிரயாணம் தொடங்கினர்.
முதல் நாள். ஒரே மூடு பனிக்குள் படகு போகிறது
இரண்டாம் நாள் கடுமையான புயல்
மூன்றாம் நாள். திடீரென்று கடல் நீர் நெருப்புப்பற்றி எரிகிறது.


மூன்றாம் நாள் மாலை, தூரத்தில் மாட மாளிகைகள் கொண்ட நகரம் தெரிகிறது.
நகரத்தின் தெருக்களில், அழகிய நாகலோகப் பெண்கள், பவழம், முத்து, இவற்றை விலை கூறிக்கொண்டிருந்தார்கள்.
குதிரைமீது வந்து கொண்டிருந்த நாகலோக இளவரசன் குமரனைப் பார்க்கிறான்.
இவன், உயர்ந்த கம்பீர உருவத்தைப் பார்த்தால், அந்த நாட்டைச் சேர்ந்தவனாகத் தோன்றவில்லை. விசாரிக்கலாம்.
உன் உருவத்தைப் பார்த்தால், நீ அந்த அவலட்சண நாட்டானாகத் தோன்றவில்லையே! நீ யார்?
குமரன் தன் வரலாறு முழுவதையும் இளவரசனிடம் கூறுகிறான்.
நல்ல வேடிக்கை! முதலில் உன் முகத்திலுள்ள கரியைத் துடை!
கரியைத் துடைத்தபிறகு அவன் அழகைக் கண்டு வியக்கிறான் அரசகுமாரன்.
இவ்வளவு அழகுள்ள நீ, அந்த குருபிகளிடம் இவ்வளவு காலம் வாழ நேர்ந்தது மிகவும் வருந்தத்தக்க விஷயம் தான். என் நாட்டிற்குப் போகலாம். என் தகப்பனார் உன்னைக் கண்டு சந்தோஷமடைவார்!
ஓ, அதற்கென்ன. நான் உங்களுடன் இப்பொழுதே கிளம்பத் தயார்.
பக்கத்திலிருந்த குதிரையில் குமரன் ஏறிக்கொள்ள இருவரும் கடற்கரை அடைகிறார்கள்.
கடல் தண்ணீர் பிரிந்து வழிவிட, இரண்டு குதிரைகளும் வெகு வேகமாகக் கடலுக்குள் செல்லுகின்றன.
குமரா! இது தான் எங்கள் நாகலோகம்!


அரண்மனையில், குமரனைத் தந்தைக்கு அறிமுகப்படுத்துகிறான் இளவரசன்.
நீ கவி பாடுவாய் என்பதையறிந்து மகிழ்கிறேன். நீ கடல்சந்தை முதலியவற்றைக் கண்டதிலிருந்து, நாகலோகம் வந்து சேர்ந்தவரை ஒரு கவிதையாகப் பாடு பார்க்கலாம்!
தான் கண்ட அதிசயங்களையும், நாகலோக இளவரசி நாகினியின் அழகையும் பாட்டாகப் பாடுகிறான் குமரன்.
அவன், இளவரசியை மணக்க விரும்புவதறிந்து, அரசன் நாகினியைக் குமரனுக்குக் கல்யாணம் செய்துவைக்கிறார்.
நாகினியும் குமரனும் மீனின் மேல் ஏறிக்கடல் அதிசயங்களைப்பார்த்துவரும் போது, வழியில் காந்தார நாட்டுக் கப்பல் மூழ்கிக்கிடக்கிறது.
என் நாட்டிற்கு ஏதோ ஆபத்து வந்துவிட்டதாக எனக்குத் தோன்றுகிறது. நான் ஒரு தடவை நாடு சென்று வரவேண்டும்.
உங்கள் விருப்பப்படி செய்யுங்கள். உரிய காலம் வரும் பொழுது திரும்பிவிடலாம்
இந்த மந்திரவாளும், குதிரையும் உள்ள வரை, யாராலும் உங்களை வெல்ல முடியாது. ஒன்று காணாவிட்டாலும், சக்தி போய்விடும். போய், ஜயத்துடன் திரும்பி வாருங்கள்.
குதிரை நீலவேணியில் ஏறி, கடலைவிட்டுப் புறப்பட்டு நாட்டையடைகிறான் குமரன்.
நாடு பகைவர்களால் கைப்பற்றுப்பட்டுவிட்டதையும், தன் பெற்றோர் காட்டில் ஒளிந்துவாழ்வதையும் ஒரு குடியானவன் மூலம் அறிந்து, பெற்றோரைக்காணக் காட்டிற்குப் போகிறான். காட்டில் பெற்றோரைக் காண்கிறான் குமரன்.
குமரா! வந்துவிட்டாயா? இனிக்கவலையில்லை!
அப்பா, நீங்கள் சுகமாக இருக்கிறீர்களா?!
நாட்டை மீட்பது என் பொறுப்பு நாளைக்கே, படையுடன் சென்று பகைவரை முறியடித்து வருகிறேன்!


நாட்டைக்காப்பாற்றிய பின் வெற்றிக்கோலாகலத்தில் மகிழ்ந்திருக்கிறான் குமரன். குதிரையைக் காக்க மறந்துவிடுகிறான்.
மறுநாள் குதிரையைக் காணோம்!
குதிரையை இழந்த எனக்கு இனி வெற்றி கிடைக்காது! பகைவர் மறுபடியும் தாக்கினால் என்ன செய்வது?
தோல்வியுற்று ஓடிய பகைவர் மறுபடியும் படையுடன் வருகின்றனர். குமரன் கவலையுறுகிறான்
என்ன! குமரா! ஏன், வருத்தமாக இருக்கிறாய்
பழைய நண்பன் குள்ளனைக் கண்டு, தன் நிலையைக் கூறுகிறான் குமரன்.
அதைப்பற்றிய கவலையை விட்டுவிடு. இன்னும் 7 நாட்களில் உன் குதிரையைக் கொண்டுவருகிறேன்!
குள்ளனுக்கு மரஞ்செடிகளுடன் பேசும் சக்தி உண்டு. அவன் ஒரு காட்டில் போய் நிற்கிறான்.
உங்களில் யாருக்காவது குதிரை போன வழி தெரியுமா?
மலையரசன் மஹிந்தன் குதிரையை இந்த வழியாகத்தான் திருடிச்சென்றான் நாங்கள் பார்த்தோம்!
குள்ளன் மலையரசன் இருப்பிடமான எரிமலையை அடைகிறான்.
அதன்மேல் ஏறி நெருப்பைக் கக்கும் அதன் வாயினுள் குதிக்கிறான்
எரிமலைக்குள் குதித்துக் கீழே, கீழே போய் மலையரசன் அரண்மனையை அடைகிறான் குள்ளன்.
அரசே நான் ஒரு பெரிய மந்திரவாதி. உங்களிடம் பணிபுரிய வந்திருக்கிறேன்!
உன்னைப்போல் பலர் வந்துவிட்டார்கள். என்னிடமுள்ள அபூர்வமான முரட்டுக் குதிரையை யாராலும் அடக்கமுடியவில்லை. நீ, அதை அடக்கினால்தான் உன்னை நம்பமுடியும் !
அது மிகவும் உயர்ந்த குதிரையாகத்தான் இருக்கும். கொண்டுவரச் சொல்லுங்கள்! ஒரு நொடியில் அடக்கிவிடுகிறேன்!!
குதிரையை நாலைந்துபேர் கயிற்றால் கட்டி இழுத்துவந்து நிறுத்தினார்கள்....


குள்ளன் தன் இடுப்பிலிருந்து ஒரு பொடியை எடுத்துத் தூவுகிறான்..
அரசன் உட்பட அவ்வளவு பேரும் மயங்கி விழுந்து விட்டனர். குள்ளன் குதிரையின் காதருகே போய்..
உன் எஜமானன் உன்னைப் பிரிந்து வருந்தோடிருக்கிறான். உடனே புறப்படு
உடனே குதிரை குள்ளனுடன் எரிமலைக் குள்ளிருந்து பறந்து செல்கிறது.
கவலையோடிருந்த குமரனிடம், குதிரையோடு வருகிறான் குள்ளன்!
குமரா! உன் குதிரை வந்து விட்டது. கவலையை விடு!!
யுத்தம் மும்முரமாகி, நம் படைகள் சரணாகதியடையும் நிலைக்கு வந்து விட்டார்கள். இந்தச் சமயத்தில் நீ செய்த உதவியை மறக்கமாட்டேன்.
நீலவேணியின் மேல் ஏறி, மந்திர வாளுடன் போர்க்களத்தில் நுழைகிறான் குமரன்...
குதிரையும், வாளும் இருக்கும் போது குமரனை யாரால் வெல்ல முடியும்? பகைவரைப் பறந்தோட விரட்டுகிறான் குமரன். வெற்றிவிழாக் கொண்டாடுகின்றனர்
இளவரசர் வாழ்க!!
இளவரசனுக்கு ஜே!!
புகழ், பொருள், வெற்றி எல்லாமிருந்தும் குமரசிம்மன் உள்ளத்தில் அமைதியிலை. மனைவியின் நினைவாக இருக்கிறான். தினமும் கடற்கரையில் உட்கார்ந்து காலம் கழிக்கிறான்.


ஒரு நாள், அழகிய இரண்டு குழந்தைகள் கடற் கரையிலிருந்து, அவனை நோக்கி வருகின்றன...
குழந்தைகளைக் கண்டு குமாரனுக்கு ஆனந்தம் பொங்குகிறது.
குழந்தைகளுடன் மகிழ்ந்திருக்கும் போது, பெரிய மீனின் மேல் ஏறி நாகினி கரைக்கு வருகிறாள்.
நீங்கள் நாடு சென்றிருக்கும்போது பிறந்த உங்கள் குழந்தைகள். இவர்கள் இரட்டைக் குழந்தைகள்!
உங்களைப் பிரிந்து இனிமேல் என்னால் இருக்கமுடியாது. நானும் நாக லோகத்திற்குத் திரும்பி வருகிறேன்!
குமரன் தன் நண்பன் கள்ளனை நினைக்க, கள்ளன் அங்கே தோன்றுகிறான்.
நண்பா! நான், என் மனைவி, குழந்தைகளுடன் செல்லும் விஷயத்தை, என் தகப்பனாரிடம் சொல்லிவிடு
மனைவி, மக்களுடன் கடலில் மறைந்துவிடுகிறான் குமரசிம்மன்!
சுபம்



# பொழுது போக்கு

★



★

## புலியும் மனிதனும்

இது ஒரு பாதாளச் சிறை. மொத்தம் 64 அறைகள் இருக்கின்றன. ஆள் ஒருவன் கையில் கத்தியோடு புலியைத் தாக்கும் கருத்துடன் ஒவ்வோர் அறையிலும் நுழைந்து போகிறான். புலி மனிதன் இருக்குமிடத்தைத் தேடி அப்படியே வருகிறது. ஒரு தடவைக்கு மேல் வந்த வழி போகாமல் ஒருவரை ஒருவர் சந்திக்காமல் ஒரே சமயத்தில் புறப்பட்டு, ஒரே வேகத்தில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள். அவர்கள் எந்த வழியாகப் போயிருப்பார்கள்?

## புத்தகத் தட்டு

இந்த அலமாரியில் ஐந்து அடுக்குகள் இருக்கின்றன. புத்தகங்களின் முதுகில் எழுத்துக்கள் இருக்கின்றன. அவற்றை ஒழுங்காக அடுக்கினால் ஐந்து தட்டுக்கள் ஒவ்வொன்றிலும் என்னென்ன இருக்கின்றன என்று தெரியும். வரிசையாக ஒழுங்குபடுத்தி வைத்துப் பாருங்கள்.

விடை: 64-ஆம் பக்கம்.



# போட்டோ க்விஸ்







இந்தப் புகைப்படங்களை வைத்துக் கொண்டு புதிர் போடுகிறார் புகைப் படக்காரர். படத்தைப் பார்த்து என்ன பொருள்கள் என்று சொல்ல வேண்டும். யார் அதிகமாகக் கண்டு பிடிக்கிறார்களோ அவர்களே கெட்டிக்காரர்கள்!








5



6



7



8



9



10



11

தெரியாத விடை
களுக்கு 64-ஆம்
பக்கம் பாருங்கள்



12

# சித்திரக் கட்டம்

க. திருநாவுக்கரசு




இ. வ. என்றால் இடமிருந்து வலம். மே. கீ. என்றால் மேலிருந்து கீழ். கட்டத்தைச் சூழ்ந்து வரையப்பட்டுள்ள படங்களைப் பார்த்து உள்ளே இருக்கும் கட்டங்களைப் பூர்த்தி செய்யவேண்டும்.

—விடைகள்: 64-ஆம் பக்கம்.

# ஓடும் ரெயிலில்...

1 க்குப் போனான். கள்
எங் K இருக்கின்றன என்று K ட்டான்.
க க்காரப் யன் அவனை 1 1,00,00,000க்கு
அழைத்துப் போனான். ஒவ்வொரு
மாகக் யில் எடுத்துப் பார்த்தான். அவன்
கள் வியப் க் காட்டின. அழகான ப்
; க ப் ; வர்ணப் போட்ட !
அவன் தி த்தான். கள், க்
கள், வரும் கள் எல்லாம் இருப்
பதைக் டு அவனுக்கு ப் இருந்தது.
அவனுக்கோ க்குப் போக ஆகிவிட்
டது. வெறும் போனால் தம்பி யும்
தங் க் ணியும் ஏமாந்து போவார்களே!
அவன் க சியாக மந்திர என்ற ஒன்றை
V லை கொடுத்து வாங்கினான். அதைக் டால்

தம்பிக்கும் தங் க்கும் சண்  தான் உண்டாகும் என்று எண்ணி, வேறு தை எடுக்கப் போனான். ஆனால், "என்னை எடுத்துக்கொள்!" என்று 1 குரல் கேட்டது.   தி த்துத் திரும்பிப் பார்த்தான். அட்  யில் ஒரு ப்   போடப்பட்டிருப்பதைக் டான். பாதி னும் பாதி  உருவமுமாக இருந்த அந்தப்  பார்க்க அழகாக இருந்தது. மறு யும் அவன் யை நீட்டினான். மறு யும் 1 குரல் கேட்டது. இப்பொழுது  குரல் கேட்க லை. ஒரு  குரல் கேட்டது. "தொடாதே! மந்திர த்துடன் க்குப் போ! தொட்டால் உன் காலை ஒடித்து விடுவேன்" என்று அட் ப் படத்து  மிரட்டினான்.

  ஒரு நிமிஷம் தயங்கினான். அடுத்த நிமிஷம் 2 யாலும் 2 ளையும் எடுத்

துக் கொண்டு க்கு ஓடினான்.

த்தாகி விட்டது. க் ஏறி ஓடி
வருவதற்குள் ஊதியவாறு ர்ந்து விட்
டது. விட லே. 4 லில் ஓடி,
வண்டிக் யைப் த்துக் கொண்
டான். னல், பாவம், படம் போட்ட
, படம் போட்ட 2 ம்
ஒன்றை 1 க் போவது போல் கீழே
விழுந்துவிட்டன. யில் ஏறியவன் எப்
க் குதிக்க யும்? யும் க்
ணியும் சண் போடு களே
என்று க உட் ந்தான்.



# கோழி போன வழி




குஞ்சைப் பார்த்துக்கொள்ளச் சொல்லிவிட்டு, கோழி தீனி கொரிக்கப் போயிருந்தது. சேவல் காவலுக்குப் போனது. வழியில் ஓநாய் இருக்கிறதே! அது இருக்கும் இடத்துக்குப் போகலாமா? வேறு ஏது வழி? எப்படியோ வழி கண்டுபிடித்துப் போய்விட்டது. எங்கே, அதைக் கண்டு பிடியுங்கள், பார்க்கலாம். அது சரியான வழிதானு என்று வேறு யாரிடமாவது காட்டலாம்.

# இது என்ன ஆட்டம்?



ஆட்டக்காரர்களின் பலவித நிலைகளை அவர்கள் ஆடும்போதே பார்த்து எழுதியிருக்கிறார் நமது சித்திரகாரர். அவர்கள் நிற்கும்




கோலத்தைப் பார்த்து அவர்கள் என்ன ஆட்டம் ஆடுகிறார்கள் என்று நீங்கள் கண்டுபிடிக்க வேண்டும். உங்கள் விடை சரிதானா என்று 64-ஆம் பக்கத்திலுள்ள விடையைப் பாருங்கள்.

# புள்ளி சேர்த்துப் பாருங்கள்




## வர்ணம் பூசிப் பாருங்கள்



புள்ளி வைத்த பகுதிகளுக்கு வர்ணம் பூசிப் பாருங்கள்.

—விடை: 64-ஆம் பக்கம்.

# வெட்டி ஒட்டிப் பார்!



சிதறிக் கிடக்கும் துண்டுப் படங்களைக் கத்தரித்து எடுத்து, சரிவர ஒட்டிப் பாருங்கள். பல அழகிய படங்களைப் பார்க்கலாம்.

# விடுகதைப்



ஒளியுடைய முகமுண்டு மனிதன் அல்ல;
உற்றமலர் அணிவதுண்டு மங்கை அல்ல;
தெளிவுடையஎண்ணெயுண்ணும் சேயுமல்ல;
சேர்ந்ததண்டு தானுண்டு மரமும் அல்ல;
களிபெருக வணங்குவார் சாமி அல்ல;
கழற்றுவார் பூட்டுவார் நகையும் அல்ல;
புளியினால் மிகவிளங்கும் குழம்புமல்ல;
புகழ்கண்ணன் அன்பர்களே புகலு வீரே.

★

மருந்துண்டு நோயில்லை
காகிதமுண் டெழுத்தில்லை
திரியுண்டு விளக்கில்லை
வெடிப்புண்டு பிளவில்லை.

★

காலோ வெளுப்புக் கறுப்புத் திருமேனி
மேலே தலையோ மிகுசிவப்பு - ஏலஅதைப்






# பாடல்கள்



பட்டிக்குள் வைப்பார்
பிரித்தேற்றி விட்டாலோ
கொட்டுமடா பூவின் தலை.

★

கோயிலுக்குப் போனேன்
கும்பிட்டு நின்றேன்
அற்புதம் கண்டேன்
ஆனந்தம் கொண்டேன்
பூவில்லா இலையைப்
போற்றிவைத் தார்கள்.
பழமில்லாக் காயைப்
பரப்பிவைத் தார்கள்.
விதையில்லாப் பழத்தை
வேண்டிவைத் தார்கள்.
எண்ணெயிலாத் தீபம்
ஏற்றிவைத் தார்கள்.



# பொழுது போக்கு - விடைகள்:



## மனிதனும் புலியும்

புள்ளி வைத்த கோடு புலிபோன வழியைக் காட்டுகிறது. நேர்க்கோடு மனிதன் போன வழியைக் காட்டுகிறது. இருவரும் ஒரே சமயத்தில் ஒரே வேகத்தில் சென்றதால் ஒருவரை ஒருவர் சந்திக்கவே இல்லை. ஒருவர் போன வழி குறுக்கிட்டிருக்கலாம். ஆனால் ஒரு தடவை போன வழி மறுமுறை போகவில்லை.

**புத்தகத் தட்டு :** (1) இராம காதை. (2) பாரதம். (3) பெரிய புராணம். (4) திருவாசகம். (5) திருப்புகழ்.

**போட்டோ க்விஸ் :** (1) கொம்பு பலூன். (2) பர்மாக் குடை. (3) சைக்கிள் சக்கரமும் எண்ணெய்க் கானும். (4) வாழையிலை: (5) இன்ஞ்செக்ஷன் மருந்து ஆம்பியூல்ஸ். (6) சலவைக் கல் ஜன்னல் (புராதனக் கோட்டைகளில் உள்ளது) (7) தேவாலய தீபம். (8) மாதா கோயில் முகப்பு. (9) கோழியின் கண். (10) வரிக் குதிரையின் உடல். (11) மீனவர் வலை. (12) யானை வெள்ளி வாகனம்.

**சித்திரக் கட்டம் :** இடமிருந்து வலம். 1. எறும்பு. 3. ஒட்டகம். 5. தும்பி. 6. ஓணான். 10. கல். 11. பல்லி. 12. வீணை. 14. ஆடு. 16. குடை. 17. வில். 18. மான்.

**மேலிருந்து கீழ் :** 1. எருது. 2. புலி. 4. கண்ணாடி. 7. காது. 8. அணில். 9. சல்லடை. 10. கணை. 12. வீடு. 13. சாவி. 14. ஆமை. 15. மீன்.

**இது என்ன ஆட்டம்?:** பக்கம் 58. (மேல்) ஹர்டில்ஸ் ரேஸ் (இடது பக்கம்) ஈட்டி எறிதல். (வலது பக்கம்) வாலி பால் (கீழ்) கோல் கீப்பர். பக்கம் 59. (மேல்) நீச்சல். (இடது பக்கம்) கிரிக்கெட் மட்டை அடிப்பவர் (வலது) டக்-அப்-வார் - கயிறு இழுத்தல். (கீழ்) டென்னிஸ் ஆட்டம்.

**புள்ளி சேர்த்துப் பாருங்கள்:** கழுதை வாலில் பட்டாஸ் வெடி.

**வர்ணம் பூசிப் பாருங்கள்:** புதரில் புலி நிற்கிறது.

**விடுகதைப் பாடல்கள்:** 1. குத்துவிளக்கு. 2. பட்டாஸ். 3. பூ மத்தாப்பு.

4. வெற்றிலை, தேங்காய், வாழைப்பழம், கற்பூரம்.

# பீங்கான் கோப்பை

சீதாதேவி

ஔரங்கசீப் சக்கரவர்த்தி ஆடம்பரமற்ற வாழ்க்கை நடத்தினார் என்பது தெரிந்ததே. ஆனால், அவர் சாப்பிடும்போது உபயோகித்த பீங்கான் பாத்திரங்களின் விலையைக் கேட்டால் மயங்கி விழவேண்டியதுதான்! ஒரு கிண்ணியின் விலை பத்தாயிரம் ரூபாய் முதல் இருபதாயிரம் ரூபாய்வரை பெறுமாம்! எப்படி விலை? கொஞ்சமாகத்தானே இருக்கிறது?




பீங்கான் தட்டுமுட்டுச் சாமான்கள் தயாரிப்பதில் சீனர்கள் கைதேர்ந்தவர்கள். அந்த நாட்டிலிருந்து டில்லிக்கு வரும் சீன வியாபாரிகள் எல்லோரும் முதலில் ஔரங்கசீப்பைத் தரிசித்துத் தாம் கொண்டுவந்த வேலைப்பாடு மிகுந்த தட்டுக்களையும் மற்றச் சாமான்களையும் அவருக்குக் காண்பிப்பார்கள். அவர் வாங்கியது போக, மிஞ்சியவையே பிறர் பார்வைக்கு வரும். அவற்றை முதலில் தமக்குக் காண்பிக்காமல் பிறருக்கு விற்றுவிட்டால், பாதுஷா அந்த வியாபாரியைக் கடுமையாகத் தண்டித்துவிடுவார்.

அவர் அடிக்கடி, சீன வர்த்தகர்களிடமிருந்து வாங்கிய பீங்கான் பாத்திரங்களின் மொத்த விலை இருபத்தைந்து லட்சம் ரூபாய் என்று மதிப்பிட்டிருக்கிறார்கள்! அவர் தினசரி, பழரசம் சாப்பிடும் ஒரு கிண்ணம்மட்டும் இருபதாயிரம் ரூபாய் பெறுமானம் உள்ளது! அதன் அழகு உண்மையிலேயே மெச்சக்



கூடியதுதான். அதைச் சுற்றிலும் முகம்மது நபி அவர்களின் வாழ்க்கைச் சரிதை, சித்திரமாகத் தீட்டப் பெற்றிருந்ததாம். அதைப் வைக்க, உயர்ந்த சம்பளத்தில் ஓர் உத்தியோகஸ்தனை நியமித்திருந்தார்கள். சாதாரண வேலைக்காரர்களானல், அவற்றின் மதிப்பை



பார்த்ததுதான் தாமதம்; சக்கரவர்த்தி ஆசைப்பட்டு, வியாபாரி சொன்ன இருபதாயிரம் ரூபாய் களையும் கொடுத்து அதை வாங்கி விட்டார்.

அன்றுடம், பாதுஷாவின் சாப்பாடு முடிந்தவுடனே அந்தப் பீங்கான் ஸெட்டுகளைக் கழுவிச் சுத்தம் செய்து ஜாக்கிரதையாய் எடுத்து

உணராமல் அசிரத்தையாய்க் கையாளுவார்கள்; அழகிய கோப்பைகளோ, தட்டுக்களோ, கை தவறிக் கீழே விழுந்தால் உடைந்து போய்விடும். அதனால் அக்கறையோடு கவனிக்கப் பெரிய உத்தியோகஸ்தனை அமர்த்தினார்கள்.

அவன் பெயர் குஸ்ரு. அவன் கைவிரல்கள் உறுதி வாய்ந்தவை. எதைப் பிடித்தாலும் நழுவாதவை. பலத்தோடு மென்மையும் பெற்ற விரல்கள். எவ்வளவு நுட்பமாய்க் கையாள வேண்டிய பொருளாயிருந்தாலும் அவன் அதைக் கீழே விழாமல் ஜாக்கிரதையாகச் சுத்தப்படுத்துவான்.

ஆனால், நாளை வரப்போவது இன்று நமக்குத் தெரிகிறதா? தெரிந்தால் எத்தனையோ விழிப்புடன் இருக்கலாமே. ஒரு நாள் ஆபத்து நேர்ந்தேவிட்டது. அப்பொழுது ஔரங்கசீப் தலைநகரில் இல்லை; தென்னாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெறத் திட்டமிட்டுத் திக்விஜயம் தொடங்கியிருந்தார். குஸ்ரு, வாரத்துக்கு ஒரு முறையோ பத்து நாட்களுக்கு ஒரு முறையோ, பீங்கான் பாத்திரங்களை அதன் மெருகு, புழுதியினால் அழிந்துவிடாதபடி எடுத்துத் துடைத்து வைப்பது வழக்கமாக இருந்தது; வழக்கம் போல் அவன் மக்மல் துணியால் ஒவ்வொரு தட்டையும் கோப்பையையும் எடுத்து எடுத்துத் துடைத்துக் கவிழ்த்தான்; கடைசியில் பாதுஷா பழ ரசம் சாப்பிடும் கிண்ணத்தை எடுத்தான். சனியன்போல் எங்கிருந்து வந்ததோ! ஒரு செந்தேள் கிண்ணத்தில் இருந்தது; அவனுடைய ஆள் காட்டி விரலில் கொடுக்கால் ஒரு போடு போட்டுவிட்டது. வலி பொறுக்காமல் அவன் கிண்ணத்தை நழுவ விட்டுவிட்டான். சலவைக் கல் தளமானாலும் கடினமான கல்தானே! அழகிய கிண்ணம் - ஔரங்கசீப்பின் மோகத்தைக் கவர்ந்த காந்தக் கல் - கீழே விழுந்து நொறுங்கிவிட்டது.

இந்தக் காட்சியைக் கண்ட குஸ்ருவுக்குத் தேள் கொட்டியதால் ஏற்பட்ட வலிகூடத் தெரியவில்லை. அந்தக் கிண்ணம் உடைந்






தாற்போல் அவன் உள்ளமும் பயத்தால் தூள் தூளாகச் சிதறியது. தென்னாட்டிலிருந்து திரும்பியவுடன் பாதுஷா, 'கிண்ணம் எங்கே?' என்று கேட்டால் என்ன பதில் சொல்லுவது? இது அவன் நெஞ்சை அறுத்தது. 'உடைந்துவிட்டது' என்று சொல்ல முடியுமா? வாய் மூடு முன்பே தூக்குத் தண்டனைதான் கிடைக்கும்!

குஸ்ரூ தனக்கு நேர்ந்த துன்பத்தை உறவினரிடமும் நண்பர்களிடமும் சொல்லிப் புலம்பினான். அவர்கள் எல்லோரும், ''அழுது என்ன பயன்? அது போன்ற கிண்ணம் ஒன்றைச் சீனத்திலிருந்து உடனே தருவித்துவிடு. உடைந்த செய்தியை மூச்சுக் காட்டாதே!'' என்று யோசனை சொன்னார்கள்.

குஸ்ரூ தன் சொத்துக்களையும் மனைவியின் நகை நட்டுக்களையும் விற்று, போதாததற்குத் தான் சம்பாதித்து வைத்திருந்த ரொக்கத்தையும் சேர்த்து ஒரு வியாபாரியிடம் கொடுத்தனுப்பி, உடனே சீனத்துக்குப் போய்ப் பீங்கான் கோப்பை வாங்கிவர ஏற்பாடு செய்தான்.

'பட்ட காலிலே படும், கெட்ட குடியே கெடும்' என்பதுபோல் குஸ்ரூவின் திட்டம் நினைத்தபடி வேலை செய்யவில்லை. ஔரங்கசீப் தென்னாட்டில் வெற்றி கிட்டாததால் முன்னதாகவே டில்லிக்குத் திரும்பிவிட்டார். மிகக் கோபத்துடன் யாரைக் கண்டாலும் அவர்கள்மீது சீறி விழுந்துகொண்டிருந்தார். முதல் நாள் சாப்பிடும் சமயத்திலேயே பீங்கான் கிண்ணம் உடைந்து விட்டதை அறிந்து நரசிம்மாவதாரம் எடுத்தார். ஆனால் கிண்ணத்தை வாங்கிவர ஏற்பாடு செய்திருப்பதை அறிந்து சற்றுச் சமாதானம் அடைந்தார். அப்படியும் குஸ்ரூவை வேலையைவிட்டு நீக்கிச் சிறையில் இட்டார்.

குஸ்ரூ அனுப்பிய வியாபாரி சீனத்திலிருந்து திரும்பி வரவில்லை. அந்தக் காலத்தில் இந்தியாவிலிருந்து சீன யாத்திரை செய்கிறவர்கள், மத்திய ஆசியாவைக் கடந்து தரை மார்க்கமாகத்தான் செல்லவேண்டும். வழியில் கொள்ளைக்காரர்கள் அந்த வியாபாரியைக் கொன்று, பணத்தைப் பறித்துக் கொண்டார்கள்.

வைத்த கெடு முடிந்துவிட்டது. பாதுஷா குஸ்ரூவை அழைத்து, ''நீயே நேரில் போய்ச் சீனாவிலிருந்து பீங்கான் கிண்ணத்தை வாங்கிவர வேண்டும். இல்லாவிட்டால் தூக்கு மரம் ஏறத் தயாராக இரு!'' என்றார்.

குஸ்ரூ தலை விதியை நொந்துகொண்டு டில்லியிலிருந்து புறப்பட்டான். பாதுஷா அவனிடம், ''ஊர் எல்லை தாண்டியவுடன் உயிரைக் காத்துக்கொள்ள ஓடிவிடலாம் என்று மனப்பால் குடிக்காதே! நீ திரும்பிவரும் வரையில் உன் மனைவி மக்களைச் சிறையில் வைத்திருப்பேன்; ஜாக்கிரதை!'' என்று எச்சரித்து அனுப்பினார்.

குஸ்ரூ, ''பெரிய சம்பளத்திற்கு ஆசைப்பட்டுப் புலியின் குகையில் நுழைந்துவிட்டேனே'' என்று வருந்தி, சீன யாத்திரை புறப்பட்டான்.

இந்தச் செய்தி உள்நாட்டில் மட்டும் அல்லாமல் வெளிநாடுகளிலும் பரவியது. அப்பொழுது பாரசீக நாட்டை அப்துல் ஷா சக்கரவர்த்தி ஆண்டு வந்தார். அவர்

தர்பாரில், இந்தியாவிலிருந்து போன ஒற்றர்கள் இந்தச் செய்தியைத் தெரிவித்தார்கள்.

அப்துல் ஷா துக்ககரமான இந்தச் செய்தியைக் கேட்டு மிகவும் வருந்தினர். ஒளரங்கசீப்பின் கொடுமைக்கு ஆச்சரியம் அடைந்து மூக்கின் மேல் விரலை வைத்தார். உடனே, அருகே இருந்த தம் மந்திரியிடம் சொல்லித் தம் சாப்பாட்டு விடுயில் அது போன்ற பீங்கான் கிண்ணம் இருக்கிறதா என்று விசாரிக்கச் சொன்னர்.

மந்திரி லட்சக்கணக்கான ரூபாய்கள் மதிப்புள்ள பாத்திரங்களின் இடையே, முகம்மது நபியின் சரித்திர வரலாறு தீட்டப் பெற்ற கிண்ணத்தைக் கண்டார். ''அல்லா தயை உள்ளவர். ஓர் அநாதையின் உயிரைக் காப்பாற்றினர்'' என்று சொல்லி அதை எடுத்துக்கொண்டு போய் அரசரிடம் காண்பித்தார். அரசர் உடனே ''அதைப் பத்திரமாகக் கட்டிக் குதிரைமேல் விரைந்து செல்லும் ஒரு தளபதியிடம் கொடுத்து அனுப்பு. பத்து வீரர்களுடன் இந்திய-சீனச் சாலையில் போய்க் குஸ்ருவிடம் கொடுக்கவேண்டும்'' என உத்தரவிட்டார்.

தளபதி ஒரு நிமிஷமும் தாமதியாமல் இந்திய-சீனச் சாலையை நோக்கி விரைந்தார். ஆனல் விதி குஸ்ருவுக்கு எதிராகவே வேலை செய்தது. அந்தத் தளபதி வரும் முன்பே அவன் மன நோயோடு உடல் நோயும் பீடிக்க, வழியிலேயே அநாதையாய் இறந்து கிடந்தான்.

ஒளரங்கசீப் மனசு வைத்திருந்தால் குஸ்ருவை மன்னித்திருக்கலாம். அந்த ஒரு பீங்கான் கிண்ணத்தை உடைத்ததற்காக அவன் குடும்பத்தையே பாழாக்கிய அவரும் மறைந்துவிட்டார். முன் பின் அறியாத குஸ்ருவின் துன்ப நிலைக்கு இரங்கித் தம்மிடத்தில் இருந்த கிண்ணத்தை உதவிய அப்துல் ஷாவும் மறைந்துவிட்டார். ஆனல் ஒளரங்கசீப்பின் கொடுஞ் செயல் அமாவாசை நள்ளிரவு போலப் பழியையும், அப்துல் ஷாவின் உதாரச் செயல் பௌர்ணமியின் பால் நிலவுபோலப் புகழையும் தோற்றுவித்து, நம் மனத்தில் இருவிதமான உணர்ச்சிகளைப் பதிய வைக்கின்றன!



# காட்டிக் கொடுத்த  கட்டு

**தே. பார்த்தசாரதி**

பம்பாய் மாதுங்காவில் ரமண் லால் சேட் பிரபலமாக விளங்கி வந்த ஒரு பெரிய நகை வியாபாரி. கடலலையைப்போல் செல்வம் 'ஹோ' என்று அவரைத் தேடிவந்தது; செல்வர்கள் அவரை நாடி வந்தனர். சிறு வட்டிக் கடை ஒன்றில் ஆரம்பித்து, தம் சொந்த முயற்சியால் சிறுகச் சிறுகப் பொருளீட்டி, இப்போது பெரிய வியாபாரி ஆகிவிட்டார். தாமே எப்பொழுதும் கடையில் உட்கார்ந்து அலுவல்களைக் கவனிக்க முடியாதென்று பூபதி, நந்தகுமார் ஜோஷி ஆகிய இருவரையும் உதவியாளர்களாக அமர்த்திக் கொண்டார்; கை நிறையச் சம்பளமும் கொடுத்து வந்தார்.

இரண்டு பேரும் அவருக்கு இரு கரங்கள் போலத்தான்; அவர்களின் ஒத்துழைப்பின்றித் தனலட்சுமியின் தரிசனம் தமக்குக் கிடைக்காது என்பது அவருக்கு நன்றாகத் தெரியும். ஆகவே, இருவரிடமும் பட்சபாதமின்றியே கூடியவரையில் நடந்து கொண்டார். ஆனாலும், ஜோஷியைவிடப் பூபதியிடம் அவருக்குக் கொஞ்சம் அதிகமாகவே பிரியம் உண்டு. பூபதி அதிக விசுவாசமாக உழைப்பதாக அவருக்கு ஒரு நம்பிக்கை.

அன்று கடையில் ஜோஷி இல்லை. சேட்டும் பூபதியும் மட்டுமே இருந்தார்கள்-ஆம். அப்படித்தான் அவர்கள் நினைத்துக்கொண்டிருந்தார்கள்.

சேட், பூபதியை அருகில் அழைத்து உட்காரச் சொல்லி, அவன் கையில் ஒரு தோல் பையை வைத்தார். ''இதோ பார், பூபதி! நாளைக்கே நீ 'ப்ளே'னில் மதராசுக்குப் போகவேண்டும்!'' என்றார்.

பூபதி தலையை ஆட்டினான்.

''ஜார்ஜ் டவுனில் இருக்கும் என் சிநேகிதர் துவாரகதாஸ் தமானியைப்பற்றி உன்னிடம் சொல்லியிருக்கிறேன் அல்லவா?'' என்று கொக்கி மாட்டினார் சேட்.

''ஆமாம். அவரும் உங்களைப் போல ஒரு நகை வியாபாரி என்று சொல்லியிருக்கிறீர்கள். அவருக்கு என்ன?''

''அவருக்கு ஒன்றுமில்லை. அவர் விலாசம் உனக்குத் தருகிறேன். நாளைக்குப் புறப்பட்டு நீ மதராஸ் போய் அவரிடம் இந்தப் பையைக் கொடுத்துவிடு, அவருக்குக் 'கடிதம்' போட்டிருக்கிறேன். நாளைக்கு நீ கிளம்புமுன் தந்தியும் கொடுத்து விடுகிறேன்.''

''அதற்கென்ன? தாராளமாகப் போய் வருகிறேன். பையில் என்ன வைத்திருக்கிறீர்கள்?'' என்றான் பூபதி.

சேட் சுற்று முற்றும் கண்களைச் சுழற்றினார். பிறகு தணிந்த குரலில், ''இதனுள் இரண்டு வைரக் கற்கள் இருக்கின்றன. இதைப் பத்திரமாகக் கொண்டுபோய், தமானியிடம் சேர்க்க வேண்டியது உன் பொறுப்பு'' என்றார்.

வாயைப் பிளந்தான் பூபதி. ''ஆ! வைரமா! நானா? மதராஸா? கொண்டு போய்ச் சேர்க்க வேண்டுமா?'' என்று அடுக்கினான்.

''ஆமாம்! வைரந்தான்! நீதான்! மதராஸ்தான்! கொண்டு போய்ச் சேர்க்க வேண்டியதுதான்! உன் மேல் பூரண நம்பிக்கை உண்டு எனக்கு. தயங்காமல் புறப்படு'' என்றார் சேட் சிரித்துக்கொண்டே.

இதைச் சொல்லிவிட்டுச் சேட், பூபதியை நிமிர்ந்து பார்த்தார். அவனோ எதிரிலிருந்த சேட்டைப் பார்க்கவில்லை; கையிலிருந்த பையையும் பார்க்கவில்லை. பின்? அவன் பார்வை எங்கோ லயித்திருந்தது கூர்மையாக.

''எங்கே பார்க்கிறாய்?'' என்று சேட் அதட்டினார். ''அந்தக் கதவில் என்ன இருக்கிறது அப்படி முறைத்துப் பார்க்க?'' என்றார்.

தன் நினைவு வந்தவன் போல், ''உம், என்ன? என்ன சொல்கிறீர்கள்? நான் ஒன்றையும் பார்க்கவில்லையே. ஊஹும்!'' என்று தலையாட்டினான் பூபதி.

அவன் பதற்றத்தைக் கண்டு மென்னகை பூத்தார் ஸேட். ''நான் சொன்னதெல்லாம் நினைவிருக்கிறதா? ஒழுங்காகக் காரியத்தைச் செய்து முடிப்பாயா?'' என்று கேட்டார்.

இதற்கும் பூபதியிடமிருந்து ஒரு 'தலையாட்டல்' தான் பதிலாக வந்தது!

பூபதியைக் கவலை பிடித்துக்கொண்டது. 'இந்த அப்பாவி என்னை நம்பி இவ்வளவு பொறுப்பான காரியத்தை ஒப்படைத்திருக்கிறாரே! எந்த ஆபத்தும் வராமல் ஒழுங்காக நிறைவேற்ற வேண்டுமே! பிள்ளையாரப்பா, என்னைக் காப்பாற்று!' என்று வேண்டிக்கொண்டான்.

சேட்டுடன் பேசிக்கொண்டிருந்தபோது, கதவிடுக்கில் தான் கண்டதை நினைத்துப் பார்த்துக்கொண்டான் பூபதி. உடனே வேகமாக ஓடிச் சென்று, சேட் தன்னிடம் கொடுத்த தோல் பையை எடுத்துப் பிரித்துப் பார்த்தான். உள்ளே....

இரண்டு வைரக் கற்கள் பத்திரமாக இருந்தன!

மாலை நேரம் மறைந்து, இருள் பரவியது. அந்த இருளில் ஒளிப் பிழம்பைப் பாய்ச்சிக்கொண்டு முன்னேறிக்கொண்டிருந்தது ஓர் அழகிய கார். அந்தக் காரினுள்...

தோல் பையை இறுக அணைத்தபடி உட்கார்ந்திருந்தான் பூபதி. அவனையும் காரோட்டியையும் தவிர வேறு யாரும் இல்லை அதில். சேட் அவன் புறப்படுமுன் அவனுக்கு எல்லா விதமான புத்திமதியும் கூறித் தம் காரிலேயே விமான நிலையத்துக்கு அனுப்பி வைத்தார். இன்னும் சற்று நேரத்தில் சென்னைக்குப் புறப்படும் விமானம் கிளம்பி விடும்.



பூபதியின் இதயம் வேகமாக அடித்துக்கொண்டது. சேட்ஜி தன்னைப் பரிபூரணமாக நம்பி முதல் முறையாக ஒரு பெரும் பொறுப்பை ஒப்படைத்திருக்கிறாரே, அதைத் திருப்திகரமாக நிறைவேற்றி முடிக்க வேண்டுமே என்ற கவலை அவனை அரித்து எடுத்தது. தோல்பையை இறுகப் பற்றிக்கொண்டான். நன்றாகச் சாய்ந்துகொள்ள 'வெல்வெட்' தலையணை ஒன்றை வைத்துக் கொண்டான்.

கைக்கடிகாரத்தைக் கவனித்து, நேரத்தைக் கணக்கிடுவதிலேயே கண்ணுங் கருத்துமாக இருந்த பூபதியைத் தூக்கிவாரிப் போட்டது 'கிறீச்' என்று டயர்கள் தேயும் ஒலி!

காரோட்டி திடீர் பிரேக் போட்டு வண்டியை நிறுத்தி விட்டதன் காரணத்தை அறிய எட்டிப் பார்த்தான் பூபதி. உடனே அவனைத் திகில் பற்றிக் கொண்டது. பாதையின் குறுக்கே நெடுமரம் ஒன்று விழுந்து கிடந்தது! அது இருந்ததைப் பார்த்தால் அதை யாரோ வேண்டுமென்றே வெட்டி வீழ்த்தி நடுப் பாதையில் தள்ளினதைப்போல் இருந்தது.

பூபதிக்கு யோசனை மேலே ஓட வில்லை. அவன் மூளையில் மின் வெட்டுத் தெறித்தது.

உடல் முழுவதையும் கறுப்பு அங்கி ஒன்றினால் மறைத்துக் கொண்டு, முகமூடி அணிந்த மூன்று உருவங்கள் திடீரென்று எங்கிருந்தோ தோன்றின. அவற்றில் ஒன்று, காரோட்டியைப் பலவந்தமாகப் பிடித்திழுத்து வெளியே தள்ளி அவன் முதுகிலும் கன்னத்திலும் அறை கொடுத்தது. அதிர்ச்சியைத் தாங்கமாட்டாமல் அவன் கீழே விழுந்தான்.

நெடிய கரிய உருவம் ஒன்று பூபதியை நெருங்கி, அவனைப் பிடித்து ஒரு தள்ளுத் தள்ளிற்று. பூபதி கீழே விழுந்தான். ஆயினும், அவன் கை அந்தத் தோல்பையைப் பிடித்திருந்த பிடியை விடவில்லை.

அந்த உருவம் அடித் தொண்டையில், ''டேய் மடையா, அந்தப் பையைக் கொடு இப்படி!'' என்று உறுமியது.

''முடியாது!'' என்று கத்தினான் பூபதி.

''என்ன சொன்னாய்? முடியாதா?'' என்று கேட்டுக் கொண்டே அந்த உருவம் பூபதியின் கன்னத்தில் ஓர் அறை விட்டது.

உடனே, பூபதி ஆத்திரத்துடன் எழுந்து அந்தக் கறுப்பு உருவத்தின் வலது மணிக்கட்டில் ஓங்கிக் கடித்தான். ''ஐயோ!'' என்று வீரிட்ட அந்த உருவம் கையைப் பின்னுக்கு இழுத்துக் கொண்டது, வலி பொறுக்காமல்.

பூபதி தோல் பையைக் கெட்டியாகப் பிடித்துக்கொண்டு ஓட முயன்றான். அப்போது இன்னும் ஓர் உருவம் அவன் காலை வாரி விடவே, 'தொபுகடீர்' என்று கீழே விழுந்தான்.

அவன் கைப்பிடி தளர்ந்தது. பை கீழே விழுந்தது. 'லபக்' என்று பாய்ந்து அதைத் தூக்கிக் கொண்ட அந்த உருவம், பூபதியின் முதுகிலும் தோள் பட்டையிலும் மாற்றி மாற்றிக் குத்துக்கள் விட்டது. பூபதி மூர்ச்சையானான்.

''ஹஹ்ஹ!'' என்று பலமாகச் சிரித்த அந்த நெடிய உருவம், காரினுள் கிடந்த வெல்வெட் தலையணையை எடுத்து, பூப்தியின் தலைமாட்டில் வைத்தது. பின்னர்க் கரகரத்த குரலில், ''ஹஹ்ஹா! பூபதி!.. நன்றாகத் தூங்கு.. நீ செய்த நல்ல காரியத்துக்கு இந்த வெல்வெட் தலையணையை வைத்துக் கொண்டு ஜோராகத் தூங்கு!'' என்று ஏளனம் செய்தது. அப்போது—

வெகு தூரத்தில் லாரி ஒன்று வருவதற்கான வெளிச்சம் தெரிந்தது. உடனே, நெடிய உருவமும் மற்ற இரண்டு கறுப்பு அங்கிகளும், தோல்பையை மட்டும் எடுத்துக்கொண்டு, இருளில் தலை தெறிக்க மறைந்து போயின.

சற்று நேரத்தில் அங்கே வந்த லாரி நின்றது. டிரைவர், ஒரு கார்

நின்றிருப்பதையும் அதனருகே இரண்டுபேர் விழுந்து கிடப்பதையும் கண்டு நடந்திருப்பதை ஊகித்தான்..

'ஐயோ, வைரம் போச்சே! என் வைரக்கல் போச்சே!''

சேட்ஜியின் இந்த அலறல் தான் பூபதியை விழிக்கச் செய்தது. சுற்று முற்றும் பார்த்த பூபதிக்குத் தான் ஓர் ஆஸ்பத்திரி அறையில் படுக்கையில் கிடப்பதையும், தன்னைச் சுற்றிலும் சேட்டும், டாக்டர், நர்ஸ் முதலியவர்களும் கவலையுடன் நிற்பதையும் உணர்ந்து கொள்ளக் கொஞ்ச நேரம் பிடித்தது. அவன் மண்டையிலும், தோள்பட்டையிலும் கட்டுக்கள்.

சேட், பூபதியைப் பார்த்து எண்ணெயில் விழுந்த அப்பம் போல் குதித்தார். ''மோசம் போனேனே! உன்னை நம்பி என் வைரக்கல்லுடன் அனுப்பினேனே! நம்பின என்னை நட்டாற்றில் விட்டாயே!...என் வைரத்தைத் தொலைத்துவிட்டு வந்து நிற்கிறாயே!'' என்று புலம்பினார்.

பூபதிக்கு மட்டும் என்ன, அங்கிருந்த டாக்டருக்கும் நர்சுக்குங்கூடச் சேட்டின் புலம்பல் எரிச்சலைத் தந்தது. ''என் வைரம், என் வைரம்!'' என்று அடித்துக் கொள்கிறாரே மனுஷர்!

அவர் புலம்பலைப் பூபதி லட்சியம் செய்யவில்லை. மெள்ளக் கைகளை ஊன்றிக்கொண்டு படுக்கையில் வசதியாக உட்கார்ந்து கொண்டான். அதே சமயத்தில் பாண்ட், கோட் எல்லாம் அணிந்து நன்றாக 'டிரஸ்' செய்து கொண்டு புன்னகை செய்தவாறே உள்ளே வந்தான் நந்தகுமார் ஜோஷி. அவனைக் கண்டதும் சேட் அழுதே விட்டார். ''உன்னை நம்பியாவது வைரத்தைக் கொடுத்தனுப்பியிருக்கலாம்!..இந்தப் பூபதியை நம்பினதற்கு...'' என்று ஆரம்பித்தார்.

திருப்தியுடன் சிரித்துக்கொண்டான் ஜோஷி. 'சேட், வேண்டும் நன்றாக உனக்கு!' என்று மனத்திற்குள் நினைத்தாலும், ''நீங்கள் கவலைப்படாதீர்கள்!'' என்றான் ஆறுதலாக.

பூபதி—? அவன் ஜோஷியின் வலது கையையே கவனித்துக் கொண்டிருந்தான். ஜோஷி அந்தக் கையைக் கோட்டுப் பாக்கெட்டிலிருந்து வெளியில் எடுத்தால்தானே?



சேட்டைப் பார்த்து ஜோஷி, ''அவன் தொலைத்துவிட்ட வைரங்களுக்கு உரிய விலையைக் கொடுத்து விடச் சொல்லுங்கள்'' என்று தூபம் போட்டான்.

பூபதி சிரித்தான், அந்த நிலையிலும். பிறகு நிதானமாக, ''அந்த வைரங்கள் தொலைந்தாலல்லவா நான் தொகையைக் கொடுக்க வேண்டும்? அவை தொலையவில்லை; பத்திரமாக என்னிடந்தான் இருக்கின்றன. என்னை அடித்துப் போட்ட அந்தப் பயங்கரக் கள்வர்கள் தூக்கிச் சென்ற தோல்பையில் ஒன்றுமே இல்லை!





பையைப் பிரித்ததும் அவர்கள் ஏமாறப் போகிறுர்கள்!'' என்ருன்.

அவன் தூக்கிப்போட்ட இந்த அணுக்குண்டு எல்லோரையும் அயர வைத்தது ஒரு கணம். மற்றவர்களைவிட அதிகமாகக் கத்தி வியப்பொலி எழுப்பியவன் ஜோஷி தான்!

பூபதி தன் தலைமாட்டில் கிடந்த வெல்வெட் தலையணையைக் கொண்டு வரச் சொன்னுன். அதைச் சேட்டிடம் கொடுத்து, ''இதில் இருக்கிறது உங்கள் வைரக்கல்! எடுத்துக்கொண்டு போங்கள்'' என்ருன்.

''என்ன, என்ன? என்ன விளையாடுகிருய்? இதிலா நான் வைரத்தை வைத்தேன்?'' என்று பதறினர் சேட்.

''நீங்கள் வைக்கவில்லை. நான்தான் வைத்தேன். எனக்கு முன்பே தெரியும், இத்தகைய ஆபத்து வருமென்று! அதனுல் நீங்கள் என்னிடம் தோல் பையைக் கொடுத்ததும் நான் வீட்டுக்குப் போய் முதல் காரியமாக அதிலிருந்த வைரக் கற்களை எடுத்து, இந்த வெல்வெட் தலையணையின் தையலைப் பிரித்து, அதற்குள் வைத்து முன்போலவே தைத்து விட்டேன். நீங்கள் தோல்பையை என்னிடம் கொடுத்ததைத் திருடன் பார்த்தானே தவிர, நான் அதைத் தலையணைக்குள் ஒளித்ததை அவன் பார்க்கவில்லை.''

''என்ன, என்ன? நான் உன்னிடம் தோல்பையைக் கொடுக்கும்போது திருடன் பார்த்தானு?'' தம் வைரம் திரும்பக் கிடைத்ததை எண்ணி மகிழ்ந்தார் சேட்; ஆயினும் அவர் பதற்றம் அடங்கவில்லை.

''ஆமாம்! கதவிடுக்கில் மறைந்துகொண்டு நாம் பேசினதையெல்லாம் ஒட்டுக் கேட்டான் அந்தத் திருடன். அவன் மறைந்திருந்ததைத் தற்செயலாக நான் கண்டேன். அவனேதான் சதித்திட்டம் வகுத்து இரண்டு ஆட்களுடன் நள்ளிரவில் தோன்றிக் காரை நிறுத்தச் செய்து, என்னையும் காரோட்டியையும் படுகாயப் படுத்தினுன்!'' என்று நிறுத்தினுன் பூபதி.

''என்ன, என்ன? அப்படியானுல் திருடனை நீ நேரில் பார்த்திருக்கிருயா?'' என்ருர் ஸேட்.

''பார்த்திருக்கிறேன், பார்த்துக் கொண்டும் இருக்கிறேன்'' என்று புன்னகையுடன் சொன்னுன் பூபதி.

''யார் அது?''

நந்தகுமார் ஜோஷிக்கு முகம் வியர்த்தது முத்து முத்தாக.

தன்னை மறந்து, வலது கையைக் கோட் பாக்கெட்டிலிருந்து எடுத்துக் கைக்குட்டையால் முகத்தைத் துடைத்துக்கொள்ளப் போன அவனுக்குப் பிறகுதான் தான் செய்து விட்ட தவறு தெரிந்தது.

''அவன்தான் குற்றவாளி!'' என்று பூபதி ஜோஷியைச் சுட்டிக் காட்டினன். ''அவன் இரவில் மாறுவேடம் போட்டுத் தன்னை மறைத்துக்கொண்டாலும் அவனை அடையாளம் கண்டுகொண்டேன். என் தோல்பையைப் பிடுங்க அவன் முயலும்பேது, அவன் வலது கை மணிக்கட்டில் வேண்டுமென்றே ஓங்கிக் கடித்தேன். என் பற்கள் பதிந்து விட்டன; அதை மறைக்க அவன் வலது கை மணிக்கட்டில் போட்டிருக்கும் கட்டு ஒன்றே போதுமே, அவன் குற்றத்தைக் காட்டிக் கொடுக்க! அதை அவிழ்த்துப் பாருங்கள்: நான் சொன்னது உண்மை என்று நிரூபணமாகும். ஜோஷி!...என்மீது அகாரணமாகப் பொறுமை கொண்டு தீவினை செய்தாய். சேட்ஜி என்மீது கொண்டுள்ள நம்பிக்கையைத் தகர்க்கச் சதி செய்தாய். ஆனல் அந்தப் பொறுமைத் தீ இப்போது உன்னையே சுட்டெரிப்பதைப் பார்!'' என்றான்.

ஜோஷி தலை குனிந்துகொண்டான். சேட்டின் திறந்த வாயில் ஈக்கள் புகுந்து விளையாடின.

'ஓ! மருக்கொழுந்து கூடைக்காரி!'



போட்டோ:

புஷ்பத்துறை சுப்பிரமணியம்



# அணில் செய்த வேலை

ஸேனு

சங்கரன் அன்று வெகு நேரங்கழித்து எழுந்தான். அப்படியும் சோம்பல் நீங்கவில்லை. புழைக்கடைத் தோட்டத்தில் அடுப்புச் சாம்பல் கொட்டிக் கிடந்தது. அதில் கொஞ்சம் எடுத்துப் பல் தேய்த்துக்கொண் டிருந்தான். அப்போது 'டொக்' என்று அவன் தலையில் ஏதோ விழுந்தது. வலி தாங்காமல் துள்ளி ஒதுங்கி நின்றான். பெரிய கொய்யாக் காய்தான்! - கட்டைக் கசங்காய் அது.



மேலே கொய்யாமரக் கிளையிலே வால் மயிர் உதிர்ந்த அணில் ஒன்று இருந்தது. அது செய்த வேலை!

சங்கரன் ஆத்திரத்தோடு கீழே கிடந்த செங்கல் துண்டு ஒன்றை அணிலை நோக்கி வீசி எறிந்தான். ஆனால் அணில் அதற்குள் வேறு கிளைக்குத் தாவிவிட்டது. அதே சமயம் செங்கல் துண்டு வேகமாகச் சங்கரனுடைய மண்டையில் வந்து தாக்கியது.

''ஐயோ!'' என்று கூவினான் அவன்.

அவனுடைய அம்மா, ''என்னடா அது, கலாட்டா!'' என்றாள் சமையல் அறையிலிருந்து.

சங்கரனுடைய மண்டையில் விளாங்காய் அளவுக்குக் கொம்மை எழும்பிவிட்டது; ரத்தமும் கசிந்தது. அந்த அணில் மட்டும் அவன் கையில் அப்போது சிக்கியிருந்தால் அதை இரண்டாகக்

கிழித்துப் போட்டிருப்பான் சங்கரன்; அவ்வளவு கோபம் அதன் மேல்!

பல்லைக் கடித்துக்கொண்டு வாய் கொப்புளித்துவிட்டு உள்ளே வந்தான். அம்மா அப்போதுதான் அவன் முகத்தைக் கவனித்தாள்; "என்னடா இது, மண்டையில் கொம்பு முளைத்த மாதிரி எழும்பியிருக்கிறது?" என்றாள் சிரித்துக் கொண்டே.

அடிபட்டதோடு அம்மா இப்படிச் சிரிக்கவும் சிரிக்கவே அவன் எரிச்சலோடு, "உனக்கு அடிபட்டால் தெரியும்.. மூஞ்சியைப் பார்.. சிரிக்கிறாள் என்னவோ!" என்றான்.

சிரிப்பை அடக்கிக்கொண்டு அம்மா விசாரித்ததும், அணிலை அடிக்கப் போய் நடந்ததைச் சொன்னான் சங்கரன்.

"நல்ல வேளை, குழந்தை இன்னும் எழுந்திருக்கவில்லை. அது அங்கே வந்து நின்றிருந்து, நீ வீசி எறிந்த கல் பட்டிருந்தால் என்ன ஆகியிருக்கும்!" என்று திகிலுடன் சொல்லிப் பெருமூச்சு விட்டாள் அம்மா.

இன்று எழுந்த வேளை நல்ல வேளை இல்லைபோல் இருக்கிறது என்றுதான் பட்டது சங்கரனுக்கு. 'நம்மை மட்டந் தட்டவே எல்லாரும் பிறந்திருக்கிறார்கள்' என்று எண்ணினான் அவன். காபியை ஒரே விழுங்கில் குடித்துவிட்டு வாசல் பக்கம் வந்துவிட்டான்.

மண்டையில் விண் விண் என்று நரம்பு அடித்துக்கொண் டிருந்தது; வலி பொறுக்க முடியவில்லை. அம்மா வாசலில் நெல் கொஞ்சம் உலர்த்திவிட்டுப் போனாள். ஒரு நிமிஷங் கழித்து அந்த அணில் - வால் மயிர் உதிர்ந்ததேதான் - அங்கே வந்து நெல்லைக் கொரிக்கத் தொடங்கியது.

'இதைத் தீர்த்துக் கட்டிவிடுகிறேன்' என்று ஆத்திரம் பொங்க அருகில் இருந்த சிறு மண்வெட்டியை எடுத்து அணிலின்மேல் வீசி எறிந்தான் சங்கரன். அந்தச் சமயம் பார்த்துத்தான் அப்பா வர வேண்டுமா? அணில் வெகு சாமர்த்தியமாகத் தப்பி ஓட, மண்வெட்டி நுனி அப்பாவின் கால் கட்டை விரலில் பட்டுக் காயப்படுத்தியது. அவர் வலி தாங்காமல் துள்ளி, "என்னடா, சனியனே!" என்று அவன் கன்னத்தில் ஓர் அறை விட்டார்.

மண்வெட்டி விழுந்த சத்தங் கேட்டு அவனுடைய அம்மா அதே சமயம் அங்கே வந்தாள்; "என்ன,



என்ன? குழந்தையை ஏன் அடிக்கிறீர்கள், பாவம்!'' என்றாள் அவனை அணைத்துக்கொண்டு.

அப்பா, ''ஆமாம்; ஆமாம்! மண்வெட்டியைப் போட்டு என் காலை என்ன செய்திருக்கிறான் பார்! அடிக்காமல் பின்னே கொஞ்சுவார்களோ?'' என்றார் எரிச்சலுடன்.

அவரிடம் அடிபட்டதைவிடச் சற்றுமுன் தன்னைப் பார்த்துச் சிரித்த அம்மா தனக்குப் பரிந்து கொண்டு வந்ததைக் கண்டு சங்கரனுக்குத் துக்கம் குமுறி வந்தது. இப்போதும் அணிலினால்தான் இது நேர்ந்தது என்று தெரிந்ததும் அம்மா, ''அதன்மேல் உனக்கு ஏண்டா இந்த ஆத்திரம்? பாவம், வாயில்லாத பிராணி!'' என்றாள்.

உலகமே வெறுத்துவிட்டது சங்கரனுக்கு. தன் முகத்தை வெளிக் காட்ட அவனுக்குப் பிடிக்கவில்லை. அவன் உக்கிராண அறையின் ஒரு மூலையில் போய் உட்கார்ந்துகொண்டான்.

அழுது அழுது சோர்ந்து கண்ணயர்ந்து விட்டான். அப்போது உக்கிராணப் பரண்மேல் 'கீச் கீச்' என்று சத்தம் கேட்டது. திடுக்கிட்டு விழித்துக்கொண்டான் சங்கரன். அதே சமயம் பூனை ஒன்று மெதுவாக ஜன்னலிலிருந்து பரணுக்குத் தாவியது. அதன் பின்னாலேயே வால்மயிர் உதிர்ந்த அணில் வந்து 'வீக் வீக்' என்று அலறியது. முன்னங்கால்களில் கொய்யாப் பழத் துண்டு ஒன்றைப் பற்றிக்கொண்டிருந்தது அந்த அணில்.

உடனே எழுந்து பரணில் எட்டிப் பார்த்தான் சங்கரன். மூன்று அணிற் குட்டிகள்; பூனை அவைகளில் ஒன்றைக் கவ்விப் பிடிக்கப் போகும் சமயம்; அதற்குள் சங்கரன் கையை ஓங்கவே தொப்பென்று இறங்கி ஓட்டம் பிடித்தது பூனை.

அந்தப் பெரிய அணில் அப்போதுதான் கூவுவதை நிறுத்தியது. சங்கரனுடைய பழைய ஆத்திரமெல்லாம் பறந்தோடிவிட்டது. ஆவலும் பெருமையும் பொங்க அவன், ''அம்மா! அம்மா! இங்கே வந்து பார்! அணில் குட்டி போட்டிருக்கிறது. பூனை ஒன்று வந்து அதைத் தின்னப் போச்சு! நான் விரட்டிவிட்டேன் பூனையை! ...



எவ்வளவு அழகாயிருக்கிறது பார் அணில் குட்டி!'' என்று கூவினான்.

அம்மா கைக் குழந்தையுடன் உள்ளே வந்தாள். பெரிய அணில் தன்னிடம் இருந்த கொய்யாப் பழத் துண்டைக் குட்டிகளுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தது. இந்தக் காட்சியைக் கவனித்து விட்டு அம்மா தன் இரண்டு பிள்ளைகளையும் அன்போடு பார்த்தாள். 'எவ்வளவு நல்ல அணில் பார்த்தாயா? இதைக் கொல்லப் போனாயே?' என்பதுபோல் இருந்தது அவள் பார்வை. அணில் குட்டிகளை நோக்கித் தாவுவதுபோல் 'கீக்கீ' என்றது கைக் குழந்தை.

சங்கரனுக்கு அந்தப் பெரிய அணில் தன் அம்மாவைப்போலவும், அதன் குட்டிகள் தன்னையும் தம்பியையும் போலவும் பட்டது. அவன், ''அம்மா, ஏதாவது பட்சணம் இருந்தால் கொடு. அணிலுக்குப் போடுகிறேன்; அது தன் குட்டிகளுக்குக் கொடுக்கும். எவ்வளவு வேடிக்கையாயிருக்கிறது! .. இனிமேல் நாம் நம் வீட்டிலேயே இவைகளை வைத்து வளர்க்கலாம்; இல்லையா, அம்மா?'' என்றான்.

சற்றுமுன் தலையில் பட்ட காயத்தையும் அப்பா தன்னை அடித்ததையும் அவன் மறந்தே போய்விட்டான். அணிலின்மேல் இருந்த ஆத்திரம் முழுவதும் இப்போது ஆசையாக மாறிவிட்டது.



# நடந்தது

**'ஏதிலார் குற்றம்போல்**
**தம்குற்றம் காண்கிற்பின்**
**தீதுண்டோ மன்னும் உயிர்க்கு.'**

குறள் படித்துக்கொண்டிருந்தேன். என் தம்பி அப்பொழுதுதான் வெளியிலிருந்து வந்தான்.

''எங்கே போனாயடா?''

''ராமு வீட்டுக்குப் போனேன், கேரம் விளையாட..'' குரலிலே பயம் இருந்தது.

''பொய் சொல்லாதே!''

''நிஜமாகத்தான், அண்ணா!''

''கீழக்குளத்தில் பாம்பு மேல் கல் எறிந்துகொண்டிருந்தாயே!''

பொய் சொன்னதைக் காரணமாக வைத்துக்கொண்டு ஓர் அறை கொடுத்தேன். ''இல்லை, அண்ணா!'' என்று விசித்துக்கொண்டே உள்ளே சென்றுவிட்டான் அவன்.

இன்று காலை. சற்று நேரத்துக்கு முன் என் நண்பன் கோபு வந்தான். ''முரளி, உன் விஞ்ஞானப் புத்தகம் கொஞ்சம் தா! ஸ்கூலுக்கு வந்ததும் திரும்பத் தருகிறேன்'' என்றான்.

''அடடா! என்ன செய்யலாம், கோபு? பத்து நிமிஷம் முன்னால்தான் சேகர் வந்து வாங்கிக்கொண்டு போனான்.'' - குரலில் வருத்தம் தொனிக்கப் பதில் சொன்னேன். வருத்தத்துடன் திரும்பிச் சென்றான் கோபு.

அவன் சென்றதும் என்னருகில் படித்துக்கொண்டிருந்த என் தம்பி, ''என்ன அண்ணா இது! சேகருக்கும் உனக்கும் ஒரு வாரமாகச் சண்டை ஆயிற்றே!'' என்றான். ''என்னைப் பொய் சொன்னதற்காக அடித்தாயே! நீமட்டும் சொல்லலாமா?'' என்பதைச் சொல்லாமல் சொன்னான் அவன்.

''உன் வேலையைப் பார்த்துக்கொண்டு போ!'' என்று சீறி அவன் கன்னத்தில் ஓர் அறை கொடுத்தேன். அவன் அழுதான்.

தலைகுனிந்து நிற்கவேண்டியவன் நான். ஆனால்..? ஏனெனில், நான் பெரியவன்!!!

—ரேவதி

# அண்ணனும் தங்கையும்

சரஸ்வதி



அம்மா கொடுக்கும் செல்லம்
ரொம்ப
அதிகமாச்சுது!
தம்பிக்கிப்போ வாலு ரொம்ப
நீண்டு போச்சுது!
படிக்கும்போது சத்தம்
போட்டுப்
படிப்பைக் கெடுக்கிறன்.
படிக்கத் தேடும் புத்தகத்தைப்
பதுக்கி வைக்கிறன்.
சாவியெடுத்து மேசை
யெல்லாம்
திறந்து பார்க்கிறன்.
சீவி வைத்த பென்சிலெடுத்துச்
சுவரில் கீத்தறன்.
'பென்'னை யெடுத்துப்
புத்தகத்தில்
பொம்மை போடறன்.
'பென்'னைத் திருகி மூடித்
திறந்து
பழுது பார்க்கிறன்.
'நோட்'டிலிருந்து தாளைக்
கிழித்து
நாசம் செய்கிறன்.
கேட்டுவிட்டால் அடித்தது
போல்
கேவி அழுகிறன்.
தம்பி கொடுக்கும் தொல்லை
என்னல்
தாங்க முடியல்லே -
வம்பு செய்யும்போ(து) அடிக்க
மனசும் கேக்கல்லே.

# சேஷுவின் வேஷம்!

நீலம்

ஏழை மாணவர்களின் இலவசப் பகல் உணவுத் திட்டத்துக்குப் பணம் திரட்ட ஓர் உதவி நிதிக் கமிட்டி அமைக்கப்பட்டது. அந்தக் கமிட்டியார் டிக்கெட் வைத்து வசூல் செய்யக் கதம்ப நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தார்கள். அதில் மாறுவேஷப் போட்டியும் ஒன்று.

எந்த வேஷம் வேண்டுமானாலும் போட்டுக்கொள்ளலாம். எடுப்பாகவும் கச்சிதமாகவும் இருக்கும்படி நன்றாக ஒத்திகை பார்த்துக் கொண்டு வரவேண்டும் என்பதைத் தவிர இதில் வேறு நிபந்தனை எதுவும் கிடையாது. விருப்பம்போல் வேஷம் தரிக்க இடம் கொடுக்கப்பட்டிருந்தது.

செம்போடை சேஷன், சென்னையில் தன் மாமா சாமா வீட்டுக்கு வந்து ஐந்தாம் வகுப்பில் படித்து வந்தான். படிப்பு முன்பின்னாக இருந்ததே தவிர, நடிப்பில் அவனை மிஞ்சுபவர்கள் யாரும் கிடையாது.

மாறு வேஷப் போட்டி என்றதும் சேஷனின் மனம் துள்ளி விளையாடியது. காக்கையைப் போல் கரைவான்; குயிலைப்போல் கூவுவான்; குட்டி நாயைப் போலவே குரைப்பான். எல்லாவற்றிற்கும் அவனுடைய குரல் வளைந்து கொடுத்தது. தபால்காரரைப் போலவும், தயிர்க்காரரைப் போலவும் குரல் கொடுத்தானானால் அதில் வித்தியாசமே தெரியாது. ஒலிப்பதிவு செய்தமாதிரி எல்லாம் அப்படியே கச்சிதமாக இருக்கும். இவ்வளவு திறமை இருந்தாலும் மாறு வேஷப் போட்டிகளில் குடுகுடுப்பைக்காரன், பெருமாள் மாட்டுக்காரன், பிச்சைக்காரன் போலவும், ‘கொத்துமல்லி கறிவேப்பிலை



யோவ்!' என்று சங்கீதம் பாடிக்கொண்டு தெருக்களில் விற்பனை செய்யும் அங்காடிக்காரிகள் போலவும் சர்வசாதாரணமான வேஷங்களைப் போட்டுக்கொண்டு நல்ல பெயரையும் தங்க மெடலையும் வாங்கிக்கொள்ளச் சேஷன் விரும்பவில்லை. இதுவரையில் யாருமே செய்து காட்டாததாக இருக்க வேண்டும்; பார்ப்பவர்கள் மூக்கின் மேல் விரல் வைத்துப் பிரமிக்க வேண்டும்; அவர்களை வயிறு குலுங்கக் குலுங்கச் சிரிக்க வைக்கக் கூடிய வேஷமாகவும் பொறுக்கிக் கொள்ள வேண்டும் என்று அவன் முடிவு செய்துகொண்டான்.

வேஷப் போட்டிக்குத் தேதி குறிப்பிட்டு விட்டார்கள். அதில் கலந்து கொள்ள முன் வந்த மாணவர்கள் எல்லாரும் தனித்தனியாயும், சேர்ந்தும் ஒத்திகைகளை நடத்தி வந்தார்கள். செம்போடை சேஷு சும்மாவா இருப்பான்? தன்னுடைய வேஷத்துக்கான ஏற்பாடுகளில் மும்முரமாயிருந்தான். 'கம்பளி' கிட்டன், 'டேஞ்சர்' ரங்கண்ணா இரண்டு பேரையும் ஜோடி சேர்த்துத் தன் கூட்டாளிகளாக இழுத்துப் போட்டுக்கொண்டான். மூன்று பேரும் ஒத்திகை நடத்தி வந்தார்கள்.

முதலில் இரண்டு மூன்று ஒத்திகைகளின்போது சேஷு செய்த சேஷ்டைகளையும் நடிப்பையும் பார்த்துக் கம்பளியும், டேஞ்சரும் அடக்க முடியாமல் இடி இடி என்று சிரித்தார்கள். சேஷுவுக்குக் கோபம் வந்துவிட்டது.

''கன்னாபின்னான்னு இப்படியெல்லாம் ஸ்டேஜ் மேலேயும் வந்து இளிச்சுத் தொலைச்சால் அத்தனையும் குட்டிச்சுவர்தான்! பார்க்க வந்தவர்கள் நம்மேலே கல்லையும், மண்ணையும் வாரி வீசுவார்கள்! ஜாக்கிரதை!'' என்று தோழர்களை மிரட்டி, எச்சரித்து அவர்களைச் சரிப்படுத்தினான் சேஷு.

மேடைமீது தன்னுடன் கூடவே வேஷதாரிகளாகத் தோன்ற வேண்டிய கம்பளி, டேஞ்சர் இருவருக்கும் அவர்கள் செய்ய வேண்டிய காரியங்



களைக் குறிப்பிட்டு ஒரு சின்னக் காகிதத்துண்டில் கைப்பட எழுதியும் கொடுத்துவிட்டான்.

கம்பளியும் டேஞ்சரும் அந்தக் காகிதத்தை அடிக்கடி பிரித்துப் பார்த்தார்கள். பார்க்கும்போதெல்லாம் அவர்களுக்கு என்ன அடக்கியும் அடக்க முடியாமல் சிரிப்புப் பொத்துக்கொண்டுதான் வந்தது. வாயைக் கையால் மூடிக் கொண்டு சிரித்தார்கள். சேஷுவின் உத்தரவுப்படி ஒருவருக்கும் காட்டாமல் கடிதத்தில் குறிப்பிட்ட விஷயங்களை உருப்போட்டும் வைத்துக்கொண்டார்கள்.

அன்று மாலை தன் வீட்டு வாசலில் ஒரு சின்னக் கைவண்டியை இழுத்து வந்து நிறுத்திவிட்டு உள்ளே பரபரப்புடன் நுழைந்தான் சேஷு. கரித்தூள் பொட்டலம், கந்தல் துண்டு, பொத்தல் கோணிகளில் இரண்டு; தீவட்டிப் பந்தம் போல எரியும் தகரக் கிரஸின் விளக்கு இவ்வளவையும் வாசலில் நின்ற கைவண்டியில் ஏற்றிக்கொண்டு வந்தான். கம்பளியும் டேஞ்சரும் அங்கே முன்னதாகவே ஆஜராயிருந்தார்கள்.

அரை மணிக்கு முன்புதான் ஆபீஸிலிருந்து திரும்பியிருந்த சாமா, மாடி முன்புறத்துத் தாழ்வாரத்திலேயிருந்து கீழே நடந்த முஸ்தீபுகளைக் கவனித்தார். கிடு கிடென்று கீழே இறங்கி வந்தார். மாமாவின்





''எனக்கு அவர் தலையைப் பார்த்ததும் வெங்காய வெடி ஞாபகம் வருதுடா!''

திடும் பிரவேசம் கண்டு சேஷு பேந்தப் பேந்த விழித்தான்.

''ஏண்டா தத்தாரி! எதுக்கடா இந்தக் கைவண்டி? இதை எல்லாம் ஏற்றிக்கொண்டு எங்கேடா சவாரி? கொழுப்பு எடுத்துப்போய் வண்டி இழுக்க ஆரம்பிச்சுட்டாயோ!'' என்று சாமா போட்ட சத்தத்தைக் கேட்டுக் கம்பளியும் டேஞ்சரும் மிரள மிரள விழித்தார்கள்.

''..இன்னிக்குப் பள்ளிக்கூடத்திலே மாறு வேஷப் போட்டி; அதுக்குத்தான் இதெல்லாம். நான் கூட வேஷம்..'' என்று தட்டித் தடுமாறிச் சேஷு முடிப்பதற்குள் மாமி அங்கே வந்து சேர்ந்தாள்.

''நன்னுத்தானிருக்கு, போங்கள்! ஸ்கூலில் ஏதோ வேடிக்கையா வேஷம் போட்டுண்டு ஆடுறாளாம். மெடல் தருவாளாம். தந்தால் வாங்கிண்டு வந்தால் என்ன?'' என்று மாமி கூறவே, சேஷுவுக்கு உச்சி குளிர்ந்துவிட்டது.

''நீங்ககூட வரலாம், மாமா! எனக்கு இலவச டிக்கெட் உண்டு'' என்று உற்சாகமாக மாமாவையும் வரும்படி அழைத்தான் சேஷு.

''போடா! உதவாக்கரை! அசத்து! நீ கெடறதோடில்லாமல் பாக்கி இருக்கிறவர்களையும் உருப்படாமல் அடிக்கப் பார்க்கிறுயோ?'' என்று கடிந்துகொண்டார் சாமா. பயல் என்னதான் வேஷம் போடுகிறுன் என்பதைப் பார்க்கவேண்டும் என்று உள்ளூற ஆசை. ஆகவே அவர் இஷ்டமில்லாதது மாதிரி கூறிவிட்டு மாடிப்படி ஏறினுர்.

சேஷுப் பயல் பிறகு கை வண்டியில் சரக்குகளை ஏற்றிக் கொண்டு, போட்டி நடக்கும் ஹாலை நோக்கி விட்டான் சவாரி! கம்பளியும் டேஞ்சரும் ஜவான்களைப் போல வண்டியின் இரண்டு பக்கங்களிலுமாக நடந்து சென்றுர்கள்.

போட்டியில் கலந்துகொள்ள வந்த மாணவர்கள் தங்கள் பெயர், போட்டுக்கொள்ளப் போகும் வேஷம், எடுத்துக்கொள்ளக் கூடிய அவகாசம் முதலியவற்றை விழாக் கமிட்டிக் காரியதரிசியிடம் குறித்துக் கொடுத்தார்கள்.

**'பழம் புலவர்'** களாகத் தாங்கள் வேஷம் போட்டுக்கொண்டு வரப் போவதாகச் சேஷு கூறியதைக் கேட்ட காரியதரிசி அவனை ஒரு தடவை ஏற இறங்கப் பார்த்தார். அவர் முகத்தில் ஆச்சரிய, கேள்விக் குறிகள் தென்பட்டதையும் சேஷு கவனித்தான்.

நிகழ்ச்சிகள் ஆரம்பமாயின. போலீஸ் வேஷக்காரர் வந்து போய் விட்டார். குடுகுடுப்பைவாலா, பெருமாள் மாட்டுக்காரன், பால்காரன், அப்பள வியாபாரி இவர்கள் எல்லாரும் மளமள வென்று மேடையில் தோன்றிவிட்டு மறைந்தார்கள். அடுத்த நிகழ்ச்சி, **'பழம் புலவர்'** என்று அறிவிக்கப்பட்டது.

அப்பள வியாபாரி வேஷம் போட்டுக்கொண்ட மாணவன் நடித்துக்கொண் டிருக்கும்போதே சேஷு, கம்பளி, டேஞ்சர் மூவரும் தயார் செய்துகொண் டிருந்தார்கள். கையோடு எடுத்து வந்திருந்த கரிப் பொட்டலத்தைப் பிரித்தான் சேஷு. அதை அவசர அவசரமாகக் கம்பளி, டேஞ்சர் இருவரின் முகத்திலும் கனமாக அப்பினுன். விபூதிப் பிரசாதம் போல இன்னும் சிறிது கையில் கொடுத்து உடம்பு முழுவதும் தடவிக்கொள்ளச் சொன்னுன். தானும் பாக்கியிருந்த கரித்தூளைப் பட்டதும் படாதது மாக அப்பிக்கொண்டான். இடுப்பில் கந்தல் துண்டைச் சுற்றிக்கொண்டான். அழுக்கேறிய இன்னெரு

கந்தலைத் தலையில் கிறுக்கு முண்டா சாகச் சுற்றிக் கட்டினான்!

கை வண்டியின்மீது தகரத் தீவட்டி விளக்கு ஜ்வாலை விட்டெரிந்தது. பொத்தல் கோணிகள், கூடைகள் முதலியவற்றுடன் ஸ்டேஜ் ஓரத்தில் வண்டி 'ரெடி' யாக நிறுத்தப்பட்டிருந்தது!

சேஷு, லேசாக வண்டியை மேடையை நோக்கி நகர்த்தினான். வண்டியின் ஒரு புறமாகக் 'கம்பளி' நின்றான்; இன்னொரு பக்கத்தில் 'டேஞ்சர்.' வண்டியைத் தள்ளிக் கொண்டு பக்கத்திலே தோழர்கள் தொடரச் சேஷு தான் சிட்டையாகப் பயின்ற கவிதையைப் பாட ஆரம்பித்தான்.

கை வண்டி மேடையிலே தோன்றியவுடனேயே சபையோர் கவனம் இந்த நூதன 'அயிட்ட'த்தில் ஈடுபட்டது. இதுவரையில் யார்தான் இப்படிப் பார்த்திருக்கிறார்கள்? ஒரு விசேஷ நிகழ்ச்சிதான் இது! ரசிகர்களின் கண்ணும் கருத்தும் மேடை மீது பதிந்திருந்த சமயத்திலே 'பழம் புலவர்' பாட்டும் துவங்கியது.

கரிமுகத்தோடு காட்சி தந்த புலவர்கள் ஒரு காதை ஒரு கையால் பொத்திக்கொண்டு, அலாதியாக ஒரு குரலில் பாடி, பஜனைக் கோஷ்டிபோல் அடிமேல் அடி வைத்து, மேடையின் நடுவே வந்து நின்றார்கள்.

சபையில் ஒரே கைதட்டல்; ஆரவாரம். முந்திய வேஷதாரிகள் வந்து போனபோது நிகழாத தனி வரவேற்பு இந்தக் காட்சிக்குக் கிடைத்ததைக் கருதி, புலவர்கள் மாறி மாறித் தங்கள் கவிதையை முழக்கினார்கள்:

**''சின்னச்சின்ன இலந்தைப் பழம்**
**சிந்தாமணி இலந்தைப் பழம்!**
**ஆழாக்கு ஓரணா! இது கடப்பை**
**இலந்தைப்பழம், ஆழாக்கு ஓரணா!''**

இந்தப் பாட்டின் அடிகளைச் சபையில் சிலர் ஏற்கனவே கேட்டிருக்க வேண்டும். இது அவர்கள் தப்பாமல் போட்டு வந்த தாளத்திலிருந்து நன்றாகத் தெரிந்தது! தாளம் வலுக்க வலுக்க, புலவர்களின் குரலும் உற்சாகத்துடன் ஓங்கியது:

**இது தானாகப் பழுத்த பழம்**
**தேனாய் இனிக்கும் பழம்!**
**ஆழாக்கு ஓரணா - இது கடப்பை**
**இலந்தைப் பழம்! ஆழாக்கு ஓரணா!''**

சபையினரின் கரகோஷம் ஹாலே இடிந்து விழுவதுபோல் இருந்தது. இலந்தைப் 'பழம் புலவர்' சேஷுவுக்குச் சந்தோஷம் பிய்த்துக் கொண்டு போய்விட்டது. சபையோரின் பாராட்டை அங்கீகரித்து ஒரு கும்பிடு போட்டான். பாடிக் கொண்டே, 'கம்பளி', 'டேஞ்சர்' சகிதம் வண்டியை மேடையின் கடைசிப் பக்கத்தில் தள்ளிச் சென்று நாடகப் பாணியாக மறைந்தான். மறையு முன்பாக ஹாலின் இரண்டாவது வரிசையில் ஒரு நாற்காலியில் மற்றவர்களோடு மாமா சாமாவும் இலந்தைப் 'புலவர்' பாட்டுக்குத் தாளம் போட்டுக்கொண் டிருந்ததையும் கவனிக்காமல் போவானா?

மற்ற வேஷதாரிகளுக்கு எல்லாம் கிட்டாத பாராட்டும், கைதட்டலும் 'இலந்தைப் பழம் புலவர்' களுக்குக் கிட்டினது என்பதற்கு, ''ஒன்ஸ் மோர்! ஒன்ஸ் மோர்!'' என்ற கோஷங்கள் எழுந்ததே போதிய சான்று.

சபையோர் ரசித்து அளித்த இந்த ஒருமுகமான தீர்ப்பை ஒட்டி மாறுவேஷப் போட்டிக்கு வைத்த தங்க மெடலைக் கமிட்டியார் சேஷுவுக்கு அளித்தார்கள். துணைப்புலவர்களும் சோடை போகவில்லை. அவர்கள் இருவருக்கும் வெள்ளிப் பதக்கங்கள் கிடைத்தன. முதற் பரிசைத் தட்டிக்கொண்டு போன சேஷுவின் நடிப்புக்காக அவனிடம் வந்து பலர் கை குலுக்கினார்கள். சாமா மாமாவும் மகிழ்ச்சி அடைந்தார். ''எலே சேஷு! நடிப்பிலே பெற்றதுபோலவே படிப்பிலும் பதக்கம் கிடைக்கிறாப்போல முயற்சி செய்யணும்டா!'' என்று உற்சாகமும் மிரட்டலும் கலந்தபடி கூறினார். தங்கப் பதக்கத்தை மாமியிடம் எடுத்துக்கொண்டு ஓடினான் சேஷு!



வெடி மருந்து




'படார்!' உலகத்தையே கிடு கிடுக்க வைத்தது அந்த ஓசை. கிணற்றின் உட்புறம் இருந்த கற்பாறைகள் நொறுங்கி நாற்புறமும் சிதறின. ஏதோ சுவாரஸ்யமான சம்பாஷணையில் ஈடுபட்டிருந்த சிறுவர்களின் கூட்டத்தில் பேச்சு ஒரு நொடி நேரத்துக்கு ஸ்தம்பித்துவிட்டது. எல்லோரும் சத்தம் வந்த திசையில் வெறித்து நோக்கினர். வெடிமருந்தின் நாற்றம் காற்றில் கலந்து வந்து அவர்களுடைய நாசியை எட்டிற்று.

''என்னடா இது! தீபாவளிக்கு இன்னும் ஒரு மாதம் இருக்கும்போதே பட்டாசு ஓசையோடு வாசனையும் கிளம்பிவிட்டதே!'' என்று அதிசயித்தான் கிட்டு.

''பட்டாசு இல்லையடா அது. எங்கள் அப்பா கிணறு வெட்டுகிறார். பூமிக்குள் பாறைகள் பல தட்டுப்பட்டு மேலே வெட்ட முடியாதபடி தடை செய்கின்றனவாம். அவற்றை வெடிமருந்தால் பெயர்த்துக்கொண்டிருக்கிறார்கள்!'' என்று விவரித்தான் அப்போது அங்கே வந்து சேர்ந்த ராமு.

பிறகு சிறுவர்கள் ஏன் இங்கே தாமதிக்கிறார்கள்? வேடிக்கை பார்ப்பதற்குக் கிணற்றை நோக்கிப் புறப்பட்டது அந்தக் கும்பல். அது தன் லட்சியத்தை நெருங்கும் சமயத்தில், . . .

'படார்!'..இன்னுமோர் ஓசை! கிணற்றிலிருந்து புறப்பட்டு ஆகாய மார்க்கமாகப் பிரயாணம் செய்துவந்த மலைப் பிஞ்சு ஒன்றினால் தன் மண்டை சிதறாமல் மயிரிழையில் தப்பினான் வேலன். அவனைத் தொடர்ந்து வேகமாகப் பின் வாங்கிய கூட்டம் சற்று எட்டவே நின்றுகொண்டு வேடிக்கை பார்க்கத் தீர்மானித்தது.

''அடேடே! நமக்கெல்லாம் வருஷத்துக்கொரு தடவைதான் தீபாவளி வருகிறது. இவர்களுக்கோ தினந்தோறும் தீபாவளி! அதிலும் எப்படிப்பட்ட வெடி! ஆயிரம் யானை வெடிகளும் நூறு அவுட்டுகளும் சேர்ந்தாற் போலக் கொளுத்தினால்கூட இந்த ஓசைக்கு ஈடாகுமா? உம்..நான் பெரியவனானால் கிணறு வெட்டும் வேலைதானடா செய்யப் போகிறேன்..'' என்ற ரீதியில் கிட்டு பேசிக்கொண்டு போனான். அங்கே கூடியிருந்த எல்லோருக்குமே அந்தப் பிழைப்புத்தான் அப்போது மிகவும் பிடித்தமா யிருந்தது என்று சொல்லாமலே விளங்கும்.

தீபாவளிப் பண்டிகை நெருங்கும் வரையில் அந்தக் கிணற்றினருகில்தான் சிறுவர்கள் பெரும்பாலும் பொழுது போக்கினர்.

* * *

அறைக்குள் அப்பாவும் அம்மாவும் ஏதோ பேசிக்கொண் டிருந்தனர். அந்தப் பேச்சில் 'வெடி' என்ற வார்த்தை பன்முறை அடிபட்டது. தாழ்வாரத்தில் புத்தகமும் கையுமாய் உட்கார்ந்திருந்த சந்துருவால் தன் ஆவலை அடக்க முடியவில்லை. அப்பா தனக்காக வெடிகள் வாங்கி வந்திருப்பது தெரிந்தது. என்னென்ன வகைகள், வகைக்கு எத்தனை என்றெல்லாம் தெரிந்துகொள்ள வேண்டாமா?

மெல்ல எழுந்து அவ்வறையை நோக்கி நடந்தான்.

''எங்கேயடா வந்தாய், படிப்பை விட்டு?'' என்றார் தகப்பனார் மிரட்டும் குரலில்.

''இங்கிலீஷ் பாடப் புத்தகத்தில் இந்த வார்த்தைக்கு அர்த்தம் தெரியவில்லை, அப்பா. உங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ளத்தான் வந்தேன்'' என்றான் சந்துரு, அபாரமான கற்பனைசக்தியுடன்.

என்றுமே படிப்பில் சிரத்தை காட்டாத மைந்தனிடம் இந்தத் திடீர் மாறுதலைக் கண்டதனால் தானோ என்னவோ, தந்தையின் முகம் மலர்ந்தது. தாயாரைப் பற்றித்தான் கேட்கவே தேவை இல்லையே!

''என்ன வார்த்தையடா அது?'' என்று வினவினார் அவர்.

''இதோ காட்டுகிறேன், அப்பா.''

புத்தகத்தை எடுத்து அவசரமாய்ப் பக்கங்களைப் புரட்டினான் பையன். அவன் வயிறு பகீரென்றது. அதே சமயத்தில் 'பளார்' என்று அப்பாவின் அறையும் முதுகில் விழுந்தது!

அவன் புரட்டிக்கொண்டிருந்தது இங்கிலீஷ் புத்தகமே அல்ல; தமிழ்ப் பாடப் புத்தகம்! முன்பின் யோசிக்காமல் உபயோகிக்கப்பட்ட சந்துருவின் கற்பனைசக்தி அவன் காலை வாரி விட்டுவிட்டது.

அடித்ததோடு திருப்தியடையாமல் தகப்பனார் வசைமொழிகளையும் வாரித் தெளித்துக் கொண்டு போனார். அவையும் ஒருவாறாக ஓயும் வரை பொறுமையுடன் கேட்டுக்கொண்டு நின்ற சந்துரு கருமமே கண்ணாகப் பேச்சை எடுத்தான்.

''தீபாவளிக்கு எனக்குப் பட்டாசு கிடையாதா, அப்பா?''

''பட்டாசா? வாயைத் திறக்கக் கூடாது! போன வருஷம் பட்டாசு சுட்டுத்தானே மாட்டுக் கொட்டகையையே எரித்துவிட்டாய்!''

''இப்போது ஏதோ 'வெடி, வெடி' என்று அம்மாவிடம் சொல்லிக்கொண் டிருந்தீர்களே!''

''அட! அதைக் கேட்டுக் கொண்டுதான் இங்கே வந்து சேர்ந்தாயா? என் பாதங்களில் கிளம்பியிருக்கும் பித்தவெடியைப் பற்றியல்லவா நான் பேசினேன்! இதோ பார்: வெயிலில் நடந்து என் காலெல்லாம்....''மகனது அநுதாபத்தையும் பெற முயலுபவர்போல் தகப்பனார் காலைக்

காட்டினுர். கெட்டியாகியிருந்த பாதங்களின்மீது தோன்றியிருந்த வெடிப்புக்களேச் சந்துரு பார்த்தான்; ஆனுல் தந்தையிடம் பரிதாபப்படவில்லே.

''இந்தக் காலுக்குச் செருப்பு வாங்கக்கூடக் காசில்லாமல் நான் தவிக்கிறேன். நீ என்னடா என்ருல் பட்டாசுக்கு அழுகிருய்....''

அப்புறம் சந்துரு ஏன் அங்கே நிற்கிருன்?

* * *

"இருக்கிற பணத்தையெல்லாம் கிணற்றில் கொண்டு போய்க் கொட்டுகிறீர்கள். அழும் குழந்தைக்கு இரண்டு ரூபாய்ப் பட்டாசு வாங்கித் தரக்கூடாதோ?'' என்று ராமுவுக்குப் பரிந்து கொண்டு வாதித்தாள் அவன் தாய்.

''கிணறு வெட்டினுல் தண்ணீர் கிடைக்கும்; மகசூல் அதிகமாகும். இவனுக்குப் பட்டாசு வாங்கினுல் காசு கரியாவதுதானே மிச்சம்?'' என்று எதிர்வாதம் செய்தார் அவன் தந்தை.

''நீங்கள் மட்டும் வெடிமருந்தில் காசைக் கரியாக்கவில்லேயோ?'' என்று முறைப்பாய்க் கேட்டுவிட்டு அங்கிருந்து ராமு ஓட்டம் பிடித்தான்.

முன்னேற்பாடாக அவன் தாழ்வாரத்தில் வைத்திருந்த துணிப் பையைக் கையில் எடுத்துக்கொண்டு வேகமாய்ச் சென்றவன் வீதி முனேயில் சந்துருவைக் கண்டான். அவன் முகமும் வாடித்தான் காணப்பட்டது.

''என்னடா சந்துரு! உனக்கும் நாமந்தானு?''

'ஆம்' என்னும் பாவனேயாக உதட்டைப் பிதுக்கிச் சந்துரு தலேயை ஆட்டினுன்.

''டேய்! இந்தமுறையெல்லாம் நம் காரியம் நடக்காது. நம் பெற்ருேருக்குச் சரியான ஒரு பாடம் கற்பிக்க வேண்டும். நான் சொல்கிறபடி கேட்பாயா?'' என்ருன் ராமு.

''சொல்.''

''இதோ பார், நான் வீட்டை விட்டு வெளியேறிக்கொண்டிருக்கிறேன். நீயும் என்னேடு வந்துவிடு. நம்மைக் காணுமல் எல்லோரும் தேடித் தவிக்கட்டும். கேவலம் இரண்டு ரூபாய்ப் பட்டாசுகூட வாங்கித் தராமல் அற்பத்தனமாக நடந்துகொண்டதனுல்தான் குழந்தைகள் மனமுடைந்து எங்கோ சென்றுவிட்டார்களென்று அவர்கள் உணர்ந்து உருக வேண்டும். என்ன சொல்கிருய்?''

சந்துரு உற்சாகத்துடன் சம்மதித்தான். மறு கணம் ஒரு சந்தேகம் அவன் மனத்தைக் கௌவியது.

''..அது சரி. போகிற இடத்தில் சாப்பாட்டுக்கு என்ன செய்வது?'' என்று கேட்டான்.

''அதை யோசித்துத்தானே தீபாவளிப் பட்சணங்களேயெல்லாம் திருடி இந்தப் பையில் அடைத்துக்கொண்டு வந்திருக்கிறேன். மேலும் அரவங்காட்டுக்குப் போனேமானுல் அங்குள்ள மரங்



களில் மாவும் பலாவும் காய்த்துத் தொங்குமாம். இவற்றைவிட வேறென்ன வேண்டும்?''

சந்துருவின் ஐயம் தீர்ந்தது. நண்பர்கள் இருவரும் குதூகலத்துடன் கைகோத்து அரவங் காட்டை நோக்கி நடந்தனர்.

* * *

வானை முட்டும் மரங்களும் அடர்ந்த புதர்களும் சூழ்ந்து பயங்கரமாகத் தோற்றம் அளித்தது காடு. அதன் நடுவே சலசலக்கும் நீரோடையின் கரையில் ராமுவும் சந்துருவும் வந்து அமர்ந்தனர். கால் கடுக்க நடந்து வந்ததில் அவ்விருவருக்கும் நல்ல பசி.

மூட்டையை அவிழ்த்ததும் ராமு திடுக்கிட்டான். அங்கே அவன் கண்டது தின்பண்டங்களை அல்ல; அவற்றிற்குப் பதிலாகக் கன்னங் கறேலென்ற வெடிமருந்து தான் காட்சியளித்தது. அவசரத்தில் ஓடி வந்த ராமு தவறுதலாக வேறு பையை எடுத்துக்கொண்டு வந்து விட்டான்!

என்ன விபரீதம் இது! ராமு கைகளைப் பிசைந்தான். சந்துருவோ ஏமாற்றமும் கோபமும் மிகுந்தவனாக அவனைத் திட்டத் தொடங்கிவிட்டான்.

''முட்டாள்! உன் பேச்சை நம்பினேனே! நீ ஏண்டா என்னைக் கூப்பிட்டாய்?''

''நீ ஏன் வந்தாய்?'' என்று ராமுவும் கோபத்துடன் திருப்பிக் கேட்டான்.

பசி வதைத்தது. அரவங்காட்டு மரக்கிளைகளில் கனிந்து குலுங்க வேண்டிய பழங்களில் ஒன்றையாவது காணவில்லை. வேறு வழி இல்லாமல் ஓடைத் தண்ணீரை அள்ளிப் பருகித் தங்கள் பசியையும் கோபத்தையும் சற்றுத் தணித்துக் கொண்டார்கள்.

''போதும், நாம் பெற்றோர்களுக்குப் பாடம் கற்பித்தது! பேசாமல் திரும்பி இருட்டு முன் வீடு சேர்ந்துவிடலாம்'' என்று இருவரும் கிளம்பினர். ஆனால் பாழும் துரதிருஷ்டம் இன்னும் அவர்களைத் தொடர்ந்தே வந்து கொண்டிருந்தது போலும்! அந்தப் பொல்லாத காட்டிலிருந்து வெளியேற அவர்களுக்கு வழி தெரியவில்லை.

இருவருமாகச் சுற்றியலைந்தனர். வயிற்றுப் பசியுடன் கால்வலியும் சேர்ந்துகொண்டது. பொழுது சாயச் சாயப் பயம் வேறு மனத்தைக் கௌவியது. கடும் புலி வாழும் காட்டில் எவ்வாறு இரவைக் கழிப்பது? தூரத்தில் நரியொன்று ஊளையிட்ட சத்தத்தைக் கேட்டதுமே கதி கலங்கிவிட்டனர்.

மாலை கழிந்து இரவின் இருளும் சூழ்ந்தாயிற்று.

''சந்துரு, தரையில் இருந்தால் நிச்சயம் ஆபத்துத்தான். அதோ அந்தப் பெரிய மரத்தின் கிளையில் ஏறி உட்கார்ந்துகொண்டு எப்படியேனும் இரவைக் கழித்து விடுவோம்'' என்று ராமு பிரேரேபிக்கச் சந்துரு ஒப்புக்கொண்டான். கரடியொன்றைத் தவிர வேறெந்தத் துஷ்டமிருகமும் தங்களை அணுக முடியாது என்ற தைரியத்துடன் அவர்கள் பொழுது போக்கினார்கள். தூக்கம் என்னவோ கண்களைச் சுழற்றிக்கொண்டு வந்தது. ஆனால் அங்கே உறங்குவது எப்படி? மரத்திலிருந்து பிடி தவறினாலும் கீழே விழுந்து எலும்பு நொறுங்கிவிடாதா?

நள்ளிரவாகியிருக்கும். திடீரென்று தூரத்தில் வெளிச்சம் தோன்றியது. ராமுவும் சந்துருவும் கண்களை அகல விரித்துப் பார்த்தனர்.

கையில் தீவட்டிகள் ஏந்தி நாலைந்து ஆட்கள் வந்து கொண்டிருப்பது தெரிந்தது. சிறுவர்களின் இதயங்கள் ஆனந்த மிகுதியால் படபடக்கத் தொடங்கின. காட்டினின்று வெளியேற வகை தெரியாது திகைக்கும் தருவாயில் உதவி கிட்டுகிறதென்றால்......? ஆனால் என்ன இது!

நல்ல வேளை! சரியான சமயத்தில் ராமு அவர்களின் தோற்றத்தைக் கவனித்துவிட்டான். மீசை தாடிகளில் மறைந்த பயங்கர முகங்கள், வெறி கொண்ட பார்வை, உடலில் ரத்தக்கறை படிந்த ஆடைகள் - சாதாரண ஆட்களா இவர்கள்? தோளில்

துப்பாக்கி, இடையில் கத்தி இவற்றையும் சேர்த்துப் பார்க்கும்போதே கொடுமனம் படைத்த கொள்ளைக்காரர்கள் என்று தெரியவில்லையா? இவர்களை நெருங்கி உதவி வேண்டுவதைவிடப் புலி கரடிகளுக்கு உணவாகி மடிவது மேல்.

ஐயையோ! என்ன ஆபத்து இது? இதே மரத்தை நோக்கியல்லவா அந்தப் பாதகர்கள் வந்துகொண்டிருக்கின்றனர்!

சப்த நாடியும் ஒடுங்கிச் செயலற்றுவிட்ட சிறுவர்கள் மரத்தோடு மரமாக ஒட்டிக்கொண்டார்கள்.

தீவட்டிக் கொள்ளைக்காரர்கள் அந்த மரத்தின் எதிரே கிடந்த பெருங் கற்பாறையருகே வந்து சேர்ந்தனர். உம், "புரட்டுங்கள், கல்லை" என்று தலைவன் உத்தரவிட நால்வரும் வேலை தொடங்கினர். பாறை பிரம்மாண்டமானதுதான். ஆயினும் இரும்புத் தசைகள் ஒத்துழைத்து வெகு எளிதாக அதைப் புரட்டித் தள்ளிவிட்டன. அதனடியில் இருந்த மரப்பெட்டி திறக்கப்பட்டது.

அந்தப் பெட்டியினுள்ளே . . மினுமினுக்கும் தங்க நாணயங்கள்! ஜ்வலிக்கும் வைரங்கள்! கிளையின் மறைவிலிருந்து பார்த்த சிறுவரின் விழிகள் பிதுங்கின.

"உள்ளே வையுங்கள், இன்றைய வருமானத்தை. அடுத்த பௌர்ணமியன்று வந்து இவற்றையெல்லாம் பங்கு போட்டுக் கொள்வோம்" என்றான் கொள்ளையர் தலைவன். இன்னும் பல தங்க, வைர ஆபரணங்களும் நோட்டுக் கற்றைகளும் பெட்டிக்குள் போய்ச் சேர்ந்தன. பழையபடி பாறையைப் புரட்டிப் பெட்டியை மறைத்துவிட்டுக் கள்ளர்கள் திரும்பிச் சென்றனர். இதே இரவில் அவர்களுக்கு வேறிடத்தில் வேலை இருந்தது போலும்!

* * *

மரத்திலிருந்து இறங்கி வந்த ராமுவும் சந்துருவும் அந்தப் பாறையைப் புரட்டச் செய்த முயற்சிகள் பலன் தரவில்லை. நான்கு தடியர்களின் அசுர பலம் எங்கே, இந்த இரு சிறு பையன்களின் சக்தி எங்கே!




சோர்ந்து உட்கார்ந்து பெருமூச்சு விட்டனர் இருவரும்.

'அடேயப்பா! எத்தனை பணம்! இவ்வளவும் நம்மிடம் இருந்தால்?' என்ற ஒரே எண்ணந்தான் அவர்கள் மனத்தில் ஓங்கி நின்றது. ஆசைப்பட்டால் போதுமா? அதிருஷ்டமும் கூட வேண்டாமா? மலைபோல அந்தக் கல் குறுக்காக நின்றிராவிட்டால் அந்தக் கொள்ளையர்களுக்கெல்லாம் நாமம் சாத்திவிட்டுப் பெட்டியைத் தட்டிக்கொண்டு போய்விடலாம்.

மின்னலைப் போலச் சட்டென ராமுவின் மூளையில் உருவாயிற்று அந்த யோசனை. பையில் துழாவி ஒரு மத்தாப்புப் பெட்டியை எடுத்தான். மத்தியான்னம் தங்களை வயிறெரியச் செய்த வெடிமருந்தில் கொஞ்சம் அள்ளினான். மூளையுடன் ஒத்துக் கைகளும் துரிதமாக வேலை செய்தன. ஐந்தே நிமிஷங்கள் . . . .

'படார்' என்ற ஓசை காட்டையே அதிர வைத்தது. நொறுங்கிய பாறையின் துண்டுகள் சிதறின. பெட்டியைக் கையில் எடுத்துக்கொண்டு ராமுவும் சந்துருவும் புறப்பட்டபோது பொழுது பலபலவென்று விடிந்துகொண்டிருந்தது. இம்முறை அவர்களுக்கு வழியும் தவறவில்லை.

அந்த வருஷம் தீபாவளிப் பண்டிகையை ஊரில் மற்றவர்களைவிட அதிக விமரிசையுடன் கொண்டாடியது ராமு, சந்துரு ஆகியோரின் குடும்பங்களே என்றால் அதில் அதிசயப்படுவதற்கு என்ன இருக்கிறது?

# திருட்டு எலிகள்

'ராஜு'

1

காடு ஒன்றில் மூன்று எலிகள் மிகவும் சிநேகமாக வசித்து வந்தன. சிநேகம் என்றால் எப்படிச் சிநேகம்? தொழில் முறையில் ஏற்பட்ட சிநேகம். என்ன தொழில் தெரியுமா? திருட்டுத் தொழில்தான். மற்ற மிருகங்கள் எல்லாம் அவைகளைத் திருட்டு எலிகள் என்றே அழைப்பது வழக்கம்.

ஒரு சமயம் மூன்று எலிகளும் உல்லாசமாக வெளியே உலாவிக் கொண்டிருந்தன. அந்தச் சமயத்தில் பளபளவென்று அச்சிட்ட கடிதம் ஒன்று கிழிந்து கீழே கிடந்தது. அதை ஓர் எலி எடுத்துப் படித்தது. தலை தீபாவளி விருந்துக்கான அழைப்பு இதழ் அது. அங்கே வந்த மற்றோர் எலி, ''எங்கே, எப்பொழுது, யார் வீட்டில்?'' என்று கேட்டுக் கொண்டே அந்தக் கடிதத்தைப் பிடுங்கியது. மூன்றாவது எலி அங்கே வந்து கடிதத்தை எட்டிப் பார்த்துப் படித்தது.

''நல்ல விருந்துதான்; இன்று மாலை நடக்கப் போகிறது. ஆனால் யார் அழைப்பு இதழ் அனுப்பியது என்று தெரியவில்லையே; அந்த இடம் கிழிந்து விட்டதே!'' என்றது மூன்றாம் எலி.

''அழைப்பு இதழ் அனுப்பியவரின் பெயர் தெரியாவிட்டால் என்ன? விருந்து நடக்கும் இடம் தெரிந்தால் போதாதா?'' என்றது முதல் எலி.

''ஆமாம். ஆமாம்; எந்த இடத்தில் விருந்து நடக்கிறது?'' என்று கேட்டது மூன்றாவது எலி.

''அனந்தங் காட்டில் தாமரைக் குளத்துக்கு அருகிலே'' என்றது இரண்டாவது எலி.

''அப்பப்பா! அந்த இடம் இங்கிருந்து பத்து மைல்களுக்கப்பால் அல்லவா இருக்கிறது?'' என்றது முதல் எலி.

''இருந்தால் என்ன? இப்பொழுதே கிளம்பினால் மாலையில் சரியான சமயத்துக்குப் போய்ச் சேரலாம். இப்பொழுதே கிளம்பலாம்'' என்றது மூன்றாவது எலி.

''நமக்குள் ஒருவருக்காவது அழைப்பு வராமல் நாம் எப்படிப் போவது?'' என்றது முதல் எலி.

''நீ சொல்லுவது நன்றாக இருக்கிறதே! யாருக்கு அழைப்பு வந்தால் என்ன, வராவிட்டால் என்ன? விருந்துக்கு வருகிறவர்கள் யாவரும் அழைப்பு இதழ் கிடைத்தா வருகிறார்கள்? தெரிந்தவர்கள் - தெரியாதவர்கள், அழைக்கப்பட்டவர்கள் - அழைக்கப் படாதவர்கள் எல்லாருந்தான் வருகிறார்கள்; எத்தனை விருந்தில் நாம் பார்த்திருக்கிறோம். நாம் மூவரும் ஜோராக விருந்து நடக்கும் இடத்துக்குச் சென்றால் விருந்து நடத்துபவர்கள் நம்மை, 'அழைத்துத்தான் வந்திருக்கிறார்கள்' என்று உபசாரம் செய்வார்கள். புறப்படுங்கள்!'' என்று ஒரே சமயத்தில் மற்ற இரண்டும் கூறின.

மூன்று எலிகளும் தீபாவளி விருந்து சாப்பிட 'ஜாம் ஜாம்' என்று கிளம்பின. உற்சாகத்துடன் கிளம்பினவே தவிர, தூரம் போகப் போகக் களைப்பு மேலிட்டது. பசி எடுத்தது. மூச்சுத் திணறிக் கொண்டு அனந்தங் காட்டில் உள்ள தாமரைக் குளத்தை அடைந்தன. அங்கே சற்றுத் தூரத்தில் பிரமாதமாகப் பிரகாசம் உள்ள பலவித வர்ண விளக்குகள் போடப்பட்டிருந்தன.

மேள வாத்தியங்களும் பாண்டு வாத்தியங்களும் முழங்கிக்கொண்டிருந்தன. மிருகங்கள் எல்லாம் கூட்டங் கூட்டமாகப் போய்க் கொண்டிருந்தன. மூன்று எலி

களும் மிகவும் தைரியத்துடன் அந்த இடத்தை நெருங்கின. சற்றுத் தூரத்திலிருந்தே ஏராள மான மேஜைகள் போடப்பட் டிருப் பதையும், மேஜையின்மீது பல வித மான பலகாரங்கள் வைக்கப்பட் டிருப்பதையும் மேஜைகளுக்கு எதிரில் யானை முதலிய பல மிருகங் கள் விருந்து சாப்பிடுவதற்குத் தயாராக உட்கார்ந்திருப்பதையும் கவனித்தன. ''சரியான சமயத் திற்கு வந்தோம்!'' என்று சொல் லியபடியே மூன்று எலிகளும் விருந்து நடக்கும் இடத்துக்குச் சென்றன.

அன்று அந்த விருந்தை ஏற்பாடு செய்தது யார் தெரியுமா? அந்தக் காட்டில் வசித்து வந்த பொல்லாத மூன்று காட்டுப் பூனை கள்தான். உள்ளே நுழைந்த பொழுது அவைகளை மூன்று காட்டுப் பூனைகளும் பார்த்துவிட்டன. இதைப் பார்த்ததும் மூன்று எலி களுக்கும் உடல் நடுக்கங் கண்டது. மூலைக்கு ஒன்ருக ஓடித் தப்பப் பார்த்தன. ஆனல் அந்தக் காட்டுப் பூனைகளா சும்மா விடும்? வந்திருந்த விருந்தினர்களைக்கூட மறந்து, தப்பி ஓடும் எலிகளைத் தாவித் தாவிப் பிடிக்க ஆரம்பித் தன. இதை அறிந்த விருந்துக்கு வந் திருந்த நாய்களும் பூனைகளும் எலி களைப் பிடித்துத் தின்பதற்காக தாம் உட்கார்ந்த இடத்தை விட்டு எழுந்திருந்து இங்கும் அங்கு மாக ஓட ஆரம்பித்தன. மேஜைகள் யாவும் சாய்ந்தன. விருந்துக்கு வைத்திருந்த சாமான்கள் யாவும் நாலு பக்கங்களிலும் சிதறின. ஒரே சமயத்தில் பல நாய்களும் பூனைகளும் மூன்று எலிகளைத் துரத்தியும் எலிகள் அதிருஷ்ட வசமாகத் தப்பிப் பிழைத்தன!



மறுபடியும் ஓர் இடத்தில் அந்த எலிகள் சந்தித்தன. அப்பொழுது முதல் எலி மூச்சுத் திணறிக் கொண்டே, ''எனக்கு அப்பொழுதே தெரியும்'' என்று சொல்லிற்று.

''என்ன உனக்குத் தெரியும்?'' என்று கேட்டன, மற்ற இரண்டு எலிகளும்.

''அழைப்பு இதழ்க் கடிதத்தில் கையெழுத்து அச்சிடப்பட் டிருந்த இடத்தில் 'னை' என்ற ஒரு வார்த்தை மட்டும் தெரிந்தது. நான் 'யானை'யாக இருக்குமோ என்று நினைத்தேன். பூனை என்று யார் எதிர்பார்த்தார்கள்?'' என்றது அது.

## 2

பணக்காரக் கரடி வீட்டிலே தலை தீபாவளி. அந்த வீட்டில் விதவிதமான பட்சணங்களுக்குக் கேட்க வேண்டுமா? மூன்று எலிகளும் தாற்காலிகமாகத் தம் இருப்பிடத்தைக் கரடியின் வீட்டில் வைத்துக் கொண்டன. இந்த மூன்று எலிகளின் துஷ்டத்தனத்தைப்பற்றியும், திருட்டுத்தனத்தைப்பற்றியும் காட்டிலுள்ள எல்லா மிருகங்களுக்கும் தெரியும்; அதுவும் முக்கியமாகக் கரடியின் வீட்டில் இருக்கும் இரண்டு கரடிக் குட்டிகளுக்கும் மிகவும் நன்ருகத் தெரியும். திடீரென்று மூன்று எலிகளும் வீட்டில் நடமாடுவதைக் கண்ட கரடிக்குட்டிகள் இவைகளைக் கவனிக்கத் தொடங்கின. ''என்ன சாமான் அறையில் அடிக்கடி போய்ப் போய் வருகிறீர்கள்? ஓகோ! தீபாவளிப் பட்சணமோ!'' என்று கரடிக்குட்டிகள் சொல்லிக் கொண்டே சாமான் அறைக்குள் சென்றன; அங்கே வைத்திருந்த எல்லாப் பட்சணங்களையும் எடுத்துக்கொண்டு வந்து இரும்புப் பெட்டி இருக்கும் அறையில் வைத்துப் பூட்டிவிட்டு வெளியே வந்தன. இதைப் பார்த்த மூன்று எலிகளும் வருத்தத்துடன் இங்கும் அங்குமாகப் போய்க் கொண்டிருந்தன.

அந்தச் சமயத்தில் கரடிக்குட்டிகளின் தாய் அங்கே ஒரு பழைய தகர டப்பாவை எடுத்துக் கொண்டு வந்தது. கதவு

போட்டோ: மகாதேவன்



அம்மா கொடுத்த முறுக்கு



அதிலே கொஞ்சம் உனக்கு



இதோ பாரு, எனக்கு!



தாழிடப்பட் டிருப்பதைப் பார்த்துத் தகர டப்பாவை அறைக்கு முன்னுடி வைத்துவிட்டு அறையின் சாவியைக் கொண்டு வரச் சென்றது. அதைப் பார்த்திருந்த மூன்று எலிகளும் இதுதான் சமயம் என்று தகர டப்பாவுக்குள் சென்றன. தகர டப்பாவின் வழியாக உள்ளே எப்படியாவது நுழைந்து தீபாவளிப் பட்சணங்களைத் தின்று, கரடிக் குட்டிகளின் சூழ்ச்சி பலிக்காதபடி செய்ய வேண்டும் என்பது தான் எலிக்குட்டிகளின் நோக்கம். சில நிமிஷங்களுக்கெல்லாம் கரடிக் குட்டிகளின் தாய், பட்சணங்கள் வைத்திருக்கும் அறையைத் திறந்தது. வெளியே வைத்திருந்த தகர டப்பாவை உள்ளே கொண்டு வைத்தது. அப்பொழுது அறையில் வைத்திருந்த தினுசுத் தினுசான பட்சணங்களின் வாசனை 'கம்'மென்று வீசிற்று. ''இனிமேல் இந்தப் பட்சணங்கள் எல்லாம் நமக்குத்தான். நம்மை ஏமாற்றிய கரடிக்குட்டிகள் நன்முக ஏமாந்தன!'' என்று அவை ஒன்றுக்கொன்று சொல்லிக்கொண் டிருந்தன.

அந்தச் சமயத்தில் உள்ளே இருந்த கரடிக்குட்டிகளின் தாய், ''இந்தப் பட்சணக் கூடைகளை யார் இங்கே கொண்டு வைத்தார்கள்? காற்ருேட்டமுள்ள இடத்தில் சாமான் அறையில் அல்லவா இருக்கவேண்டும்!'' என்று சொல்லிக்கொண்டே பட்சணக் கூடைகளை அந்த அறையை விட்டு அப்புறப்படுத்தி, அறையையும் பூட்டிவிட்டுப் போய்விட்டது. பாவம், மூன்று எலிகளும் என்ன செய்யும்? அவைகள் மனக்கோட்டை கட்டியதெல்லாம் பயனில்லாமல் போய்விட்டது! மூன்று எலிகளும் தகர டப்பாவிலிருந்து வெளியே வந்து அறையைச் சுற்றிச் சுற்றி வந்தன. இரும்புச் சாமான்களைத் தவிர எலிகள் கடிப்பதற்கு மரச்சாமான்கள்கூட இல்லை. அவை பசியால் வாடின. தகுந்த சமயம் பார்த்து வெளியே போகவேண்டுமே!

மறுநாள் காலையில் யாரோ கதவு திறக்கும் சத்தம் கேட்கவே மூன்று எலிகளும் பயந்து ஓடி, தகர டப்பாவுக்குள் ஒளிந்துகொண்டன.

உள்ளே வந்த கரடிக் குட்டி



களின் தந்தை, ''இந்தப் பழைய துருப்பிடித்த தகர டப்பாவை இங்கே யார் கொண்டு வைத்தார்கள்? நான்தான் அதை வெளியே எறியச் சொல்லியிருந்தேனே!'' என்று கோபத்துடன் தன் வேலையாளைக் கூப்பிட்டுத் தகர டப்பாவை வெளியே எறியும்படி உத்தரவிட்டது. வேலையாள் கரடி தகர டப்பாவை எடுத்துக்கொண்டு வெளியே போயிற்று. அதற்குள் இருந்த மூன்று எலிகளும் பேச்சு மூச்சு இல்லாமல் டப்பாவின் ஒரு மூலையில் பதுங்கிக்கொண்டிருந்தன. வேலை ஆள் கரடி தகர டப்பாவை வெளியே எறியப் போயிற்று. ஆனால் அந்தச் சமயத்தில் ஒரு குப்பை வண்டி வரவே அந்த வண்டிக்குள் தகர டப்பா எறியப்பட்டது. மூன்று எலிகளும் இப்போது எங்கே இருக்கிறோம் என்று தெரியாமல் விழித்தன. பிறகு மெதுவாக எட்டிப் பார்க்கவே, தாம் குப்பை வண்டியில் சவாரி செய்வதைக் கண்டு அவமானம் அடைந்தன. அவைகளுக்கு ஏற்பட்ட அவமானத்தை யாரும் பார்க்கவில்லை என்று நினைத்து அந்த மூன்று எலிகளும் ஏமாந்தன. ஏனென்றால் குப்பை வண்டியில் ஏராளமான கொசுக்களும், ஈக்களும், எறும்புகளும் இருப்பதைப் பிறகுதான் தெரிந்துகொண்டன. ''இவை ஒவ்வொரு வீடாகப் போய் நம்மைப்பற்றிச் சொன்னால் நமக்கு அவமானம் அல்லவா? இனிமேல் இந்தத் திருட்டுத் தொழிலுக்கே போகவேண்டாம்'' என்று மூன்று எலிகளும் சேர்ந்து தீர்மானித்தன.

**'இதோ இருக்கேன்!'**

போட்டோ: **பி. குருமூர்த்தி**



# கதைச் செல்வர்

தம்பி சீனிவாசன்

இனிப்பான பண்டங்களையும் உற்சாகமான விளையாட்டுக்களையும் நீங்கள் விரும்புகிறீர்கள். இவற்றால் மட்டும் உங்கள் மகிழ்ச்சி பூர்த்தியாகுமா? ''உள்ளத்தைக் கவரும் அருமையான கதைகள் நிறைய வேண்டும்'' என்று கேட்கிறீர்கள்.

சிறுவர் சிறுமியருக்கு மட்டும் என்ன? வயதாகிவிட்டால் இனிப்புப் பிடிக்காமல் போகலாம். ஓடி விளையாடுவதில் ஊக்கம் குறையலாம். ஆனால் ஆனந்தக் கதைகளிலே எவருக்குமே ஆர்வம் சற்றும் குறைவதில்லை.

கதை சொல்லுவது ஒரு கலை என்றால், மனித இனத்தின் மிகப் பழைய கலைகளுள் ஒன்று அது. உலகெங்கும், ஒவ்வொரு நாட்டிலும், பெயர் தெரியாத நாடோடிகள் இயற்றி நடமாடவிட்ட சுவையான கதைகள் எத்தனை! வாழ்க்கை உண்மைகளையும் ஆழ்ந்த தத்துவங்களையும் விளக்க, மகான்கள் கூறிய கதைகள் எத்தனை!

நவநவமான கதைகளை இயற்றும் ஒரு புதிய கதாசிரியர் பரம்பரை சில தலைமுறைகளுக்கு முன் தொடங்கியுள்ளது. புகழ்பெற்ற இந்தக் கதை மன்னர்களின் வரலாறும் சுவையானதுதான்.

பெரும் கதைச் செல்வர்களில் சிலரை அடுத்து வரும் பக்கங்களில் நாம் சந்திக்கலாம்.



# குழந்தைகளுக்கு ஒரு கவிஞன்

*ஸ்டீவன்சன்*

ஒரு காகிதத்திலே மனத்துக்குத் தோன்றியபடி கிறுக்கி, ஒரு கற்பனைத் தீவின் தரைப்படத்தை வரைகிறான் ஒரு சிறுவன். அருகே வந்த அவன் தந்தை அதை உற்றுப் பார்க்கிறார் ஒரு கணம். மறுகணம் அவரும் அருகே அமர்ந்து, அந்தப் படத்திலே சில இடங்களைக் குறிக்கிறார். விசித்திரப் பெயர்களை எழுதுகிறார். நெடுநேரம் அதை வைத்துக் கொண்டு சிந்திக்கிறார். பிறகு படமும் கையுமாக அறையை விட்டு வெளியே செல்கிறார். சிறுவனுக்கு ஒன்றும் புரியவில்லை - அடுத்த நாள் காலை வரையில். அந்தப் படத்தை வைத்துக்கொண்டு அவன் தந்தை ஒரு நாவலையல்லவா எழுதத் தொடங்கிவிட்டார்!

இவ்வாறு தொடங்கப்பட்ட ''புதையல் தீவு'' என்ற அந்த நாவல் - சிறுவர் கதை - எழுதிச் சுமார் நூறு ஆண்டுகள் ஆகியும் இன்றும் அதை யாவரும் விரும்பிப் படிக்கிறார்கள்.

புதையல் தீவை எழுதிய ஆசிரியர் ராபர்ட் லூயி ஸ்டீவன்சன் தமது இருபத்தெட்டாவது வயது முதல் நாற்பத்து நான்காவது வயது வரையில், உள்ளத்தைக் கவரும் எத்தனையோ உயர்ந்த கவிதை, பிரயாண நூல், அற்புதமான சிறுகதை, வீரதீரச் செயல்களை விவரிக்கும் நாவல் - எல்லாம் எழுதியுள்ளார்.

இந்தச் சிறந்த எழுத்தாளர் இளமை முதலே ஒரு 'நோஞ்சான்'. எப்போதும் ஏதாவது நோய் காரணமாகப் படுக்கையில் விழுந்து கிடப்பார். ஆனாலும் அவரது கூரிய அறிவும் கற்பனையும் அப்போதுதான் தீவிரமாக வேலை செய்யும். குழந்தைப் பருவத்தில் ஸ்டீவன்சன், விளையாடத் தோழர்கள் இல்லாமல், தமது படுக்கையை ஒரு பெரிய கடலாகவும், தலையணையைக் கோட்டையாகவும், தம் அறையை ஓர் இருண்ட காடாகவும் நினைத்து, மனத்துக்குள்ளே ஆயிரம் சாகசச் செயல்களைப் புரிவதாகக் கற்பனை செய்து தன்னந்தனியாக விளையாடுவார். இந்த மனநிலைகளையெல்லாம் பாடல்களிலே விவரிக்கிறார். உலகெங்கும் சுற்றவேண்டும் என்று ஆசை. ஆனால் உடல்நிலை இடங் கொடுக்கவில்லை.

புகழ்பெற்ற எஞ்சினியர் பரம்பரையில் பிறந்தும், தந்தையின் விருப்பத்திற்கு மாறாக, எழுத்தாளராகவே வாழ ஆசைப்பட்டார் ஸ்டீவன்சன். பெற்றோரின் விருப்பத்திற்கு எதிராக, ஓர் அமெரிக்க விதவையை மணந்தார். அந்த விதவையின் மகன் லாயிட் என்பவனுக்காகத்தான் ''புதையல் தீவு'' எழுதப்பட்டது.

தமது கடைசிக் காலத்தைத் தென் கடல் தீவுகளில் அந்தத் தீவு வாசிகளோடு கழித்தார் ஸ்டீவன்சன். அவரது குழந்தைப் பாடலுள் ஒன்று:

**எத்தனை எத்தனை கோடிவகை**
**எங்கும் உலகில் நிரம்பியவை!**
**அத்தனை மக்களும் ஆனந்தமாய்**
**அரசரைப் போலவே வாழ்ந்திடலாம்!**

SL 031n211N ௲ KN N59



# ஏழை எளியோரை இலக்கியத்தில் ஏற்றினார்

## டிக்கன்ஸ்

அந்த அநாதை இல்லத்தில் வயிறார உணவளிக்கப்படவில்லை. உயிரை உடலில் ஒட்டவைக்கும் அளவே உணவு தரப்பட்டது. ஒன்பது வயதுச் சிறுவன் துணிச்சலாக, ''இன்னும் கொஞ்சம் கஞ்சி வேண்டும்'' என்று கேட்டுவிட்டான். அப்பப்பா, பிறகு அந்த ஆலிவர் ட்விஸ்ட் பட்ட பாடு!

அநாதை விடுதி மட்டுமா? நூறு நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன், இங்கிலாந்தில் சிறைகளிலும், தொழிற்சாலைகளிலும், சமூகத்திலும் ஏழை எளியோர் பட்ட சிரமங்களை, மனத்தில் பதியும்படி ஒருவர் எடுத்துச் சொன்னார். அவற்றில் பல கஷ்டங்களை அவரும் அவர் குடும்பத்தாரும் தாமே அநுபவித்துள்ளனர். பல ஊழல்களையும் உண்மைகளையும் பொது மக்கள்முன்பு கொண்டு நிறுத்தி, பல்லாயிரம் மக்களுக்கு விமோசனம் அளிக்கும் தொழிற் சட்டங்கள் தோன்றக் காரணமாயிருந்தவர் சார்லஸ் டிக்கன்ஸ்.

ஐம்பத்தெட்டு ஆண்டுகளே வாழ்ந்து, சுமார் 40 பெரும் நாவல்கள் எழுதினார் இவர். இவர் இறந்து 90 ஆண்டுகள் ஆகியும் இவரது நாவல்கள் இன்றும் ஏராளமாக விற்பனையாகின்றன.

பள்ளிப்படிப்பே அதிகம் பயிலாதவர். தந்தையோ கடன் அதிகம் வாங்கி ஏழையாகிவிட்டவர். மிகச் சிறு வயதிலேயே மிகக் குறைந்த சம்பளத்துக்கு வேலையில் அமர்ந்துவிட்டார். வேலை நேரம் மட்டும் மிக அதிகம். இருந்தும் பாடுபட்டுச் சுருக்கெழுத்துப் பயின்றார். ஓய்வு கிடைத்த போதெல்லாம் சலிக்காமல் படித்தார். பயன்: விரைவிலேயே பத்திரிகை நிருபரானார்.

பத்திரிகை நிருபர் டிக்கன்ஸ் வேலை நிமித்தம் நாடெங்கும் சுற்றினார். பல்வேறு வகை மக்களைச் சந்தித்தார். கண்ணையும் காதையும் நன்கு திறந்து வைத்துக்கொண்டார். பயன்: நிருபர் டிக்கன்ஸ் சிறந்த எழுத்தாளரானார்.

ஹாஸ்ய எழுத்தாளராகி, மக்களைக் கவர்ந்தார், மக்களின் துயரங்களையெல்லாம் வடித்து, சோகச் சிரிப்பும் எழுப்பினார். பயன்: மக்களுக்கு நலமளித்த தொழிற்சட்டங்கள் தோன்றின.

ஆசிரியர் டிக்கன்ஸின் தொடர் நாவல்கள் உலகெங்கும் ஆவலுடன் படிக்கப்பட்டன. அவரது நூல்களை அவரே உணர்ச்சியுடன் படித்துக் கேட்க விரும்பினர் மக்கள். நேயர்களின் விருப்பத்தை நிறைவேற்ற டிக்கன்ஸ் பல நாடுகளிலும் பயணம் செய்தார்.

தமது வாழ்வின் இறுதி நாள் வரை எழுத்துத் தொழிலை விடவில்லை டிக்கன்ஸ். அவர் எழுதிய போது இளைஞர்களை மனத்தில் கொண்டு எழுதினாரோ இல்லையோ, அவரது கதைகளில் பலவும் இளைஞர்கள் கஷ்டப்பட்டு வெற்றியடையும் வரலாறாகவே இருக்கின்றன.

84203



# கணக்கு மாமா

## லூயி காரல்

என்ன அற்புத உலகம்! •புட்டியிலுள்ள நீரைக் குடித்தால் உடல் குறுகும்; அப்போது வண்ணாத்திப் புழுவைக் கண்டு கூடப் பயப்பட வேண்டியிருக்கிறது. ஒரு ரொட்டித் துண்டைத் தின்றால் உடல் நீளும்; அப்போது ராணியைக் கூட அலட்சியப்படுத்த முடிகிறது.

இவையும் இவை போன்ற பல விந்தை அனுபவங்களும் ஆலிஸுக்கு நேருகின்றன. அதிசய உலகில் ஆலிஸ் சந்திக்கும் விந்தை ஜந்துக்களும், அவற்றின் வேடிக்கைப் பேச்சுக்களும்தான் எப்படிப்பட்டவை!

இந்த ஆலிஸ் கதைகளையும், இவற்றைப் போன்ற குழந்தைக் கதைகளையும் நமக்குத் தந்த லூயி காரல் மறைந்து அறுபது ஆண்டுகள் ஆகின்றன. ஆனால் இக்கதைகள் சிறுவர் சிறுமியரிடையே என்றும் சிரஞ்சீவியாக இருக்கும். இன்று உலகெங்கும் எல்லா மொழிகளிலும் இக்கதைகள் மொழி பெயர்க்கப்பட்டுள்ளன.

இக்கதைகள் எழுந்த கதையே ரசமானது. ஆசிரியர் லூயி காரலுக்கு-இவரது உண்மைப் பெயர் சார்லஸ் டாட்சன்-குழந்தைக் கதை எழுதிப் புகழடையும் நோக்கமே கிடையாது. மதகுருவின் மகனான இவர் இளமையில் நன்கு படித்து கணித நிபுணரானார். மதபோதகராகப் பணியாற்றுவதற்குப் பயின்றார். ஆனால் சரளமாகப் பேச்சு வராததால் கணிதப் பேராசிரியராக மாறிவிட்டார். தன்னந்தனியாக வாழ்ந்தார். கல்லூரித் தோழர் ஒருவரின் குழந்தைகளுடன் விளையாடுவதுதான் அவரது பொழுது போக்கு. அக் குழந்தைகளுக்கு-அவர்களில் அவரை அதிகம் கவர்ந்தவள் ஆலிஸ் லிட்டல் என்னும் பெண்-ஏராளமாகக் கதைகள் கூறுவார். இவ்வாறு எழுந்த ஒரு கதைதான் ''அற்புத உலகில் ஆலிஸ்.''

கணிதப் பேராசிரியர் டாட்சன் தமது குழந்தைக் கதைகளைப் புத்தகமாக வெளியிட வேண்டுமென்று முதலில் நினைக்கவில்லை. ஆனால் நண்பர்களின் தூண்டுதலால் லூயி காரல் என்ற புனைபெயரில் அவற்றை வெளியிடலானார்.

லூயி காரலின் கதை நெடுக வேடிக்கையான பாடல்கள் நிரம்பியுள்ளன. அவரது கதைகளைப் போல் பாடல்களும் புகழ்பெற்றவை. அவர் கதைகளில் சம்பவங்களை விட, சுவையான, சூடான, சம்பாஷணையே ரசமான பகுதிகள். அவற்றில் நீதிபோதனை ஒன்றுமே கிடையாது. ஏன், அர்த்தமே கிடையாது. ஆனால் வேண்டுமென்றே அவ்வாறு அமைக்கப்பட்ட கதைகள் அவை. அவற்றைப் படித்துவிட்டுச் சிரிக்காமல் யாராலுமே இருக்க முடியாது.

ஒரு சமயம் ராணி விக்டோரியா ஆலிஸ் கதையைப் படித்துவிட்டு, மிகவும் ரசித்து, ''இந்த ஆசிரியர் அடுத்த முறை புத்தகம் வெளியிடும் போது எனக்கு அறிவியுங்கள்'' என்றாராம். அவ்வாறே டாட்சனின் புதுப் புத்தகம் வெளிவந்ததும் மகாராணியிடம் சமர்ப்பிக்கப்பட்டதாம். ஆவலுடன் அதைப் பிரித்துப் பார்த்தார் ராணி. அது குழந்தைப் புத்தகமே அல்ல; அது ஒரு கணித நூல்!

# காட்டுக் கதை ராஜா

*கிப்ளிங்*



கட்டுக் கதைகள்தான். ஆனால் என்ன அழகான காட்டுக் கதைகள்!

காட்டிலேயே வாழ்ந்த ஓநாய்ச் சிறுவனைப் பற்றிக் கேட்டிருக்கிறீர்களா? காட்டு மிருகங்கள் அத்தனைக்கும் அவன் - அவன்தான் மௌக்லி - தோழன். புலிக்குட்டியும் ஓநாய்க் குட்டியும் இந்த மனிதக் குட்டியுடன் சேர்ந்து வாழ்ந்தன. மௌக்லியின் விந்தை அநுபவங்களையும் காட்டு மிருகங்களின் வாழ்க்கை ஒழுங்குகளையும் விவரிக்கும் சுவையான கதைகளை எத்தனை எத்தனை சிறுவர்கள் படித்து ரசித்திருக்கிறார்கள்! அவற்றின் ஊடே உள்ள கம்பீரமான பாடல்களைப் பாடி மகிழ்ந்திருக்கிறார்கள்!

இவற்றையெல்லாம் நமக்குத் தந்த ஆசிரியர் ருத்யார்ட் கிப்ளிங் 17 வயதிலேயே எழுத்தாளரானவர்.

கிப்ளிங் ஆங்கிலேயரானாலும் இந்தியாவில் பிறந்தவர். கல்வி கற்க இங்கிலாந்து சென்று, மீண்டும் இந்தியா திரும்பியவர். இந்திய நாட்டு நாடோடிக் கதைகளால் கவரப்பட்டவர். ஆப்பிரிக்காவில் போயர் சண்டை நிகழ்ந்த காலத்தில் காந்திஜி செஞ்சிலுவைப் படையில் சேவை செய்தது நமக்குத் தெரியும். அப்போது அங்கே கிப்ளிங் பத்திரிகை நிருபராக வேலை பார்த்தார்.

நிருபராக இருந்தவாறே நிறையப் பாடல்களும் சிறுகதைகளும் எழுதினார் கிப்ளிங்.

ஓர் அமெரிக்கப் பெண்ணை மணந்து சில காலம் அமெரிக்க நாட்டில் வாழ்ந்தார். அப்போது மாணவர் சூழ்நிலையை வைத்து ஒரு கதை எழுதத் தொடங்கினார். ''காப்டன்ஸ் கரேஜியஸ்'' என்ற நாவல்தான் அது.

கிப்ளிங்கின் பாடல்கள் கருத்துச் செறிவும் சந்த அழகும் நிறைந்தவை. ''முடியுமானால்..'' என்ற இவரது பாடலில் வரும் சில பகுதிகளைத்தான் பாருங்களேன்:

''உன்னைச் சூழ உள்ளோர் நெறி தவறி, தமது தவற்றுக்கு நீதான் காரணம் என்ற போதும் உன்னால் நேர்மையாக இருக்க முடியுமானால்,

''மற்றவர் உன்மீது நம்பிக்கை இழந்த போதும் உன்னால் தன்னம்பிக்கை இழக்காமலிருக்க முடியுமானால்..

''சமயம் வாய்க்கும் வரை காத்திருப்பதால் அலுத்துக் கொள்ளாமல் இருக்க முடியுமானால்..

''உன்னைப் பற்றிய பொய்ச் செய்திகள் உலவும் போதும் உன்னால் பொய் வழியில் செல்லாதிருக்க முடியுமானால்..

''உன்னைப் பிறர் வெறுத்த போதும் வெறுப்புக்கு இடம் கொடுக்காமல் இருக்க முடியுமானால்..

''பாமரர்களோடு வாழ்ந்தும், நற்பண்புகளை நழுவவிடாதிருக்க முடியுமானால்..

''தம்பி, உனதுதானடா இந்த வையகம்; இதில் உள்ள எல்லாம் உனதுதான். அவ்வளவு ஏன், நீ ஒரு மனிதனடா!''

# குழந்தைகளுக்கு எழுதினள் குடும்பத்திற்காக வாழ்ந்தாள்



## மே ஆல்காட்

"ஏனம்மா, நீ சிறு பெண்களுக்காக ஒரு கதை எழுதேன்'' என்று கேட்டார் பதிப்பாளர் நைல்ஸ்.

''நானு? சிறு பெண்களைப்பற்றி எனக்கு என்ன எழுதத் தெரியும்?'' என்று உண்மையான அடக்கத்துடன் பதிலளித்தாள் அந்தப் பெண்மணி லூயிஸா.

''ஏன்? நீ பள்ளிக்கூட ஆசிரியையாக இருந்தபோது, மிகச் சிறு குழந்தைகளுக்காகப் மக்களைப் பற்றிச் சிறு கதைகள் எழுதவில்லையா? யுத்த காலத்தில் ஆஸ்பத்திரி நர்ஸாக இருந்தபடியே நீ எழுதிய கடிதங்கள்தான் சாதாரணமானவையா? இவை இரண்டும் இன்று புகழ்பெற்ற புத்தகங்களாகிவிட்டனவே'' என்று உற்சாகமாகக் கூறி, அவளை ஊக்கப்படுத்தினர் பதிப்பாளர்.

''சரி. என்ன எழுதுவது?''

''ஏன், உன் இளமைப்பருவத்து இன்ப துன்ப நிகழ்ச்சிகளையெல்லாம் விவரித்து ஒரு கதை எழுதேன்'' என்றூர் பதிப்பாளர்.

லூயிஸா மே ஆல்காட் முதலில் தயக்கத்துடனே அந்தப் பணியைத் தொடங்கினள். ராஜா ராணிகளும், வீரதீரர்களும் கொண்ட சாகசச் செயல் நிரம்பிய கதைகள் எழுதிப் புகழடைய வேண்டும் என்பது அவள் ஆசை. ஆனல் இந்தப் புதுக் கதையை எழுதித்தான் பார்க்கலாமே என்று தொடங்கினள்.

முழுதும் படித்துப் பார்த்ததும் பதிப்பாளர் அதை விரும்பவில்லை. அரை மனத்தோடு அந்த நாவலின் கையெழுத்துப் பிரதியை வாங்கிச் சென்று, தம் வீட்டுப் பெண்களிடம் காட்டினர். என்ன ஆச்சரியம்! அந்தப் பெண்களும் அவர்களது தோழிகளும், அந்த நாவலை ஒரு வரிகூட விடாமல் விரும்பிப் படித்தார்கள்!

நைல்ஸ் வேண்டா வெறுப்பாக வெளியிட்ட ''சின்னப் பெண்கள்'' என்ற இந்த அமெரிக்க நாவல் 92 ஆண்டுக் காலமாக புகழ் மிக்க சிறுவர் இலக்கியமாக விளங்கியிருக்கிறது. இது ஆசிரியையின் சுயசரிதை என்றே சொல்லலாம். அவள் குடும்பம் இளமையில் பட்ட சுகதுக்கங்களையும், கஷ்டங்களையெல்லாம் அந்தக் குடும்பத்தார் பரஸ்பர அன்பு ஒன்றுலேயே சகித்ததையும் விவரித்தது அந்தக் கதை. எல்லாம் ஆசிரியையின் சொந்த அநுபவங்களே. நல்ல காலம்; நைல்ஸ் தமக்குப் பிடிக்கவில்லை என்றுலும் வெளியிட்டாரே!

இந்த நாவலின் வெற்றிக்குப் பிறகு ''சின்ன ஆண்கள்'' என்ற ஒரு நாவலும் பின்னர் ''ஜோவின் பிள்ளைகள்'' என்ற நாவலும் எழுதினள். புகழும் செல்வமும் பெருகின. தன் பெற்றோர் வசதியாக வாழவும் சகோதரியின் கல்விக்குமே தன் பொருளையெல்லாம் செலவிட்டாள் இந்தப் புகழ்பெற்ற ஆசிரியை.



# திருட்டு

கே.சுந்தரேசன்

மாப்பிள்ளை அழைப்பு ஊர்வலத்துக்கு அமர்க்களப்பட்டுக்கொண்டிருந்தது. ஏராளமான விருந்தாளிகள். சரோஜா தன்னைச் சிங்காரித்துக்கொண்டாள். தலைவாரிப் பூச் சூட்டிக்கொண்டு முகத்திற்குப் பவுடரை அப்பிக்கொண்டாள். ஹிந்தி 'டியூன்' ஒன்றை முணுமுணுத்துக்கொண்டே பெட்டியைத் திறந்தவள், 'வீல்' என்று கூச்சலிட்டாள்.

''என்ன, என்ன?'' என்று பரபரப்புடன் எல்லோரும் கேட்டனர். அவள் அக்கா மரகதத்தின் கல்யாணத்திற்கு வந்திருந்த உறவினர்கள் எல்லோரும் சரோஜாவைச் சுற்றிக்கொள்ள, வீடு முழுதும் ஒரே குழப்பம்.

''ஐயையோ, அம்மா! பெட்டி நான் பூட்டியபடியேதானே இருக்கு! .எப்படிப் போயிருக்கும்?''

''போயிடுத்தா . . எங்கே வச்சுத் தொலைச்சே! அவசரப்பட்டுக் கத்தாதே!'' என்று அங்கலாய்த்துக்கொண்டே வந்தாள் அவள் தாய் பார்வதி.

''பெட்டியில்தானே வாங்கினதிலேருந்து இருக்கு! வேறே எங்கேயும் வைக்கல்லியே!''

''பின்னே பூட்டியிருந்த பெட்டியிலேயிருந்து இறக்கை முளைச்சாப் பறந்திருக்கும்?'' பார்வதியின் கடுகடுப்பு அதிகரித்தது.

கல்யாணத்திற்கு வந்த உறவினர்கள் அனைவரும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டனர்.

''என்ன?''

''என்னத்தைச் சொல்ல? நேத்து ரிப்பன், பவுடர் எல்லாம் வாங்கிண்டு வந்தா. அதை எங்கேயாவது வச்சுட்டுக் கத்துவா. அவ அப்பாவும் இப்படித்தான்.''

''ஐயோ! அம்மா, அதில்லேடீ . . வைர நெக்லெஸ் புதிசா வாங்கினதைக் காணோம்!''

''என்ன?'' அம்மா அதிர்ந்து இடிந்துவிட்டாள்.

''நெக்லேஸா? அங்கே பார் . . இங்கே பார் . .'' என்று பலர் பலவிதமாகச் சொன்னார்கள்.

''இந்தக் கல்யாணச் சமயத்திலே கலாட்டா எதுக்கு? வந்தவர்கள் தவறாக நினைக்கப் போகிறார்கள். அப்புறமாய் பாருங்கள்'' என்றார் அவள் அப்பா வேணு.

''அப்புறம் பார்ப்பதா? ஒண்ணு. இரண்டா . . ஆயிரம்! உங்களுக்கு என்ன பைத்தியமா? போலீஸிலே 'கம்ப்ளெய்ண்ட்' கொடுங்கோ'' என்றாள் பார்வதி.

சரோஜாவின் இளைய சகோதரன் நாச்சு, ''பயப்படாதே, அக்கா! உன் நகையை நான் என் நண்பன் துப்பறியும் துரையை வைத்துக்கொண்டு எப்படியும் கண்டுபிடித்துவிடுகிறேன்'' என்றான்.

உறவினர்கள் அனைவரும், 'ஏண்டா வந்தோம்?' என வருந்தினர். வேலைக்காரர்கள்மீது அனைவரும் சந்தேகப்பட்டனர்.

நாச்சுவின் நண்பன் துரை வந்தான். ''நான் குற்றவாளியைக்



**கோபு:** நேற்று நான் பள்ளிக்கூடம் வரல்லேடா! கிளாஸில் என்னடா நடந்தது?

**வேணு:** அடடா! வராமல் போயிட்டயே! எனக்கும் விட்டலுக்கும் சண்டை பிரமாதமா நடந்தது!

—'ஆம்பூர் கூத்தன்'

---

எப்படியும் கண்டு பிடிக்கிறேன்'' என்றான்.

''கண்ணியம் வாய்ந்த உறவினர்களை நான் ஒருபோதும் குறைவாக எண்ண மாட்டேன். போலீஸ் வந்து கலவரம் ஏற்படவும் கூடாது. இது திருட்டா அல்லது கைத் தவறுதலால் ஏற்பட்டதா என்று கவனிக்கணும்'' என்றார் வேணு.

''நடந்ததை விவரமாகச் சொல்லுங்கள். இதை ஆறப் போட்டு விடக் கூடாது. நம்பிக்கைக்குப் பாத்திரம் இல்லாத பேர்வழி யார் இங்கே?'' என்றான் துரை.

''இதற்கு முன்பு பெட்டியிலிருந்து நாற்பது ரூபாயும் ஒரு பவுடர் டின்னும் களவு போயின. அதை நான் பொருட்படுத்தவில்லை. என்னையும், என் மனைவி குழந்தைகளையும் தவிர என் அறைக்குள் நுழைய வசதியுள்ளவர்கள் 'முனியன்' என்ற வேலைக்காரப் பையன், செல்லி என்னும் வேலைக்காரி, சமையல்காரன் சாமா இவர்கள் தான். செல்லி என் வீட்டில் பத்து வருஷங்களாக வேலை பார்த்து வருகிறவள். இத்தனை வருஷமும் ரொம்பவும் நாணயமாக நடந்து கொண்டிருக்கிறாள். எல்லோரையும் கேட்டுப் பார்த்தேன். ஒருவரும் 'எனக்குத் தெரியாது' என்று சொல்லிவிட்டனர்.''

''பணம் திருட்டுப் போன அன்று உங்கள் அறைக்குக் கடைசியாகப் போனவர் யார்?''

''வேலைக்காரி செல்லி கூட்டப் போனாள்.. எது எது எங்கே எங்கே வைக்கிறோம் என்பது அவளுக்குத் தெரியும்'' என்றாள் பார்வதி.

''பணம் களவு போனதற்கு முதல் நாள் பவுடர் பெட்டியைக் காணவில்லை. வீடு முழுதும் பலமுறை தேடிப் பார்த்தும் அகப்படவில்லை. மறுநாள் பணம் களவு போய்த் தேடும்போது, 'இந்தாங்க சாமி, பவுடர் டப்பி. உங்க ரூமிலேயே மூலையில் கிடந்தது' என்று கொண்டு வந்தாள். அவளைச் சந்தேகப் படவே முடியாது'' என்றார் அப்பா வேணு.

''பவுடர் டப்பியை எடுத்தவள் மறுநாள் பணம் அகப்பட்டதும் சந்தேகம் வராதபடி டப்பியைத் திருப்பிக் கொடுத்திருக்கலாமே!'' என்றாள் பார்வதி.

''அதுவும் சரிதான்'' என்றான் துரை. அப்பொழுது அங்கே வந்து போன முனியனைக் கண்டதும் துரைக்குச் சந்தேகம் பிறந்தது.

''இவன் என்னமோ யோக்கியமானவன்போலத்தான் இருக்கிறான். ஆனால் நாம் ஏமாந்துவிடக் கூடாது. அடிக்கடி அப்பாவைப் பணம் கேட்டுத் தொந்தரவு செய்தான். அப்பா கொடுக்கவில்லை . . களவு போன முதல் நாள் இவனை வாயில் வந்தபடி திட்டினார். இவன் ஆத்திரத்துடன் போனான். இவன் மார்வாடிக்குக் கடன் கொடுக்க வேண்டும் என்றும், கொடுக்காவிட்டால் அவனிடம் அவன் அடகு வைத்த பெண்சாதியின் சங்கிலி ஏலம் போய்விடும் என்றும் சொன்னான். இவன்தான் பணத்தை ஒருவரும் இல்லாதபோது எடுத்திருப்பான். இப்பொழுது நகையையும்..'' என்றான் நாச்சு.

''சமையல்காரச் சாமாவாக ஏன் இருக்கக்கூடாதாம்? அவன் விழிக்கிற விழியைப் பார்த்தால் எனக்குப் பிடிக்கவேயில்லை; குண்டுச்

சுப்பன்! அவன் அண்ணன் ஒருத்தன் ஏதோ தப்புக் காரியம் செய்துவிட்டு, போலீஸில் அகப்பட்டுக்கொண்டானும். அவனுக்கு அவர்கள் போடும் அபராதத் தொகையைக் கட்டி அவனை விடுவித்துக்கொண்டு வராமல் போனல் அண்ணன்காரன் ஜெயிலுக்குப் போக நேரிடுமாம். அண்ணன் ஜெயிலுக்குப் போய்விட்டால் அவன் குடும்ப பாரத்தை இவன்தான் தாங்க வேண்டும். ஆகவே, பணம் கேட்டான். அப்பா இல்லை என்ருர். இந்த நிலையில் திருடியிருக்கிருன்....இப்பொழுது இதையும் அவன்தான் செய்திருக்கிருன்'' என்ருள் மரகதம்.

சரோஜா வாயைத் திறக்கவில்லை.

''நீங்கள் ஒவ்வொருவரும் சந்தேகத்துக்கான ஆதாரம் கொடுத்துவிட்டீர்கள். இன்னும் பல விஷயங்கள் தெரிந்த பிறகுதான் முடிவான அபிப்பிராயம் சொல்ல முடியும்..

''மூவருக்கும் பணக் கஷ்டம் இருந்திருக்கிறது. பணத்தைத் திருடியவன்தான் இதையும் செய்திருக்க வேண்டும்..இவர்கள் ஒவ்வொருவரையும் தனியாக அழைத்து விசாரித்து இவர்கள் வீட்டைச் சோதனை செய்யப் போகிறேன்'' என்ருன் துரை.

''ஐயாவின் உப்பைத் தின்னு வளர்ந்தவர்கள் நாங்கள். அவருக்கு ஏன் நாங்கள் துரோகம் செய்கிருேம்? இவ்வளவு காலம் வேலை செஞ்சு இந்த அவப் பெயர் எங்களுக்கு எதற்கு?'' என்று அழுதனர் சாமாவும் முனியனும்.

''என் கையில் கிடச்ச பவுடர் டப்பியைக்கூட நான் பத்திரமாச்



அட, இதுதானு ?




சேர்த்தேனே!'' என்று கண்ணீர் சிந்தினுள் செல்வி.

துரை சிறிது யோசனை செய்து விட்டு, ''சரி, உறவினர் எல்லோருடைய உடைமைகளேயும் ஒரு முறை சோதனை செய்து விடுகிறேனே!'' என்ருன் துரை. உறவினர்கள் அனைவரும் இதை ஆமோதித்தனர்.

துரை சோதனையை மேற்கொண்டான்.

நாச்சு திடீரென்று ஓடி வந்தான். 'திருடன் அகப்பட்டுக்கொண்டு விட்டான். நாளேக் காலே கையும் களவுமாகப் பிடித்து நகையைக் கொண்டுவந்து சேர்த்துவிடுவோம். திருடியவன் தெரியாமல் விட்டுச் சென்ற வஸ்து ஒன்று கிடைத்து விட்டது. அதை இதோ வைத்திருக்கிறேன். இதை வைத்துக்கொண்டு கண்டுபிடித்துவிடுவோம்!'' என்ருன்.

அனைவரும் அங்கே கூடிவிட்டனர். நாச்சுவின் கையிலிருந்த பையை எல்லோரும் உற்றுப் பார்த்தார்கள்.

''இந்தாருங்கள். இதைப் பத்திரமாக நீங்கள் உள்ளே வையுங்கள்.. ஊர்வலம் முடிந்ததும் பிறகு வாங்கிக்கொள்கிறேன்' என்று சொல்லி அதைக் கல்யாணத்திற்கு வந்திருந்த ஒரு பாட்டியிடம் கொடுத்தான்.

''டேய், பைத்தியம்! என்னடா கிடைச்சுது? எனக்கு எதுவுமே தடயம் கிடைக்கல்லியேடா!'' என்ருன் துரை.

''பேசாமல் இருடா..ஊர்வலம் நடக்கட்டும்'' என்ருன் நாச்சு.

* * *

**து**ரையுடன் நாச்சு உள்ளே நுழைந்தான். வேலேக்காரன் முனியன் அவன் கூடவே நுழைந்தான்.

''அவனுகத்தான் இருக்கும்'' என்ருள் பார்வதி. எல்லோரும் அவன் முகத்தைப் பார்த்தனர்..

''நகையை அபேஸ் செய்தவன் யார் தெரியுமா? நம் வீட்டில் முன்பு கண்ணியமான காரியதரிசியாக வேலே செய்த பரமசிவம். வேலேயை விட்டுச் சென்ற அவன் நம் வீட்டுக் கல்யாணத்திற்காக

வந்திருக்கிறான். அதோ நிற்கிறானே. . கையோடு பிடியுங்கள்'' என்றான் நாச்சு. ''அவன் வீட்டைச் சோதனை செய்தால் நகை அகப்பட்டுவிடும். . அவனோடுகூட வந்திருந்த அவன் மனைவி ஊர்வலம் பாதியில் வரும்போது வீட்டிற்குப் போய்விட்டாள். அவளோடு நகையும் போய்விட்டது. வேலை இல்லாததாலும், பெண்ணுக்குக் கல்யாணம் செய்யவேண்டியிருப்பதாலும், நகையை அபேஸ் செய்துவிட்டான். நம் வீட்டின் உளவு அனைத்தும் அவனுக்குத் தெரியும்.'' என்றான் நாச்சு விடாமல்.

''நானா? நான் இல்லை! ஆதாரம் எங்கே? என் வறுமையைப் போக்கப் போன வாரம் அம்மாவிடம் வந்து கெஞ்சிக் கூத்தாடி நாற்பதுரூபாய் கடனாக வாங்கிப் போனேன். சமயத்தில் உதவியவர்களின் வீட்டில் நான் ஏன் திருடுகிறேன்!'' என்றான் பரமசிவம்.

''ஓகோ . . மறந்துவிட்டேனே! பரமசிவத்துக்கு நாற்பது ரூபாயை எடுத்துக் கொடுத்துவிட்டு மறந்தே போயிட்டேன். அதுதான் களவு போயிடுத்துன்னு நினைச்சு இவ்வளவு ரகளை. .'' பார்வதியின் முகத்தில் அசடு வழிந்தது. தலை குனிந்தாள்.

''பீடை. . உன் மறதியாலே எத்தனை பேரை அவமானப்படுத்தும்படி யாச்சு!'' என்றார் வேணு.

''பண விஷயம் சரிதான். நகையைத் திருடியவன் இவன்தான்!'' என்று ஆரம்பித்தான் நாச்சு.

''திருடன் விட்டுச் சென்ற வஸ்து என்று சொல்லிப் பாட்டியிடம் கொடுத்து வைக்கச் சொல்லிவிட்டு ஊர்வலத்துக்கு எல்லோரும் போனோமல்லவா?''

''ஆமாம். .''

''நான் ஊர்வலத்தில் கலந்து கொள்ளவில்லை. இங்கேயே வந்து வீட்டில் மறைந்திருந்தேன். பாட்டி அந்தப் பையைக் கொண்டுபோய் அலமாரியில் வைத்திருக்கிறாள். ஊர்வலம் கிளம்பி எல்லோரும் போனதும் பரமசிவம் மெதுவாக உள்ளே நுழைந்து பாட்டியைக் குடிக்கத் தண்ணீர் கேட்டிருக்கிறான். அவள் உள்ளே போனதும்

## கிலுகிலுப்பைச் சட்டத்தினுள்ளே கிளுகிளுக்கும் சிரிப்பு



போட்டோ: என். ராமகிருஷ்ணா.

மெதுவாக அலமாரியிலிருந்து அந்தப் பையை எடுத்துத் திறந்து பார்த்தான். பிறகு மூடிவிட்டுத் தைரியமாகத் தண்ணீர் குடித்துவிட்டு எல்லோருடனும் வந்து சேர்ந்துகொண்டுவிட்டான். நானும் பாட்டியும் இதை மறைந்திருந்து பார்த்தோம். பாட்டியிடம் முதலிலேயே 'இந்தப் பையை அலமாரியில் வை. பிறகு ஒளிந்திருந்து பார்ப்போம். இதைப் பார்க்க முயலுபவன்தான் திருடன்' என்று சொல்லி வைத்திருந்தேன்.

''அந்தப் பையை அவன் பார்க்க முயன்ற காரணம், திருடனுக்கு எப்பொழுதும் தன்னுடைய அடையாளம் ஏதாவது மற்றவர்களுக்கு கிடைத்துவிடுமோ என்ற பயம் இருப்பது இயல்பு. நான் மறைத்த வஸ்து என்னவாக இருக்கும், ஒருவேளை தான் சாமர்த்தியமாகச் செய்த திருட்டைக் காட்டிக் கொடுத்துவிடுமோ?'' என்பதை அறிய ஆவல். மெதுவாக அதைப் பார்த்திருக்கிறான். பை காலிப் பைதான்!'' என்றான் நாச்சு.

யாரும் இதை எதிர்பார்க்கவில்லை.

அகப்பட்டுக் கொண்டு விட்டோமே என்று ஒப்புக்கொண்டான் பரமசிவம். எல்லோருடைய உள்ளத்தையும் இதுகாறும் அழுத்தி வந்த சுமை இறங்கியது.



# ஊர்வலம்

ஜோதிர்லதா கிரிஜா

சிவகுமாரன் தன் வீட்டு மாடிப் படி ஏறி அவசர அவசரமாக மேலே போய் நின்று கொண்டு வெளியே எட்டிப் பார்த்தான். அவன் விழுந்தடித்துக்கொண்டு மாடிக்கு ஓடியதற்குக் காரணம் வெளியே தெருவில் கேட்கத் தொடங்கியிருந்த ஆரவாரந்தான்.

ஒவ்வோர் ஆண்டிலும், தீபாவளி, பொங்கற் பண்டிகை ஆகிய இரு விழா நாட்களிலும் அரசர் ஊரைச் சுற்றிப் பவனி வருவது வழக்கம். அரசரோடு அரசியும் யானை மீது அமர்ந்திருப்பாள். அந்த யானைக்கு முன்னும் பின்னும் மலர்மாரி பொழிந்தவண்ணம் அரசரின் பாதுகாப்பாளர்கள் செல்வார்கள்.

ஊர்வலம் தெருவை நெருங்கிக் கொண்டிருந்ததை உணர்ந்துதான் சிவகுமாரன் வேடிக்கை பார்ப்பதற்காக மாடிக்கு வந்து எட்டிப் பார்த்தான்.

ஊர்வலம் நாலு வீடுகளுக்கு அப்பால் நெருங்கி வந்துவிட்டது. தெரு முழுவதும் சாரி சாரியாக மக்கள் நின்று மன்னருக்கு மரியாதை செலுத்திக் கொண்டிருந்தார்கள்.

சிவகுமாரன் தன் வீட்டு வாசற்புறத்தைக் குனிந்து எட்டிப் பார்த்தான். தன் தாயார் வாசற்படியிலே நின்று வேடிக்கை பார்க்காதது அவனுக்கு வியப்பு அளித்தது. அவன் அவசரமாகக் கீழே இறங்கி ஓடினான். கூடத்தில் அவனுடைய அம்மா கறிகாய் நறுக்கிக் கொண்டிருந்தாள்.

''அம்மா! ஊர்வலம் வருகிறதே!''

''நான் வரவில்லை! நீ போய்ப் பார்'' என்று பதில் சொன்னாள் அவள்.

சிவகுமாரன் மேற்கொண்டு அங்கே நில்லாமல் மறுபடி மாடிக்கு ஓடினான்.

எல்லோரும் செய்தது போல் அவனும் தன் கையிலிருந்த மலர்களை அரசரின்மீதும் அரசியின் மீதும் தூவினான். அரசர் மேலே அண்ணாந்து பார்த்தார். கூப்பிய கைகளோடு அவர் அவனைப் பார்த்துப் புன்னகை செய்தார். இதை எதிர்பார்க்காத சிவகுமாரன் பதிலுக்குக் கைகுவித்து வணங்கக்கூடத் தோன்றாமல் அப்படியே நின்றுவிட்டான். 'இந்த அரசர் எவ்வளவு நல்லவர்!' என்று அவன் மனம் எண்ணமிட்டது.



ஊர்வலம் தெருக் கோடியை அடைந்த பிறகு சிவகுமாரன் மெதுவாகக் கீழே இறங்கிக் கூடத்தை வந்தடைந்தான். அவனுடைய அம்மா சாவித்திரி நறுக்கிய கறிகாய்த் துண்டங்களைத் தண்ணீரில் கழுவி, அடுப்பிலே வைக்கப்பட்டிருந்த கற்சட்டியில் போட்டுக்கொண் டிருந்தாள்.

அவள் கண்களிலிருந்து கன்னங்களின் வழியே உருண்டோடிக் கொண்டிருந்த கண்ணீர்த் துளிகளைக் கண்டதும் அவன் சொல்ல முடியாத திகைப்புற்றான். அவள் அழுது அவன் கண்டதேயில்லை.

''அம்மா! ஏன் அம்மா அழுது கொண்டிருக்கிறாய்?''— சாவித்திரி, தூக்கி வாரிப் போட்டவளாய்த்






''நீ ஏன் அவர் ஜேபியிலிருந்து இருபது ரூபாய் எடுத்தாய்?''

''அதுக்கு மேலே அவரு கிட்டே எதுவும் இல்லிங்களே!''

—,ஆம்பூர் கூத்தன்'

---

தலை நிமிர்ந்து பார்த்தாள். பரபரவென்று கண்ணைத் துடைத்தபடி, ''ஒன்றுமில்லை!. .'' என்று மழுப்பினாள்.

சிவகுமாரன் விடவில்லை: ''எதற்காக, அம்மா, அழுதாய்? சொல்லு.'' என்றான் பிடிவாதமாக.

''வேறொன்றுமில்லை! உன் அப்பாவை நினைத்துக்கொண்டேன்; அழுகை வந்துவிட்டது!''

''அப்பாவை நினைத்துக்கொண்டாயா?. .போகட்டும்! நீ ஏன் ஊர்வலத்தைக் காண வரவில்லை? ஊரே கூடியிருந்ததே, அரசரையும் அரசியையும் காண!''

''குமார்! என் மனம் இப்போது அமைதியாக இல்லை. என்னைக் கொஞ்சநேரம் நிம்மதியாக இருக்கவிடு! இன்றிரவு சொல்லுகிறேன்!'' என்று கூறிவிட்டுப் புகைந்துகொண்டிருந்த அடுப்பை ஊதத் தொடங்கினாள் அவன் அம்மா.

சிவகுமார் சிந்தனையோடு அவ்விடம் விட்டு அகன்றான்.

* * *

''குமார்! இன்று ஊர்வலம் பார்க்க வரவில்லையா என்று கேட்டாயே, காரணம் சொல்லட்டுமா?''

''சொல்லம்மா!''

''. . தற்போது இந்த நாட்டை ஆண்டு வரும் அரசர் அழகுவேலருக்கு ஓர் அழகான மனைவி இருந்தாள். .''

''இருந்தாள் என்கிறாயே? இப்போதுந்தான் இருக்கிறாள்!''

''இல்லை, இல்லை! இப்போது ஊர்வலத்தில் அரசரோடு நீ பார்த்தது அவருடைய இரண்டாவது மனைவி. அவருக்கு மூத்த மனைவி ஒருத்தி இருந்தாள்.''

''அவள் இப்போது இல்லையா?''

''ஏன் அவசரப்படுகிறாய்? . . பொறுமையாகக் கேள்! அவருடைய மனைவிக்கு ஒரு முறை அம்மை நோய் கண்டது. அவள் உயிர் பிழைப்பதே அரும்பாடாகிவிட்டது. அப்போது அவள் இரண்டு மாதக் கர்ப்பிணி. நோயிலிருந்து பிழைத்தெழுந்தாளே ஒழிய அவளுடைய அழகே போய்விட்டது. முகத்தையும் உடலையும் குண்டுங் குழியுமான வடுக்கள் கெடுத்து விட்டிருந்தன.

''அவள்மேல் இரக்கம் காட்ட வேண்டிய அரசர் இதற்குப் பின்னர் அவளை வெறுக்கத் தலைப்பட்டார். அவர் தம்முடைய வெறுப்பை வெளிப்படையாகக் கூறாவிடினும், அவருடைய நடவடிக்கைகள் அதை உணர்த்தின. அரசரின் அருவருப்பைப் புரிந்துகொண்ட அவள் மனத்திற்குள் புழுங்கினாள். அரசர் ஒரு நாட்டியக்காரியை மணந்து கொள்ளப் போவதாகப் பேச்சு அடிபட்டது. பிறகு அது உண்மை என்றும் தெரியவந்தது. அரசரின் உள்ளத்தில் தனக்கு இடம் இல்லாமற் போய்விட்ட பிறகு, அரண்மனையில்மட்டும் இடம் பெறுவானேன் என்று மனம் நொந்த அவள் அன்றிரவே அரண்மனையை விட்டு வெளியேறினாள்.''




"உங்களுக்கு ஏதோ கதை வேணும்னு வஸ்த்தாது வெங்கட்ராவுக்கு லெட்டர் எழுதினீங்களாமே! அவர் இந்தக் கதையை உங்ககிட்டே கொடுத்துட்டு வரச் சொன்னார்!"

சிவகுமாரன் தன் அம்மாவின் முகத்திலிருந்து அம்மைத் தழும்புகளைக் கொண்டு தன் தாயே முதல் ராணி என்று புரிந்துகொண்டான், "நீயா?" என்றான்.

"கண்ணே! வயிறும் பிள்ளையுமாய் அன்று அரண்மனையிலிருந்து வெளியேறியது நான்தான்! தற்கொலை செய்துகொள்ளப் போவதாக ஓர் ஓலை எழுதி அரசர் உறங்கிக்கொண்டிருந்தபோது அவர் படுக்கையில் வைத்துவிட்டு வெளியேறினேன். கையிலே வைத்திருந்த பெருந்தொகையோடு நான், தன்னந்தனியாக வாழ்ந்துகொண்டிருந்த கிழவி ஒருத்தியுடன் வசிக்கத் தொடங்கினேன். அவளுடைய வீடுதான் இது. அரசர் என்னைத் தேட முயலவில்லை! நான் மறைந்து வாழத் தொடங்கிச் சில மாதங்களுக்கெல்லாம் நீ பிறந்தாய்.

"உனக்கு நாலாவது வயதில் அந்தக் கிழவி இறந்து போனாள். அதற்குப் பிறகு நானும் நீயுமாகத்தான் இந்த வீட்டில் வசித்து வருகிறோம். உனக்கும் விளையாட்டுப் போலப் பதின்மூன்று வயதாகிவிட்டது."

"அப்படியானால் அரசருக்குப் பின் பட்டத்துக்கு வர.."

"ஆமாம்; அரசருடைய இரண்டாவது மனைவிக்கும் இன்னும் குழந்தை ஏதும் பிறக்கவில்லை."

"நான்தான் வாரிசு என்றால் அரசர் ஒப்புக்கொள்வாரா, அம்மா?"

"குமார்! நான் சாகவில்லை என்பதையும் மற்ற விவரங்களையும் தெரிவித்து அரசருக்கு ஓர் ஓலை எழுதித் தருகிறேன். இதோ, இந்த மோதிரம் அரசர் எனக்கு அன்பு அளிப்பாகக் கொடுத்தது. இதையும் எடுத்துச் சென்று காட்டு அரசரிடம். அரசரின் உள்ளம் இரங்குகிறதா, பார்ப்போம்?"

"எப்போதம்மா போகட்டும்?"

* * *

**வி**ரைந்து நடந்து சென்று கொண்டிருந்தான் சிவகுமாரன். அரண்மனையை அடைய இன்னும் சிறிது தூரம்தான் இருந்தது. விறு விறுவென்று நடந்து வந்த அலுப்பில் அவனுக்கு உடல் முழுவதும் வேர்த்துக் கொட்டிற்று. எதிர்ப்பட்ட ஒரு குளத்தில் இறங்கிக் குளித்துவிட்டுப் போக விரும்பிய சிவகுமாரன், தன் ஆடைகளைக் களைந்து கரையில் வைத்தான். சாவித்திரி கொடுத்திருந்த ஓலையை அவற்றின்மேல் வைத்து ஒரு கல்லை அதன்மேல் பாரமாக வைத்தான். பின்பு குளத்தில் இறங்கிக் குளிக்கலானான்.

குளிக்கும் மும்முரத்தில் கரையிலே இருந்த ஒரு பையன் அவன் களைந்து வைத்திருந்த ஆடைகளை மட்டும் திருடும் எண்ணத்தோடு அங்கே வந்ததையும், ஓலையைப் படித்துவிட்டு அதைமட்டும் எடுத்துக்கொண்டு ஓடிவிட்டதையும் கவனிக்கவில்லை.

குளித்துவிட்டுக் கரையை அடைந்த சிவகுமாரன் ஓலை மட்டும் மாயமாக மறைந்துவிட்டதை எண்ணித் திகைப்பும் வருத்தமும் அடைந்தான். கட்டை விரலில் அவன் அணிந்திருந்த மோதிரம் பத்திரமா யிருக்கவே,



''ஏண்டா வாண்டு? இந்த வயசிலேயே உனக்கு ஏண்டா இந்தத் திருட்டுப் புத்தி?''
''ஹி..ஹீ..எங்கப்பாருகூட இந்த வயசிலேதான் 'பிராக்டீஸ்' பண்ண ஆரம்பிச்சாராம்!'' —'ஆம்பூர் கூத்தன்'

---

அவனுக்குக் கொஞ்சம் நம்பிக்கை. அவன் ஓட்டமும் நடையுமாக அரண்மனை நோக்கிச் சென்றான்.

* * *

"அரசே! உங்கள் மடியில் அமர்ந்திருப்பவன் உங்கள் மகன் அல்ல! ஆடைகளைக் கரையில் வைத்துவிட்டுக் குளத்தில் நான் குளித்துக்கொண் டிருந்தபோது, அதன்மேல் வைத்திருந்த ஓலையை இவன் திருடிக்கொண்டு வந்திருக்கிறான். எங்களைத் தனித் தனியாகக் கேள்விகள் கேட்டு நீங்களே யார் சொல்வது உண்மை என்பதைத் தெரிந்துகொள்ளுங்கள். அரசே!'' என்று கூறிச் சிவகுமாரன் மோதிரத்தை அரசரிடம் கொடுத்தான்.

''அவ்வளவு சுற்றுவழி எதற்கு? சாவித்திரியை இங்கு வரவழைத்து விட்டால் போயிற்று!''

அரசர் மடியில் இருந்த பையனைக் கீழே இறக்கி விட்டார். அவர் சாவித்திரியை அழைத்து வர ஓர் ஆளை அனுப்பினார்.

சிறிது நேரத்துக்கெல்லாம், அரசரால் அனுப்பப்பட்ட ஆள் தனியாகத் திரும்பி வந்தான். வீடு பூட்டிக்கிடப்பதாகவும் யாரும் காணப்படவில்லை எனவும் தெரிவித்தான் அந்தப் பணியாள். இதைக் கேட்டுக் கலவரத்துக்குள்ளானான் சிவகுமாரன்.

''அரசே; ஏதோ சூழ்ச்சி நடந்திருக்கிறது! என் அம்மாவைக் கண்டு பிடிக்க ஏற்பாடு செய்யுங்கள், அரசே! எனக்கு இளவரசுப் பட்டமும் வேண்டாம்; இந்த நாட்டை ஆளும் உரிமையும் வேண்டாம்! என் அம்மா திரும்பக் கிடைத்தால் போதும்'' என்று ஆவேசத்தோடு கூவினான் அவன்.

அந்த மற்றொரு பையன் செய்வதறியாமல் விழித்தான். அரசருக்கு உண்மை விளங்கிவிட்டது. அவர் அந்தப் பையனைக் கோபத்தோடு விழித்துப் பார்த்தார்.

கலகலத்துப் போன பையன் உள்ளது உள்ளபடி தனக்குத் தெரிந்ததை உளறிக் கொட்டினான். குளக்கரையிலிருந்து ஓலையை எடுத்துச் சென்று தன் தந்தையிடம் அதைக் காட்டியிருக்கிறான். உடனே அவன் தந்தை அரங்கசாமி பையனை அந்த ஓலையில் கண்டுள்ள இளவரசனாக நடிக்கும்படி சொல்லி, ஒரு குதிரை வண்டியில் அரண்மனைக்கு அனுப்பி, மகாராணியை - சிவகுமாரின் தாயைக் கடத்திச் சென்று தன் வீட்டு அறையில் அடைத்து வைத்துவிட்டான்.

அரசர் அவன் தந்தை அரங்கசாமியை அழைத்து விசாரித்தார். விஷயம் முழுவதும் விளங்கிவிட்டது. கடைசியில் சிவகுமாரனின் தாய் சாவித்திரியும் அரசர் உத்தரவுப்படி விடுவிக்கப்பட்டு அரண்மனைக்கு அழைத்து வரப்பட்டாள்.

அரசர் சாவித்திரியிடம் தம் பிழையை மன்னிக்கும்படி கேட்டுக் கொண்டார். அவளுக்குத் தாம் இழைத்துவிட்ட தீங்கை எண்ணி அவர் கண்ணீர் சொரிந்தார்.

அடுத்த தீபாவளியன்று தானும் தன் தாயுங்கூட அரசரோடு ஊரை வலம் வரப்போகும் காட்சி சிவகுமாரனின் அகக்கண் முன் விரிந்தது.

# முன்னு

## எஸ். விசுவநாதன்

1

காற்றில் படபடக்கும் ஜன்னல் திரையை ஒதுக்கி வெளியே பார்த்துக்கொண் டிருந்தான் ஜகதீசன்.

மலைப் பிரதேசமானதால் வெயிலே இல்லாமல் ஏதோ மப்பும் மந்தாரமுமாக வானம் அழுது வடிந்துகொண்டு காட்சி யளித்தது.

''மியாவ்..''

காலில் ஏதோ உராய்வதையும், பிருண்டுவதையும் உணர்ந்து கீழே குனிந்தான் ஜகதீசன்.

''சீ சனியனே!'' என்று வெறுப்போடு அதைப் பாய்ந்து எடுத்துக்கொண்டான்.

''ஏ பிருந்தா.. பிருந்தாக் குரங்கு!'' என்று வீடு அப்படியே கிடுகிடுக்கக் கூச்சல் போட்டான்.

''ஏண்டாப்பா குரங்கின் அண்ணுவே!'' என்று கேட்டுக் கொண்டே வந்தவள், ஜகதீசன் கையில் தன் அருமைப் பூனைக் குட்டி சிக்கிக்கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டு, ''ஐயோ.. என் பூனை! என் முன்னு.. என் முன்னுக் குட்டி!'' என்று அவன் கரங்களி லிருந்து வெடுக்கெனப் பிடுங்கிக் கொண்டாள்.

''முன்னு....''

''என்னு?..''

''சும்மாயிருடா; நான் என் பூனையைக் கூப்பிட்டேன்!''

''நான் என் யானையைக் கூப் பிட்டேன்!''

''நீதான் இருக்கிருயே யானை மாதிரி; இன்னும் வேறு கூப்பிட ணுமோ?''

''ஒரு நாளைக்கு உன்னையும் உன் முன்னுவையும் விசிறி யெறிந்து விடுவேன், ஜாக்கிரதை!''

''அப்புறம் மிஸ்ஸியம்மா வந்து என் 'புஸ்ஸியம்மா' எங்கே என்று கேட்டால் 'பெப்பெப்பே' என்று விழிப்பாய்!''

''அப்பொழுது பார்த்துக் கொள்கிறேன், நீ தொலை!'' என்று அவளை விரட்ட எழுந்தான்.

பிருந்தா ஓடிவிட்டாள்.

2

மிஸஸ் ஆப்ரஹாம் அறுபது வயதுக் கிழவி. அந்த ஏற்காடு மலைத் தோட்டங்களில் சில அவ ளுடைய கணவர் விட்டுச் சென் றவை; அவற்றில் விளைச்சலைக் கவனித்துக்கொண்டு அங்கேயே தங்கிவிட்டவள். ஜகதீஷ்-பிருந்தா வின் தகப்பனுரும் மிகப் பெரிய காபி, ஆரஞ்சுத் தோட்டங்கள் ஏராளமாயிருந்த ஓர் எஸ்டேட் டின் மானேஜராதலால், மிஸஸ் ஆப்ரஹாம் அவ்வப்போது அவர் கள் வீட்டுக்கு வருவதுண்டு, பிருந்தாவைக் கண்டால் அப்படியே கட்டிக்கொண்டு முத்தமிட்டு மூச் சுத் திணற வைத்து விடுவாள் அந் தக் கிழவி. பிருந்தாவின்மீது அவ ளுக்கு அத்தனை அன்பு!

''என்னுடைய வீட்டுக்கு ஒரு நாள் வாயேன், ஒரே ஒரு முறை!'' என்று ஆப்ரஹாம் பிருந்தாவை ஒரு நாள் கூட்டிக்கொண்டு போனுள்.

பிருந்தா திரும்பி வரும்பொழுது அவள் கையில் ஒரு வெள்ளைப் பூனைக்குட்டி 'மியாவ் மியாவ்' என்று குரலெழுப்பிக் கொண்டிருந் தது.

''அடேடே, என்ன இது?'' என்று வியந்தார் அப்பா.

''மிஸ்ஸியம்மா தந்தாள், அப்பா, அழகாயிருக்கிறது; இல்லை? பெயர் என்ன தெரியுமா? முன்னு! முன்னு..'' என்று சொல்லிச் சிரித்துக்கொண்டே ஓடினுள். முன்னு என்ருல் குழந்தை என்று சித்தி சொல்லியிருக்கிருளே..

ஜகதீசன் அப்போதுதான் உள்ளே வந்தான். இந்தப் பூனைக் குட்டியைக் கண்டதும் முகத்தைச் சுளித்தான்.

''எங்கே யிருந்து இந்தச் சனி யன் வந்தது?''

''சனியனுவது! இது முன்னு! என் முன்னுக்குட்டி!''

''எருமைக் கன்றுக்குட்டி! முன்னுவாம் முன்னு! என் ரூமில் அது வந்தால் காதைப் பிடித்துத் திருகி விடுவேன், ஆமாம்!''

''யார் காதை?''

''இரண்டு பேர் காதையும் தான்!''

அன்றிலிருந்தே ஜகதீசனுக்கும் முன்னுவுக்கும் ஆகாதுதான். அது பத்தடி தூரத்தில் வரும்பொழுதே அதை அடித்துக் கொல்ல வருபவன் மாதிரி பாய்வான்.

அதன் மீது அவனுக்கு ஏனே அப்படி ஆத்திரம். அவனுடைய கட்டிலில் ஓர் ஓரத்தில் முடங்கிக் கொண்டிருப்பதைப் பார்த்துவிட்டால் போதும், அதை அலற அலற அடித்துவிடுவான். பளபளவென்ற தம்ளரில் தனக்கு வைத்திருந்த பாலை 'விசுக் விசுக்'கென்று நிதானமாக உறிஞ்சிக்கொண் டிருப்பதைப் பார்த்துவிட்டு ஒரு நாள் ஆத்திரம் பொங்க அதை மிதிக்கவே பாய்ந்துவிட்டான்!

மிஸஸ் ஆப்ரஹாம் இவர்கள் வீட்டுக்கு வரும்போதெல்லாம் அதை வைத்துக்கொண்டு சற்று நேரம் கொஞ்சிக்கொண் டிருந்துவிட்டுத்தான் போவாள். அவள் அதனுடன் கொஞ்சும் அழகை வேடிக்கை பார்த்துக்கொண் டிருப்பது அவர்களுக்கெல்லாம் ஒரு பொழுதுபோக்கு!

இதையெல்லாம் காண ஜகதீசனுக்கு மட்டும் ஏனே சினம் சீறிக்கொண்டு வரும்.

## 3

''பிருந்தா..பிருந்தா..வாக்கிங் போகிறேன்; வருகிறுயா?''

''வருகிறுயாவா? ஐ ஆம் ஆல்வேஸ் ரெடி!'' என்று சிரித்துக் கொண்டே சொல்லிவிட்டு, ''ஆனல் ஒன்று; என் முன்னுவையும் கூட அழைத்து வருவேன். உடன்பாடா?'' என்று ஒரு கொக்கியை மாட்டினுள்.

ஜகதீசன் ஒரு முறை அவளைச் சினத்துடன் விழித்துப் பார்த்தான். ''எப்பொழுது பார்த்தாலும், எங்கே போனுலும் உன் முன்னுவையும் தூக்கிக்கொண்டு ஏன் அலைகிருய் இப்படி? அது வேண்டாம். அதை இங்கேயே விட்டுத் தொலை! புறப்படு!''

''மாட்டேன்; அப்படி யென்ருல் நான் வரவில்லை!''

ஆத்திரம் பொத்துக்கொண்டு வந்தது ஜகதீசனுக்கு.

''சரி, புறப்பட்டுத் தொலை!''

'பூட்ஸ்'கள் சிறு சிறு பொடிக் கற்கள் மீது பட்டுச் 'சரக் சரக்' என்ற ஓசை கேட்டுக்கொண் டிருந்தன. ஜகதீஷ் ஒன்றும் பேசாமலே வந்தான் 'உம்'மென்று. முன்னு 'மியாவ் மியாவ்' என்று



குரலெழுப்பும்போதெல்லாம் அதை ஆத்திரத்துடன் முறைத்துப் பார்த்துவிட்டுத் தலையைத் திருப்பிக்கொண்டு நடந்தான்.

மாலை வேளை. நீண்டு உயர்ந்த மரங்கள், மேடும் பள்ளமும் சரிவும் நிறைந்த அந்தக் குறுகல் பாதையின் ஓரங்களில் நெட்டையன் மாதிரி நின்றுகொண் டிருந்தன. பனி பெய்ய ஆரம்பிக்கவில்லை யாயினும் நல்ல குளிர் இருந்தது..விதம் விதமான, நிறம் நிறமான பெரிய பெரிய மலர்கள் எங்கெங்கெல்லாமோ பூத்துக் குலுங்கின. பெரும்பாலும் செக்கச் சிவந்த மலர்கள் குண்டு குண்டாக, காற்றில் சிலிர்த்துக்கொண் டிருந்தன..ஜகதீசன் ஏதும் பேசாமல் வருவதைக் கண்டதும்,



## கூடைக் குறும்பு!



போட்டோ: என். ராமகிருஷ்ணா.

பிருந்தாவும் வாயையே திறக்காமல் அவனைத் தொடர்ந்தாள்.

''எங்கே போகிறோம்?..''

''லேடீஸ் ஸீட்டுக்கு!''

''அடேயப்பா! அவ்வளவு தூரமா? நான் வரவில்லைடோய்!''

''சட், சும்மா நட, சொல்கிறேன். சீக்கிரம் திரும்பி விடுவோம்!''

''உடனே திரும்பி விடணும்?''

''ஓ, எஸ்..''

'லேடீஸ் ஸீட்' என்பது ஏற்காடு மலையிலேயே மிக மிக உயர்ந்த உச்சி. வெகு அபாயகரமான இடம்.

அங்கே வந்ததும், காற்றில் தலைமயிர் கிசுகிசுக்க, இரண்டு கைகளையும் கட்டிக்கொண்டு நின்று பார்த்தான் ஜகதீசன்.

''அடேயப்பா! எத்தனை உயரம் இந்த இடம்!'' என்றாள் பிருந்தா.




''கீழே, ஆயிரக்கணக்கான அடிகளுக்குக் கீழே, அதல பாதாளம் தான் தெரிந்தது. எங்கோ தொட்டியில் தேக்கி வைத்த நீர் மாதிரி மேட்டூர் அணை நீர்த் தேக்கம் தெரிந்தது. வீடுகள், மரம் எல்லாம், சேலத்தின் பரப்பையே உள்ளங்கை அகலத்துக்குக் குறுக்கி விட்ட மாதிரி புள்ளி புள்ளியாகத் தெரிந்தன.

இதில் லயித்துப்போய் நின்று கொண்டிருந்த பிருந்தாவை ஒரு முறை பார்த்தான் ஜகதீசன். 'பளிச்' சென்று அவள் கையிலிருந்து முன்னாவைப் பிடுங்கினான் ஏதோ வெறியுடன்.

ஒரே வீச்சு!

சுமார் ஐயாயிரம் அடிகளுக்குக் கீழே, அதல பாதாளத்தை நோக்கி 'முன்னா' போய்க்கொண்டிருந்தது. இரண்டு நிமிஷத்தில் அது எங்கோ தூள் தூளாகச் சிதறி உயிர் துறக்கப் போகிறது..

ஒரே கணந்தான்!

பிருந்தா, ஜகதீசன் அதை வீசியெறியும்போது 'ஊய்' என்று பலமாக அலறிவிட்டாள். ஏதோ ஒரு வேகத்தில் அப்படி வீசியெறிந்துவிட்டாலும், ஜகதீசனின் உடல் படபடவென்று ஆடியது. தடதடவென்று நெஞ்சு அடித்துக் கொண்டது. விழிகள் பிதுங்க நின்றான்.

''முன்னா....முன்னா....!'' என்று பயந்துபோய் பிருந்தா அலறிய குரல் அந்த மலைப் பிரதேசமெங்கும் முட்டி எதிரொலித்தது.

ஜகதீஷ் அவள் கையைப் பிடித்துத் தரதரவென்று இழுத்துக் கொண்டுஸீட்டை நோக்கி ஓடினான்.

### 4

**வீ**ட்டுக்குள் நுழையும்போழுதே ''அம்மா!'' என்று வீரிட்டுக் கொண்டே பாய்ந்தாள் பிருந்தா.

எங்கோ விறைத்தபடி பார்த்துக் கொண்டு நின்றிருந்தான் ஜகதீஷ். 'எப்படிச் செய்தோம், ஏன் செய்தோம்?' என்று அவன் மனமே குழம்பிக்கொண் டிருந்தது.

''என்னது?'' என்று திகைத்து விட்டாள் அம்மா.



''லேடீஸ் ஸீட்டிலிருந்து வீசியெறிந்துவிட்டான் முன்னாவை; பாவி!''

''ஏண்டா, உனக்கு என்ன பைத்தியமா?'' என்று திடுக்கிட்டுப் போய்க் கேட்டபடி வந்த அப்பா, ''அந்தக் கிழவி வந்தால் என்னடா சொல்வது?'' என்று கேட்டார்.

வாயையே திறவாமல் நின்று கொண்டிருந்தான் ஜகதீசன்.

இரவு ஒன்றுமே சாப்பிடவில்லை இருவரும். அப்பாவும் அம்மாவும் கெஞ்சாத கெஞ்சல் இல்லை. கட்டிலில் படுத்த பிருந்தாவிடமிருந்து விம்மல் ஒலிகள் நீண்ட நேரத்துக்குக் கேட்டுக்கொண்டிருந்தன.

ஜகதீசன் ஜன்னல் அருகே உட்கார்ந்துகொண்டு வெறிக்க வெறிக்க வெளியே பார்த்துக் கொண்டிருந்தான், பைத்தியம் பிடித்தவன்மாதிரி.

## 5

மறுநாள் பொழுது விடிந்ததும் விடியாததுமாக எங்கோ புறப்பட்டுப் போனான் ஜகதீசன். அவன் சற்று நேரத்தில் திரும்பி வரும் பொழுது, 'முன்னா' மாதிரியே ஒரு வெள்ளைப் பூனைக் குட்டி அவன் கரங்களில் இருந்தது!

''எங்கிருந்ததுடா?''

''நண்பனிடமிருந்து வாங்கிக் கொண்டு வந்தேன்..பிருந்தாவுக்கு..!''

முன்னால் அதை ஏறிட்டும் பார்க்காத பிருந்தா, பிறகு அதனுடன் சிநேகம் பிடித்துக்கொண்டாள். அதற்கும் 'முன்னா' என்றே பெயரிட்டாள். அன்று முழுவதும் அவள் அதை ''முன்னா..முன்னா!'' என்று கூப்பிட்டுக்கொண்டு ஓடியும், அது அவள் குரலைக் கேளாதது மாதிரி, கோணலாகச் சாய்ந்து சாய்ந்து கொண்டு எங்கோ போயிற்று.

''உன் பெயர் முன்னா. நான் முன்னா என்று கூப்பிட்டால் நீ வரணும்; தெரிந்ததா?'' என்று கொஞ்சினாள்.

''நல்ல வேளை! அந்தக் கிழவி வருவதற்குள் வேறு ஒன்றைக் கொண்டு வந்தாயே!'' என்றார் அப்பா.

ஜகதீசன் ஒன்றுமே பேசவில்லை. பேசத் தோன்றவில்லை அவனுக்கு. ஏதோ பிரமை. மலைமீது அவன் வீசியெறிந்து கொன்ற 'முன்னா' தன்னை எப்பொழுதும் பின் தொடர்ந்து, 'என்னை ஏன் வீசினாய்? ஏன் என்னைக் கொன்றாய்?' என்று கேட்பது மாதிரி ஒரு பிரமை..

அன்று மாலை மிஸஸ் ஆப்ரஹாம் ஆடி அசைந்துகொண்டு வந்தாள்.

வரும்பொழுதே வழக்கம்போல, ''முன்னா..முன்னாக் குட்டி!..'' என்று கூப்பிட்டுக்கொண்டே வந்தாள்.

ஒன்றும் பேசாமல் 'புதிய முன்னா'வைக் கொண்டுவந்து அவள் மடிமீது விட்டாள் பிருந்தா. ஆனால் அடுத்த நிமிடமே அது அவளிடமிருந்து தாவி ஓடிவிட்டது.

மிஸஸ் ஆப்ரஹாம் எல்லோரையும் விழித்துப் பார்த்தாள். அமைதியாகக் கேட்டாள்:

''முன்னா எங்கே? என் முன்னா எங்கே?''

''அதுதான் முன்னா!''

''இல்லை; இது முன்னா இல்லை.''

எல்லோரும் அமைதியாக ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக் கொண்டு நின்றிருந்தனர்.

''முன்னா செத்துப் போய் விட்டது!''

''இறந்தா போய்விட்டது?'' என்று பெருங் குரலில் கேட்டாள் மிஸஸ் ஆப்ரஹாம். அவள் உடல் கிடுகிடுவென்று ஆடியது.

ஜகதீசன் குற்றவாளிபோல் தலை குனிந்து நின்றான்.

''நான் வருகிறேன்! முன்னா கர்த்தரின் கரங்களில் சேரட்டும்!'' என்றாள் கிழவி கண்களில் நீர் மல்க. அவள் கை சிலுவைக் குறி காட்டிப் பிரார்த்தித்தது. தள்ளாடித் தள்ளாடி நடந்து போய்க்கொண்டிருந்தாள் மிஸஸ் ஆப்ரஹாம். அவள் காலடிபட்டு இலைகள் சரசரத்தன..

துக்கத்தால் நெஞ்சு வெடிக்க, கீழுதட்டைக் கடித்துக்கொண்டு நின்றான் ஜகதீசன். 'புதிய முன்னா' அவன் காலைச் சுற்றிச் சுற்றி வந்தது.




அன்னவூர்தி சினங்கொண்டு சீறினான். மதங்கொண்ட யானைபோல் குதித்தான்.

''என்ன? என்னை அவமதித்தானா? என் செல்வியை இகழ்ந்து பேசினானா? எனக்குக் கப்பம் கட்டும் ஒரு சிற்றரசன் என்பதை அவன் மறந்து போனானா? நான் அனுப்பிய மண வோலையை ஏற்க மறுத்தானா? என்ன துணிச்சல்! சேனாதிபதியாரே, தாங்கள் உடனே தக்க படையுடன் சென்று சோபப் பிரகாசனைக் கைது செய்து வாருங்கள். கேவலமாய்ப் பேசிய அவன் நாவை அறுத்துவிடுகிறேன்.''

கனகபுரி அரசன் அன்னவூர்தி கோபத்துடன் மொழிந்த வார்த்தைகளைக் கேட்டதும் சேனாதிபதி விஜயபாலன் திடுக்கிட்டுப் போனான். இருப்பினும் ராச ஆக்கினையை எதிர்த்து எதுவும் கூற விரும்பாத அவன் மரியாதையாய் நகர்ந்து, தர்மபுரி இளவரசன் சோபப் பிரகாசனைக் கைது



செய்து வர அரண்மனை வாயிலை நோக்கி நடந்தான்.

* * *

**க**னகபுரியை ஆண்டுவந்த அன்னவூர்தி தக்க பருவம் எய்து விட்ட தன் ஒரே குமாரி கலையூர்திக்குத் தகுந்த மணாளனைத் தேர்ந்தெடுக்க ஒரு சுயம்வரம் நடத்த ஏற்பாடு செய்தான். ஏற்பாட்டின்படி எல்லாத் தேச அரசர்களுக்கும் மணவோலை அனுப்பினான். மண வோலையில், சுயம்வர மண்டபத்தில் தன் மகள் விடுக்கும் மூன்று கேள்விகளுக்கு யார் உகந்த பதில் அளிக்கிறானோ அவனுக்கே அவள் மாலையிடுவாள் என்று குறிப்பிட்டிருந்தான்.

மண வோலை கிடைக்கப் பெற்ற எல்லா மன்னர்களும் சுயம்வர நாளை வெகு ஆவலோடு எதிர்பார்த்தார்கள். ஏனெனில் அன்னவூர்தியின் புத்திரி கலையூர்தி பெயருக் கேற்ப, சகல கலைகளிலும்

**தெரிந்தால் சொல்லுங்கள்!**



நாம் செய்யும் முதல் காரியம் எது? நாம் செய்யும் கடைசிக் காரியம் எது?

---

தேர்ச்சி பெற்றவள். தவிர, நல்ல ரூபவதி. மேலும், பெரிய சாம்ராஜ்யத்தை ஆளும் புரவலனின் ஒரே புதல்வி. கேட்க வேண்டுமா?

ஆனால் தருமபுரி இளவரசன் மாத்திரம் மணவோலையை ஏற்காது, "கனகபுரி மன்னவனுக்கு என்ன நேர்ந்துவிட்டது! சுயம்வரம் என்றால் ஒரு ராஜகுமாரி தனக்குப் பிடித்த ஒரு ராஜகுமாரனை, அவன் குண விசேஷங்களையும் வீரப்பிரதாபங்களையும் கேட்டறிந்தபின் கண் பார்வையினால் அவனை நிதானித்து, தேர்ந்தெடுத்து மாலையிட வேண்டும். மண்டபத்தில் மன்னன் மகள் மூன்று வினாக்கள் விடுப்பாளாம். அதற்குத் தகுந்த விடை இறுப்பவருக்கே அவள் மாலையிடுவாளாம்! என்ன கலைச் செருக்கு! ஒரு பெண், ஆணின் அறிவை அளக்க நான் சம்மதியேன்" என்று மணவோலையைத் திருப்பிவிட்டான்.

அன்னவூர்தியின் கோபத்துக்கு இதுவே காரணம்.

* * *

**சே**னாதிபதி தருமபுரியை அடைந்தபோது இளவரசன் சோபப்பிரகாசன் கொலுச் சபையிலே வீற்றிருந்தான்.

அவன் கூற்றைச் செவியுற்றதும் சபையில் கூடியிருந்த மந்திரிப் பிரதானி முதலியோர் கோபங் கொண்டு கொதித்தெழுந்தார்கள்.

"என்ன? எங்கள் வேந்தனைக் கைது செய்வதா? என்ன நியாயம்? அவர் செய்த குற்றம்தான் என்ன?" என்று ஆரவாரம் செய்தனர்.

அப்போது தன் பிரஜைகளை அமைதியாய் இருக்கச் சொல்லி விட்டு, சோபப்பிரகாசன் கூறுவான்: "மந்திரிப் பிரதானிகளே! சபையோர்களே!

"நான் சேனாதிபதி விஜயபாலனுடன் கனகபுரிக்குச் செல்லாமலிருந்தால் கட்டாயம் போர் நிகழும். என்னதான் நம் போர் வீரர்கள் கனகபுரியின் போர் வீரர்களின் திறமைக்கு ஈடு கொடுத்துப் போர் புரிந்தாலும் நம் மக்களைப் பலியிட நான் ஒருபோதும் சம்மதியேன். ஆகையால் நான் சேனாதிபதி விஜயபாலனுடன் கனகபுரிக்குச் சென்று வருவதே நலம். அன்னவூர்தியிடம் நான் மணவோலை ஏற்க மறுத்ததன் காரணத்தைக் கூறுவேன். அவர் கொண்டுள்ள கோபமும் விடுத்துள்ள ஆக்கினையும் நியாயமற்றவை என்று அறிவுறுத்துவேன். ஆகவே எனக்கு விடை தாருங்கள்."

சேனாதிபதி விஜயபாலன், சோபப்பிரகாசன் பேச்சைக் கேட்டுக் கலங்கிப் போனான். "இவனையா கைது செய்து வரச் சொன்னார்? ராஜகுமாரிக்கு இவனைவிடச் சிறந்த மணாளன் கிடைப்பது அரிது" என்று தனக்குள்ளே பேசிக்கொண்டான்.

"சோபப்பிரகாசன் வாழ்க! தருமபுரிக் கோமான் வாழ்க!" என்று கோஷமிட்டு வாழ்த்தி வழி அனுப்பினார்கள் குழுமியிருந்த மக்கள்.

* * *

**இ**ளஞ் சிங்கம்போல் நின்ற சோபப்பிரகாசனை உற்று நோக்கினான் அன்னவூர்தி.

"தர்மபுரி இளவரசரே, மணவோலையை ஏற்க மறுத்தீர்களாமே?"

''ஆமாம். அதில் சுயம்வரம் என்று கண்டிருந்தது. அந்த வரையில் எனக்குச் சந்தோஷமே. ஆனால் தங்கள் புதல்வி மூன்று கேள்விகள் கேட்பாளென்றும் அதற்குச் சரியான விடை கூறுபவருக்கே தங்கள் செல்வி மாலையிடுவாள் என்றும் குறிப்பிட்டிருந்ததுதான் எனக்குச் சம்மதமில்லை. அதனால் மண வோலையை ஏற்கவில்லை.''

''உமக்குச் சம்மதமில்லையா?''

''ஆம். தனக்கு வரப்போகும் கணவனின் புத்தி சாதுரியத்தை நிறுத்துப் பார்ப்பது ஒரு பெண்ணுக்கு அழகல்ல. என்னைப் பொறுத்த வரையில் அது விரும்பத் தக்கதுமல்ல.''

''எம்மையே அவமதிக்கும் உம் நாவைச் செதுக்கி விட்டால்..?''

''அப்பொழுதும் அது தன் குணத்தை மாற்றிக்கொண்டு தங்களுக்கு அடி பணிந்துவிடாது.''

''மந்திரி பூஜ்யபாலரே, இந்தச் சுயம்வரத்திற்கு முன் இவர் நாவைச் சேதித்துவிட நான் தீர்மானித்துவிட்டேன். நாளையே அந்தப் பணியைச் செய்துவிட ஏற்பாடு செய்யுங்கள். அதுவரை இவரைக் காவலில் வையுங்கள்.''

* * *

மறு நாள் காலை உதயத்திலேயே தருமபுரி இளவரசன் சோபப்பிரகாசனின் நாவைத் துண்டித்துவிட அவனைச் சிறைக் கூடத்திலிருந்து மருத்துவ விடுதிக்கு அழைத்து வந்தார்கள். அரண்மனை வைத்தியன் ஒருவன் அன்னவூர்திக்கு அருகில்



சிகிச்சைக்கான சாதனங்களுடன் தயாராய்க் காத்திருந்தான்.

''உங்கள் நாவு இன்னும் சற்று நேரத்தில் தங்களுக்கு பயனற்றுப் போகும். அதற்குள் அதைத் தாங்கள் பயன்படுத்திக்கொண்டு அதனுல் தங்களுக்குப் பயன்படக்கூடிய எதையும் கேட்கலாம்'' என்று அன்னவூர்தி சோபப்பிரகாசனை நோக்கிக் கூறினுன்.

''நிச்சயமாகவா..?''

''ஆமாம்.''

''அப்படியானுல் நான் என் நாக்கை இழக்குமுன் தங்கள் மகள் சுயம்வர மண்டபத்தில் கேட்கவிருக்கும் கேள்விகளுக்குப் பதில் கூற விரும்புகிறேன். ஒரு பெண்ணின் வினுக்களுக்குப் பதில் கூற என் நாக்கிற்கு வன்மை உண்டு என்பதை நிரூபித்துவிட்டு அதை இழக்கச் சித்தமாயிருக்கிறேன்.''

சோபப்பிரகாசன் சொன்னதைக் கேட்டதும் அன்னபூர்தி நல்ல பாம்பை மிதித்துவிட்டது போல் திடுக்கிட்டான்.

அப்படியென்ருல் சுயம்வர தினம்வரை சோபப்பிரகாசன் நாக்கைச் சேதிப்பதைத் தவிர்க்க வேண்டும். சுயம்வரமண்டபத்தில் கலையூர்தி கேட்கப் போகும் கேள்விகளுக்கு யாருமே சரியான பதில் கூருமல் இவன் தகுந்த விடை அளித்துவிட்டால்..?

ஒன்றும் புரியாமல் மனம் குழம்பிப் போனுன் அன்னவூர்தி.

''சரி, உங்கள் கோரிக்கைப் படியே ஆகட்டும்'' என்று கூறிவிட்டு விரைவாகப் போய் விட்டான்.

* * *

சுயம்வர நாள் வந்தது. கனகபுரியே கோலாகலத்தில் மூழ்கியிருந்தது. சுயம்வரத்திற்காகச் சர்வதேச மன்னர்களும் வந்திருந்தார்கள். தருமபுரி இளவரசன் சோபப்பிரகாசன் மண்டபத்தின் ஒரு கோடியில் வீற்றிருந்தான். அவன் அருகிலே சேனுதிபதி விஜயபாலன் நின்றுகொண்டிருந்தான்.

சற்று நேரத்திற்கெல்லாம் நான்கு சேடியர் தொடர ராஜகுமாரி கலையூர்தி சுயம்வர மண்டபத்திற்குள் நுழைந்தாள். ஒவ்வொரு ராஜகுமாரனின் பிரதாபங்களையும் ஒரு பாங்கி சொல்ல, அவற்றைக் கேட்டுக் கொண்டே மண்டபத்தினுள் வலம் வந்தாள். கலையூர்தி. சோபப்பிரகாசன் முன் வந்ததும் அவனைக் கண் எடுத்துப் பார்த்தாள். ஆனுல் சோபப்பிரகாசன் அவளைப் பார்த்தும் பார்க்காதது போல் இருந்தான்.

பிறகு மண்டபத்தின் மையத்தில் வந்து நின்ற கலையூர்தி தன் கேள்விகளைக் கேட்க வாரம்பித்தாள்.

''ஆழ்கடலின் ஆழமென்ன?''

ஒவ்வோர் அரசகுமாரனும் ஒவ்வொரு விதமான பதிலைக் கூறினுர்கள். கலையூர்திக்கு ஒரு பதிலாவது திருப்தியாகப் படவில்லை.

சோபப்பிரகாசன் தன் ஆசனம் விட்டெழுந்து, ''ஒரு கல்லெறியும் தூரம்தான் ஆழ்கடலின் ஆழம்'' என்ருன்.

''எப்படி?''

''நீங்கள் சகல கலைகளிலும் தேர்ச்சி பெற்றிருக்கிறீர்கள் என நான் கேள்வியுற்றேன். அதனுல் கனமான பொருள்கள் எல்லாம் நீரில் மூழ்கிவிடுவது இயற்கையின் நியதி என்பதைத் தாங்கள் அறிவீர்கள். கல்லொன்றைக் கடல்மேல் எறிந்தால் அது நீரின் மேற்பரப்பிலிருந்து அடி மட்டத்திற்கு போய் விடும். அப்படி அந்தக் கல் கடலின் அடிக்குச் செல்லும்போது கடல் உயரத்தை அதாவது ஆழத்தை அளந்து விடுகிறது அல்லவா?''

சோபப்பிரகாசன் பகன்ற பதிலைக் கேட்டதும் மற்ற அரசகுமாரர்கள் திகைத்துப் போனுர்கள். கனகபுரி மன்னனும் வாயடைத்துப் போனுன். கலையூர்தியோ சோபப்பிரகாசன் புத்தியை வியந்து, இரண்டாவது கேள்வியைச் சேடியிடம் சொன்னுள்.

''கடலிலே கலந்திருக்கும் உப்பின் அளவென்ன?''

''இந்தக் கேள்விக்குப் பதில் கூறுமுன் கடலிலே இருக்கும் சுத்த நீரின் அளவை ராஜகுமாரி சொல்லிவிட்டால் நான் கடலிலே கலந்திருக்கும் உப்பின் அளவைச் சொல்லிவிடுவேன்'' என்ருன் அவன்.

சுத்த நீரின் அளவை எடுத்து விட்டால் எஞ்சியிருப்பது உப்புத் தானே! கலையூர்தி அந்தப் பதிலையும் ஏற்றுக்கொண்டு, மூன்றாவது கேள்வியைத் தானே நேரிடையாக விடுத்தாள்.

''ஒரு சில்லறை வியாபாரி தான் தினமும் குறைந்த பட்சம் எட்டுப் பணங்களாவது லாபம் சம்பாதித்து விட வேண்டுமெனக் கூறினான். எட்டு என்ன கணக்கு என்று வினவியபோது அவன், 'இரண்டு பணம் நான் பெற்ற கடனைத் திருப்பிக் கொடுக்கவும் இரண்டு பணம் திரும்பிப் பெறுவதற்காகக் கடனாகக் கொடுப்பதற்கும் இரண்டு பணம் திரும்பி வராத கடனுக்குக் கொடுக்கவும் இரண்டு பணம் பாக்கி ஆறு பணங்களைச் சம்பாதிக்க தேவைப் படும் முதல்' என்று சொன்னான். அவன் கூறிய பதிலுக்குச் சரியான விளக்கம் என்ன?''

சோபப்பிரகாசனே விடை கூறினான்:

''அந்த வியாபாரி கூறிய பதிலின் விளக்கம் இதுதான். பெற்ற கடனைத் திருப்பக் கொடுக்கிறேன் என்று அவன் கூறியது தன் வயோதிகத் தந்தை பொருட்டுச் செலவு செய்வதையும் பின்னால் திரும்பப் பெறக் கடனாகக் கொடுப்பது என்பது தன் பிள்ளைக்காகத் தான் இப்போது செலவு செய்வதையும் மனைவிக்காகச் செலவிடும் பணத்தைத் தான் திரும்பிவராத கடன் என்றும் தனக்காகச் செலவு செய்து கொள்வதைத்தான் மற்ற ஆறு பணங்களைச் சம்பாதிக்கத் தேவைப்படும் முதல் என்றும் குறிப்பிட்டான்.''

சோபப்பிரகாசன் சொன்ன விளக்கத்தைக் கேட்டதும் கலையூர்தி அளவிலா மகிழ்ச்சி எய்தி, பாங்கியரின் கைக் குடலையிலிருந்த மலர் மாலையை எடுத்து அணிவித்தாள்.

கலையூர்தி அணிவித்த மாலையை ஏற்றுக் கொண்ட சோபப்பிரகாசன் அன்னவூர்தி முன் சென்று, ''நான் தங்கள் குமாரி கேட்ட கேள்விகளுக்குப் பதில் கூறி விட்டேன். இனி நீங்கள் என் நாவைச் சேதித்து விட உத்தரவிடலாம்'' என்று பகன்றான்.

''உம் நாவைச் சேதிக்க இனி எனக்கு உரிமையில்லை. பாவையைப் பெற்று விட்டீர்கள். இனி அவள் பொறுப்பு!'' என்று அன்போடு கூறினான் அன்னவூர்தி.

பட்டாசு இனாம்!



# கைக்கு எட்டியது



'நடனு'

'கிரீச்' என்ற சத்தத்துடன் தன் ஆட்டோவை லஸ் முச்சந்தியில் திருப்பினான் சோலையப்பன். பிளாட்பாரத்திலிருந்து, ''ஆட்டோ! ஆட்டோ!'' என்று யாரோ அலறும் குரல் கேட்டதும் 'பிரேக்' போட்டு வண்டியை நிறுத்திவிட்டுத் திரும்பிப் பார்த்தான் அவன். யாரோ ஒருவர் கைகளிலும், உடம்பிலுமாகச் சாமான்களைச் சுமந்துகொண்டு அவனை நோக்கி அவசர அவசரமாக நடந்து வந்தார். அருகே வந்ததும் சாமான்களை அப்படியே 'ஸீட்'டின் மேல் போட்டு விட்டு, அவரும் தாவி ஏறிக்கொண்டார்.

''ஏம்பா, இங்கிருந்து எழும்பூருக்கு எவ்வளவு சார்ஜ்?''

''மீட்டர்லே எவ்வளவு ஆவுதோ, அவ்வளவு கொடுங்க, சார்!

''மீட்டரிலே சாதாரணமா எவ்வளவு ஆகும்?''

''ஒண்ணேகாலும் ஆகும்; ஒண்ணரையும் ஆகும்.''

''சரி, கடைசி ரெயில் புறப்படப் பதினைஞ்சு நிமிஷந்தான் இருக்கு. அதற்குள் கொண்டு போய்ச் சேர்த்துவிட்டால் மூன்று ரூபாய் தருகிறேன். வேகமாப் போ!

சோலையப்பனுக்குச் சுறுசுறுப்பு ஏற்பட்டதில் ஆச்சரியமில்லை.

பயங்கரமான சத்தத்தையும் கூடவே 'குபுகுபு' வென்று புகை மண்டலத்தையும் எழுப்பிக் கொண்டு பறக்க ஆரம்பித்தது ஆட்டோ. திருப்பங்களில் எல்லாம் கவிழ்ந்துவிடுமோ என்று பயப்படும்படி, தலைதெறிக்கச் சென்றது. புறப்பட்ட பத்தாவது நிமிஷம் எழும்பூர் ஸ்டேஷனை அடைந்தது.

வண்டியிலிருந்த ஆசாமி சாமான்களை அவசர அவசரமாக உடம்பின் பல பாகங்களிலும் இடுக்கிக் கொண்டு இறங்கினார். மடித்தபடி இருந்த ரூபாய் நோட்டை சோலையப்பனிடம் நீட்டிவிட்டு, வெகு வேகமாக நடந்தார், பிளாட்பாரத்தை நோக்கி.

சோலையப்பன் மடித்திருந்த நோட்டைப் பிரித்தான், ஆனால் என்ன ஏமாற்றம்! ஒரே ஒரு ரூபாய் நோட்டுத்தான் இருந்தது. அதோடு மடிக்கப்பட்ட இடுக்கிலிருந்து ஒரு நாலணா நாணயமும் விழுந்தது. சோலையப்பனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. பிளாட்பாரத்திற்குள் கும்பலில் நுழைந்துவிட்ட ஆசாமியைப் பிடிப்பது சுலபமா?

ஏமாற்றத்தினால் ஏற்பட்ட ஆத்திரம் தீரச் சென்னைப் பாஷையில் 'வெளுத்துக் கட்டினான்' சோலையப்பன். போலீஸ்காரனின் ஊது குழல் சத்தம் காதைத் துளைக்கவே, வண்டியில் உட்காரப் போனவன் தற்செயலாய் ஸீட்டை நோக்கினான். ஸீட்டின் மூலையில் நீண்ட சிறிய தோல்பை ஒன்று கண்ணில் பட்டது. அந்த ஆளுடையதுதான் அது. நன்றாகத் திண்டாடட்டும், தன்னை மோசம் செய்த அவனுக்கு இது ஒரு தண்டனையாக இருக்கட்டுமென்று தீர்மானித்தான் அவன்.

போகும்பொழுதே ஒதுக்குப் புறமான ஓர் இடத்தில் வண்டியை நிறுத்தி, அவன் சுற்று முற்றும் ஒரு முறை நோக்கிவிட்டு நன்றாகத் திறந்து உள்ளே நோக்கினான்.

ஹா! என்ன அது!!

காகிதங்கள்தான்! ஆனால் சாதாரணக் குப்பைக் காகிதங்களா? நோட்டுக்கள்! எல்லாம் நூறு ரூபாய் நோட்டுக்கள். அவன் ஒவ்வொன்ருக எண்ணினன். சரியாகப் பதினயிரம் ரூபாய். 'அதை வைத்துக்கொண்டு என்னென்னமோ செய்யலாமே! வீடு வாங்கலாம்.. ஏன் சொந்தமாகவே ஓர் ஆட்டோ ரிக்ஷா வாங்கிக்கொள்ளலாமே! பிறரிடம் கைகட்டிப் பதில் சொல்ல வேண்டாம். சந்தோஷமாக இருக்கலாம்' என்றெல்லாம் எண்ணினன்.

'ஆனல் நாம் திடீரென்று பணத்தைத் தாராளமாகச் செலவு செய்து ஆடம்பரமாக வாழ ஆரம்பித்தால் பக்கத்தில் இருப்பவர்கள், என்ன நினைப்பார்கள்? சும்மா இருப்பார்களா? உடனே சந்தேகம் வரும். .

'பணத்தை இழந்தவன் சும்மா இருப்பானு? உடனே ஓடிச் சென்று போலீசில் புகார் செய்வான். பத்திரிகைகளில் விளம்பரம் செய்வான். போலீஸ். . விசாரணை செய்யும். . நம் குட்டு வெளிப்பட்டு விட்டால்?' திருப்பிக் கொடுக்கவும் மனமில்லை. வைத்துக்கொள்வதும் ஆபத்து! என்ன செய்வதென்று மூளையைக் குழப்பிக் கொண்டு ஆலோசனை செய்தான் சோலையப்பன்.

திடீரென்று ஒரு நல்ல யோசனை உதித்தது அவனுக்கு. அந்தப் பணத்தைப் போலீஸ் ஸ்டேஷனில் கொண்டுபோய்க் கொடுத்துவிடுவது. கண்டு எடுத்ததாகச் சொல்லிவிடுவது. ஒரு மாதம்வரை வைத்திருப்பார்கள். சொந்தக்காரர்கள் யாரும் வந்து வாங்கிக்கொள்ளாமல் போனல் கண்டு எடுத்தவனுக்கே அது சொந்தமாகிவிடும் என்று முன்பு யாரோ சொன்னது அவனுக்கு ஞாபகம் வந்தது. தான் மாட்டிக்கொள்ளாமல் பணத்தையடைய நல்ல யோசனையாகப் பட்டது அவனுக்கு. ஆனல் அதை எடுத்தபடியே கொடுத்தால் தவறவிட்டவன் தவருமல் வாங்கிக் கொண்டு போய்விடுவான். அவன் தன் பையையும் பணத்தையுமே அடையாளம் கண்டுகொள்ள முடியாதபடி செய்துவிட்டால். .! அந்த யோசனை சரியாகப் பட்டது அவனுக்கு. உடனே செயலில் இறங்கினன்.

'ஆட்டோ'வைக் கிளப்பிக் கொண்டு சைனு பஜாருக்கு வந்து



## தெரிந்தால் சொல்லுங்கள்!



உட்காரும், உருண்டோடும்; நடக்காது. வயிறுண்டு; குடல் இல்லை. வாயுண்டு; பேசாது— அது என்ன?

---

சேர்ந்தான். கடைகடையாக நுழைந்து, தனக்கு உபயோகப் படும் சாமான்களை ஒரு கடைக்கு ஒன்றாக வாங்கி நூறு ரூபாய் நோட் டுக்களை மாற்றினான். அவன் வாங் கிய சாமான்களில் முக்கியமானது ஒரு பெரிய தோல் பை.

அந்தத் தோல்பையில் ஒரு தின சரிப் பத்திரிகையை வாங்கி மடித்து வைத்தான். ஒரு வாரப்பத்திரி கையை வாங்கிப் போட்டான். ஒரு சீப்பை வாங்கிப் போட்டான். ஒரு கைக்குட்டையையும் வாங்கினான். உபயோகத்தில் இருந்ததைப் போல் தன் முகத்தை நன்றாகத் துடைத்து அழுக்காக்கி உள்ளே வைத்தான். நோட்டுக்களை ரகவாரியாகப் பிரித்து எண்ணினான். 10000க்கு 17 ரூபாய்தான் குறைந்தது. தன் கையில் இருந்த பணத்தையும், அன் றைய வரும்படியையும் சேர்த்து 22 ரூபாயாக அதோடு சேர்த்தான். பை மாறிப்போய்விட்டது; உள் ளிருக்கும் பணத்தையும் மாற்றி யாகிவிட்டது. அதோடு ஐந்து ரூபாய் அதிகமாகவும் இருக்கிறது. பார்த்தவன் தன் பையல்ல என் பான். திறந்து பார்த்தால் இன்னும் திணறுவான்; தன்னுடையதல்ல என்றுதான் கூறுவான். .பிறகு. . அது தன்னிடம் வந்துவிடும், பிறகு எவரும் தன்னைக் கேட்க முடியாது.. பிறகு. .தன் இஷ்டப்படி. .சொந்த ஆட்டோ. .பெரிய வீடு. .ஜாலி தான். .இப்படி அவன் மனம் போய்க்கொண்டேயிருந்தது.

ஆட்டோவைப் போலீஸ் ஸ்டேஷன் வாசலிலே நிறுத்தினான் சோலையப்பன், பையைக் கையில் எடுத்துக்கொண்டு தைரியமாக உள்ளே நுழைந்தான். நேரே ஸப் இன்ஸ்பெக்டரிடம் வந்து நின்றான் சோலையப்பன். ஏதோ மும்முர மான வேலையில் ஈடுபட்டிருந்த அவர் தலை நிமிர்ந்தார். உடம்பைக் கோணலாக வளைத்துக்கொண்டு ஒரு 'சலாம்' போட்டான் சோலை யப்பன்.

''என்ன?'' என்று வினவினார் இன்ஸ்பெக்டர். சோலையப்பன் தன் கையில் இருந்த பையை மேசை யின்மேல் பணிவாக வைத்தான். இன்ஸ்பெக்டர் பையை மேலும் கீழும் பார்த்தார்; திறந்தார். உள்ளே இருப்பவற்றை ஒரு நோட் டம் விட்டார். பணத்தை எண்ணி னார். பையை மூடி வைத்தார். 'உம்..' என்றார் சோலையப்பனை நோக்கி.

''சென்ட்ரலுக்குப் போகும் வழி யிலே கிடைச்சுதுங்க. .உடனே எடுத்துக்கிட்டு ஓடி வந்தேங்க..''

''ஏன் அங்கேயே கொடுக்காமே.. இங்கே..?''

''இது நமக்குப் பழக்கமான இடம். .நம்ப ஸ்டாண்டும் இங்கே தானே?''

''சரிதான் .... யாராவது 'கிளெய்ம்' பண்றாங்களா பார்க்க லாம்!..''

''சரிங்க ..''

''உன் அட்ரஸை எழுதிக் கொடுத்துட்டுப் போ ..''

ஒரு காகிதத்தில் தன் விலா சத்தை எழுதிக் கொடுத்தான்



சோலையப்பன். பையையும் அந்தச் சீட்டையும் தம் டிராயருக்குள்ளே தள்ளினார் இன்ஸ்பெக்டர். சோலையப்பன் நின்றுகொண்டே யிருந்தான்.

''உம் . . என்ன?''

''இல்லைங்க . . அதை யாரும் வந்து கேக்கலைனு . . ''

''கேக்கலைனு என்ன?''

''ஒரு மாசம் கழிச்சு அதை என்னிடமே திரும்பிக் கொடுத்துடுவீங்க . . இல்லே . . ?''

''ஒரு மாசம் கழிச்சு வா! நான் அதிகாரிகளைக் கேக்கறேன் . . ''

''சரிங்க . . '' மறுபடியும் ஒரு 'சலாம்' அடித்துவிட்டு உல்லாசமாக வெளியேறினான் சோலை.

* * *

சரியாக ஒரு மாதம் முடிந்தது. முப்பத்தொன்றும் நாள்!

போலீஸ் ஸ்டேஷனுக்குள்ளே நுழைந்தான் சோலையப்பன். அதே இன்ஸ்பெக்டர் மேஜையின்மேல் இருந்த காகிதங்களைப் புரட்டிக் கொண் டிருந்தார். அருகே சென்று நின்று ஒரு 'சலாம்' அடித்தான் சோலையப்பன். தலையை ஆட்டினார் அவர். ஒரு நிமிஷம் சும்மா நின்றான் சோலையப்பன்.

''என்ன?'' என்றார் இன்ஸ்பெக்டர்.

''போன மாதம் . . பணத்தோடு பையைக் கொண்டு வந்து கொடுத்தேனே . . அது என்ன . . ''

''ஓகோ . . பத்தாயிரம் ரூபாயோடு ஒரு பையை . . ''

''பத்தாயிரம் இல்லீங்க . . பத்தாயிரத்து அஞ்சு . . ''

'' . . . . . . ''

''ஏங்க, சொந்தக்காரங்க யாராவது வந்து வாங்கிக்கிட்டாங்களா?''

''இன்னும் இல்லே . . ''

''அப்போ . . இனிமே எனக்குத்தானே அது சொந்தம்? கொடுக்கலாங்களா?''

வேறு ஒன்றுமே பேசவில்லை இன்ஸ்பெக்டர். டிராயரைத் திறந்தார்; அதிலிருந்த அவன்

கொடுத்த தோல்பையை மேசையின்மேல் எடுத்துப் போட்டார். அவசரம் தாங்கவில்லை சோலையப்பனுக்கு. அதை அப்படியே வாரி எடுத்துக்கொண்டு இரண்டடி பின்னுக்கு நகர்ந்தான். ''ஓய் கருணாகர நாதரே! வாரும் ஐயா, வெளியே!'' என்று குரல் கொடுத்தார் இன்ஸ்பெக்டர்.

''இவன்தான் . . .இவனேதான். அந்த ஆட்டோ ஆசாமி இவனேதான், சார்!'' என்று உரக்கக் கூவிக்கொண்டே வெளியே வந்தார் வியாபாரி கருணாகரநாதர்.

அவரைப் பார்த்ததுமே அசந்து போனான் சோலை.

''யாருங்க . . இ வ ரு . . ஏதோ உளர்றாரு . . புரியலையே?'' என்று சமாளித்து விடலாமென்று நினைத்தான் சோலையப்பன்.

''அன்னிக்கு உன் ஆட்டோ ரிக்ஷாவிலே பணத்தைத் தொலைச்சது இவர்தானுன்னு சொல்றாரு . . நீ ஆளையே புரியலைங்கறியே . .''

''சும்மாவாவது இதை வாங்கிக்கணும்னு சொல்றாரு. அப்படியே இவரு தொலைச்சிருந்தாலும், அவர் விட்டது இல்லை இது . .''

''உனக்கு எப்படித் தெரியும்?''

சோலையப்பன் வாயைத் திறந்தான். சொல்ல நாத் துடித்தது. ஆனால் 'டக்'கென்று வாயை மூடிக் கொண்டான். வாயைத் திறந்தால் விஷயங்கள் வெளி வந்து விடும். தான் மாட்டிக்கொண்டால்?

''என்னப்பா, சோலை, நிறுத்திட்டே . . நான் சொல்லட்டுமா . . 'இவர் தொலைத்தது எல்லாம் நூறு ரூபா நோட்டுக்கள். அந்தப் பையே வேறே . .' என்று சொல்லப் போகிறாய் அதுதானே?''

சோலையப்பன் முகத்திலே ஆச்சரியம் தோன்றியது. 'இவருக்கு எப்படித் தெரிந்தது?'

இன்ஸ்பெக்டர் தொடர்ந்தார்.

''நீ சாமர்த்தியமாகத்தான் வேலை செய்திருக்கிறாய். ஆனால் . . ஒரு தவறு செய்துவிட்டாய்.'

சோலையப்பனுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. இன்ஸ்பெக்டரையே எரித்து விடுவது போல் பார்த்தான்.

''கைக் குட்டையோ புத்தம் புதிது; சைனா பஜார் சரக்கு. ஒரு பெரிய வியாபாரி அவ்வளவு மட்டமான $5\frac{1}{2}$ ரூபாய் தோல் பையையா வைத்திருப்பார்? தினசரி பத்திரிகை மாலைப் பதிப்பு இரவு 7-15-க்குத்தான் கடைகளுக்கு வருகிறது. அந்தச் சமயத்தில் இவர் ரெயிலில் இருந்திருப்பார். சாயங்காலமே விட்டுவிட்ட இவர் பையில் அந்த ஆங்கிலத் தினசரியும், வியாழன் இரவு $8\frac{1}{2}$ மணிக்கு மேல் கடைக்கு வரும் வாரப்பத்திரிகையும் எப்படி வரும்? நீ புத்திசாலிதான் . . தொழிலுக்குப் புதிசு . . சிறு தவறுகள் உன்னைக் காட்டிவிட்டன . . ''

தாண்டிக் குதித்தான் சோலையப்பன். ''இந்தப் பணப்பை அவருதுன்னா சொல்றீங்க? அப்படி யானா இந்தாங்க . . உங்களுக்கே நிச்சயமா இருந்தா கொடுத்திடுங்க'' என்று பணப் பையை மேசையின் மேல் எறிந்தான் சோலையப்பன். அங்கிருந்து நகரத் தொடங்கினான். பக்கத்தில் நின்ற போலீஸ்காரர்கள் அவன் தோளின்மேல் கையை வைத்தார்கள்..

''நீ முதலிலேயே 'பிளான்' பண்ணித் தக்க ஏற்பாட்டுடன் திரும்ப 'அடித்துக்கொண்டு' போய் விடலாமென்று நினைத்தாய். நீயே வந்து மாட்டிக்கொள்வாய் என்று தெரிந்துதான் இவ்வளவு நாள் காத்திருந்தேன். உம் . . சோலையை நம் 'விருந்தாளிகள்' அறைக்கு அழைத்துச் செல்லுங்கள்'' என்று உத்தரவிட்டார் இன்ஸ்பெக்டர்.

சோலையப்பன் திமிறினான்.

''இல்லவே இல்லை . . பொய் . . புளுகு . . தப்பு . . அவன் அயோக்கியன் . .'' என்றெல்லாம் கத்தினான் . . ஊஹூம் . . .போலீஸ்காரர் இருவரும் அவனை உள்ளே அழைத்துச் சென்றார்கள்.

திட்டங்கள் தவிடு பொடியாக, மனக்கோட்டைகள் இடிந்து விழ . . மனம் சோர்ந்து கம்பிகளுக்குள்ளே உட்கார்ந்தான் சோலையப்பன். அவன் 'ஆட்டோ' போலீஸ் ஸ்டேஷன் வாசலில் தனியாக நின்று கொண்டிருந்தது.

Edited Printed and Puplished By N. Ramaratnam,
At M. L. J. Press Private Ltd., Madras-4.
Associate Editor: R. Venkataraman.

# கண்ணன்

## 15-11-'59 இதழில்

என். எஸ். எஸ். எழுதிய

# நாலு சகோதரர்கள்

அற்புதமான குறுநாவல் ஆரம்பமாகிறது!

## தெரிந்தால், சொல்லுங்கள்!

### விடைகள்

பக்க எண்

8. முடியும்; சினிமா அல்லது நாடகத்தில் அண்ணனாக நடிப்பவர் இளையவராக இருக்கக்கூடும்
26. 'மேதை' (மே, தை.)
91. கயிறு வடம் இழுத்தல் (Tug - of - war)
120. மூச்சு வாங்குவதும், மூச்சு விடுவதும்தான்
126. பானை

—பி. கே. சாமி; தூத்துக்குடி.

## கண்ணன் கிளைக்கழகம்

காரிமங்கலம்

| | |
|---|---|
| உபதலைவர்கள்: | டி. டி. ஜயபிரகாஷ் |
| | கே. ஜி. ஜகதீசன் |
| செயலாளர்: | கே. எஸ். சந்தோஜி |
| பொறுப்பாளர்கள்: | கே. எம். நடேசன் |
| | எம். நரசிம்மன் |

ஆறுபேர்கள் கொண்ட செயற்குழு ஒன்று அமைக்கப் பட்டுள்ளது. 'முல்லை' என்ற கையெழுத்துப் பத்திரிகை (திங்கள் ஏடு) ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது: கதை, கட்டுரைகள் அனுப்பும் விலாசம்: T. D. ஜயபிரகாஷ், கோயில் தெரு, காரிமங்கலம் அஞ்சல், சேலம் ஜில்லா.

(Regd. as a Newspaper in Ceylon) **Regd. No. M. 5542**

# குடும்பப் பத்திரிகைகள்



**கலைமகள்** - சுவாரஸ்யமாகவும் உபயோகமாகவும் அலுப்பின்றி நீண்ட நேரம் படிக்கக்கூடிய கதைகளும் கட்டுரைகளும் புதிய தொடர்கதைகளும் நிறைந்தது. தமிழர்கள் எங்கிருந்தாலும் தமிழ் மணத்தை அவர்களுக்கு வாரி வழங்கும் மாதப் பத்திரிகை.

**வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட** ரூ. 7-50
வெளிநாடுகளுக்கு (தீபாவளி மலர் உள்பட) ரூ. 9-50

**மஞ்சரி** - நாட்டின் பல மொழிகளில் வெளியாகும் நூற்றுக்கணக்கான பத்திரிகைகளிலிருந்து சிறந்த விஷயங்களைப் படித்து, ஆராய்ந்து, பற்பல சுவையும் பயனும் மிகுந்த கட்டுரைகளைத் தாங்கி வருகிறது. ஒவ்வோர் இதழிலும் ஒரு முழுப் புத்தகச் சுருக்கமும் வருகிறது.

**வருஷ சந்தா (ஆண்டு மலர் சேர்ந்து)** ரூ. 4-75
வெளிநாடுகளுக்கு (ஆண்டு மலர் சேர்ந்து) ரூ. 5-50

**கண்ணன்** - ஐந்து முதல் பதினைந்து வயது வரையுள்ள உங்கள் செல்வக் குழந்தைகளைக் களிப்பில் ஆழ்த்தும் கதைகளும் தொடர்கதைகளும் அறிவை வளர்க்கும் விசேஷப் பகுதிகளும் அவர்களுடைய திறமையைத் தூண்டும் அம்சங்களும் நிறைந்தது.

**வருஷ சந்தா, தீபாவளி மலர் உள்பட** ரூ. 4/-
வெளி நாடுகளுக்கு (தீபாவளி மலர் உள்பட) ரூ. 5/-

மூன்று பத்திரிகைகளின் சந்தா, தீபாவளி மலர்கள் உள்பட ரூ. 16-25 ஆகிறது. மூன்றும் சேர்ந்த குடும்பச் சந்தாவுக்கு ரூ. 14-25 தான்.

வெளி நாடுகளுக்கு, மூன்றும் சேர்ந்து ரூ. 20/- ஆகிறது. குடும்பச் சந்தாவுக்கு ரூ. 18/- தான்.

**கலைமகள் காரியாலயம், சென்னை - 4.**